உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 12 சனிக்கிழமை (26.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 212

# புலிகள் சரணடையும் தகவல் அரசுக்கு ஏற்கனவே தெரியும்!

## தாம் அறிவித்ததாகக் கூறுகிறார் சொல்ஹெய்ம்



-நோர்வேயிலிருந்து உதயன் பிரதிநிதி அற்புதன்-

ஒஸ்லோ, ஜூன் 26

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் - மே மாதம் 17ஆம் திகதி - விடுதலைப் புலிகளின் நடேசன், புலித்தேவன் போன்ற தலைவர்கள், தாம் சரண் அடைய ஏற்பாடு செய்துதரும்படி என்னிடம் கேட்டார்கள்.

அதற்கு நான் "உங்களுடைய முடிவு, காலம் பிந்தியது. இருந்தாலும் நீங்கள் வெள்ளைக் கொடியுடன் சென்று படையினரிடம் சரண் அடையுங்கள்" என்று கூறினேன்.

அதற்கு முன்னதாக புலிகள் சரணடைவது குறித்து இலங்கை அரசுக்கும் தெரியப்படுத்தி இருந்தேன்.

அவர்கள் சரண் அடைவதற்கான ஒழுங்குகள் குறித்து இலங்கை அரசுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்பதனை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும், விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு சமாதானப் பேச்சுக்கான அனுசரணையாளருமான எரிக்சொல்ஹெய்ம்.

இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களிடம் அவர் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழுவிடமிருந்து நன்மைகளை பெற்றுக்கொள்ள அமெ. ஆலோசனை

கொழும்பு, ஜூன் 26

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிடம் இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கைக்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் மார்க் டோனரே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை அரசு ஐ.நாவின் நிபுணர் குழுவின் நியமனத்தைக் கண்டித்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் தாக்குதல் அச்சம்!

கொழும்பு, ஜூன் 26

சார்க் உள்துறை அமைச்சர்களின் கூட்டம் பாகிஸ்தானில் இன்று நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தைக் குழப்பும் நோக்கத்துடன் பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள், இந்தியாவில் தக்குதல் நடத்தலாம் என்று புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

முக்கியமான இடங்களான சுற்றுலா நிலையங்கள், பஸ் நிலையங்கள், ரயில்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிப்பை இடதுசாரிக் கட்சிகள் எதிர்க்கின்றன! ஹெல உறுமய நிபந்தனை விதிக்கிறது!!

கொழும்பு, ஜூன் 26

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதேவேளை, தனது நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் ஆதரவளிப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கும், ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்குமேல் பதவி வகிக்கக்கூடிய வகையில் அரசமைப்பைத் திருத்துவதற்கும் ஐக்கிய மக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரே குரலில் ஒலிக்கத் தமிழ்க் கூட்டமைப்பும் அழைக்கப்படும்

### அமைச்சர் தேவானந்தா தகவல்

கொழும்பு, ஜூன் 26

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், நாளாந்தப் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கவேண்டும் என்ற நோக்குடன் தமிழ்க் கட்சிகளின் கூட்டமொன்று ஜூலை முதலாம் திகதி கொழும்பில் நடைபெறும். அந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்படும். - இப்படி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றுத்தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பொது இணக்கப்பாட்டுக்கு அது வரவேண்டும். கடந்தகால உயிரிழப்புகளுக்கும், சொத்து அழிவுகளுக்கும் காரணம் தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக செயற்பட்டதே ஆகும் எனவும் அமைச்சர் சொன்னார். (24ஆம் பக்கம் பார்க்க)



தேரில் ஆரோகணித்து அருள்காட்சி வழங்கும் நயினை நாகபூஷணித் தாய்

ஓம் சக்தி போற்றி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

பூங்காவன உற்சவ விஞ்ஞாபனம் 27.06.2010 ஞாயிறு

மாலை 5 மணிக்கு அபிஷேகம், மாலை 5.30 மணிக்கு மூலஸ்தான பூஜை
மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
மாலை 6.30 மணிக்கு பூங்காவன மண்டபத்தில் எழுந்தருளள் தொடர்ந்து விஷேட வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூ மணவறையில் அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும்.

அன்றையதினம்

1. ஈழ நல்லூர் உதயசங்கர் குழுவினர் (கல்வியங்காடு)
2. அளவெட்டியூர் நாதஸ்வர வித்துவான் எம்.பி. பாலகிருஸ்ணன் குழுவினருடன் தென் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர வித்துவான் பழனி அவர்களும் தவில் வித்துவான் திருச்சேரை ஸ்ரீனிவாசன் அவர்களும் பங்குபற்றுவார்கள்.
3. வசந்தன் குழுவினர் (சாவகச்சேரி)
4. தவில் வித்துவான் காரையம்பதி என்.கே. வீரச்சாமி அவர்களும் இன்னும் பல கலைஞர்கள் பங்கு பற்றும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

தேவஸ்தானமும் உபயகாரரும்.

STUDY & WORK IN UK

AUG. & SEPT. 2010 INTAKE

யாழ் மண்ணில் CBC

UK Highly Trusted - "A - Rated" Government & Private Collegeகளில் உயர்கல்வியை தொடரும் சந்தர்ப்பம் உங்கள் காலடிக்கு கொண்டுவருகிறது Colombo Business College.

Walk in Interview....for banff and buchan college

13 வருடங்களுக்கு மேல் தலைநகர் கொழும்பில் இயங்கி வரும் CBC முதன் முறையாக யாழ் மாணவர் நலன் கருதி அரச மற்றும் தனியார் வெளிநாட்டு பல்கலைக்களகங்கள் மற்றும் College போன்றவற்றிற்கான மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முக தெரிவினை நடாத்துகிறது.

தலைநகரில்...

Approved By Foreign Colleges & Universities

COLOMBO BUSINESS COLLEGE
379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130
E-mail: colbuco@yahoo.co.in Web site: cbceducation.com

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

Minimum Qualification - G.C.E (O/L)

FINANCIAL SPONSORSHIP
ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்: 0714 550055
SAVE TIME ! & SAVE MONEY !

யாழ்ப்பாணத்தில்..
Knowledge Universe,
No: 75, Temple Road, Jaffna
என்ற இடத்தில் இம்மாதம் 26, 27ம் திகதிகளில் August & Sept. 2010 Intakeக்குக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறும்

Member of UCAS (One & Only Private College in Sri Lanka)



எதிர்பாராத புதிய அனுபவமும் அறியவாய்ப்பும் STUDY + WORK OFFER


200க்கும் அதிகமான பாடநெறிகள் உங்கள் விருப்பம்போல் பாடநெறிகளை தெரிவுசெய்யலாம். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க விரும்புவோர் 0714938848 / 0714550055 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு SMS செய்து அல்லது Call செய்து உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



அம்பாள் தேருக்கு எழுந்தருளும்போது...



அம்மன், பிள்ளையார், முருகன் தேரில் ஆரோகணிக்கும்போது...



பறவைக் காவடி எடுத்து நேர்த்தியைப் பூர்த்திசெய்யும் பக்தர்கள்



அங்கப்பிரதட்சணம் செய்யும் பக்தர்கள்

# நயினையில் கடலெனத் திரண்டிருந்த பக்தர்களுக்கு நாகபூஷணி அம்மன் தேரில் வலம் வந்து அருள் காட்சி

நயினாதீவு, ஜூன் 26

பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாவில் நேற்று இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் கூடிய பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷம் வானைப் பிளக்க அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள்காட்சி வழங்கினார்.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் நேற்று முன்தினம் மாலையில் இருந்து ஆலயத்துக்கு திரண்டு வந்தவாறு இருந்தனர். தெற்கில் இருந்து பெரும்பான்மை இனத்தவரும் தேர்த் திருவிழாவில் பங்கேற்றனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று அம்மன் 9 மணிக்கு தேரில் எழுந்தருளி 10 மணிக்கு வீதியில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் காட்சி கொடுத்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பெருந்திரளான பக்தர்கள் நேற்றைய தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையான ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண்கள் கற்பூரச் சண்டி ஏந்தியும், அடி அழித்தும் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்தனர்.

பொலிஸார், சாரணர்கள் மற்றும் தொண்டர்கள், போக்குவரத்து, பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அங்கு கூடிய பக்தர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரச அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்தனர். அமுதசுரபி அன்னதான சபையினரின் மடம் உட்பட பல மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது. (ஓ-1-111)

# மலேஷிய முகாமின் ஈழத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டது ஐ.நா.!

கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் முகாம்களில் இருந்து தப்பித்துச் சென்று மலேசிய இருட்டறை முகாம்களில் தவித்த ஈழத்தமிழர்களை அதிகளாக ஏற்றுக்கொண்டது ஐ.நா.

மலேஷிய படையினரால் கைதுசெய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் 75 பேரையும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று தனித்தனி முகாம்களில் அடைத்தனர்.

இதைக் கண்டித்து பெண்கள் உண்ணாவிரதம் இருந்தனர். இந்த விவகாரம் அறிந்து உலகெங்கும் வாழும் தமிழுணர்வாளர்கள், 75 பேரையும் அவர்கள் விரும்பும் இடத்தில் தங்க வைக்கவேண்டும்.

மீண்டும் இலங்கைக்கே அனுப்பி வைக்கக் கூடாது என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஐ.நாவின் அதிகாரிகள் முதற்கட்டமாக 61 ஆண்களுக்கு மட்டும் அகதிகளுக்கான அனுமதி அளித்துள்ளனர்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இன்னும் சில தினங்களுக்குள் அனுமதி கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சி)


## கௌரவ திருமண சேவை

Doctors, Engineers உட்பட விரும்பும் மணமக்கள் தேவைகளுக்கு: 0212229334. கமிஷனை முதன்மைப் படுத்தாத கௌரவ திருமண சேவை. விபரங்கள் நேரிலாகும். 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம்.



## சிவாச்சாரியார் தேவை

டென்மார்க் நாட்டிலே கேர்ணிங் என்னும் நகரிலே அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு ஒரு சிவாச்சாரியார் தேவையாக வுள்ளது. தங்குமிடவசதி உட்பட அனைத்தும் செய்து தரப்படும். சம்பளம் போன்ற விவரங்கள் விண்ணப்பத்தின்போது பேசித் தீர்த்துக் கொள்ளப்படும். முறையாகக் குருகுலத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும். ஏற்கனவே உற்சவங்கள் நிகழ்த்திய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: 24.06.2010 இல் இருந்து 24.07.2010 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டி முகவரி:
Hindu Cultural Research & Information Center
Post-box-317
7400 Heming, Denmark
மின்னஞ்சல்: pillayar@hotmail.com
தொலைபேசி இல: 0045 97701498 அல்லது 0045 28639304


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் செட்டியார் சுந்தரலிங்கம் செட்டியார்



வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பரம்பரை தருமகர்த்தாவும், உரிமையாளருமாகிய அமரர் கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார் - அமரர் கண்ணாம்பாள் ஆச்சி ஆகியோரின் அருமைப் புதல்வரும், அமரர் சுவாமிநாதபிள்ளை - மங்களாம்பாளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவருமான வைத்திலிங்கம் செட்டியார் சுந்தரலிங்கம் செட்டியார் நேற்று (25.06.2010) வெள்ளிக்கிழமை தென்னிந்தியாவில் தஞ்சாவூரில் காலமாகிவிட்டார்.

அன்னார் மீராக்கண்ணம்மாளின் அன்புத் தந்தையும், ராமசுப்பிரமணியத்தின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, ஹரிகரன் ஆகியோரின் தாத்தாவும், மங்களாம்பாள், அமரர்களான கந்தப்பச் செட்டியார், முத்துக்காய ரோகணம் செட்டியார், ஜெகதாம்பாள், தையலாம்பாள் ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2010) சனிக்கிழமை இந்தியாவில் தஞ்சாவூரில் மு.ப.11 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார்,
கந்தப்பச்செட்டியார் இரமேஷ் செட்டியார்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்.

(99946)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 1944 . 03 . 13



உதிர்வு 2010 . 05 . 27

கடந்த 27.05.2010 அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் வைரவமுத்து மாணிக்கவாசகர் (மெக்கானிக்)

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.06.2010) சனிக்கிழமை காலை 6 மணியளவில் தெணியம்மன் கோயில் மடத்தில் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**தெணிப்பிள்ளையார் கோயிலடி,**
**2ஆம் குறுக்குத்தெரு, கொட்டடி,**
**பருத்தித்துறை.**

(99945) **குடும்பத்தினர்.**


# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## கொழும்புக்கிளை நூற்றாண்டு விழா

பெருமையுடன் வாழ்த்தும் தாய்

இன்று நூற்றாண்டு விழாக்காணும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையை சேயின் வளர்ச்சியில் உவகையுறும் தாயின் பாசத்துடன் வாழ்த்துவதில் மகிழ்கிறோம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஓ, ஐரோப்பிய ஒன்றியமே...!
## உன்னால் என்ன செய்ய முடியும்...?...!

பொருளாதார வளம் குன்றிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு வரிச் சலுகை வழங்கும் அனுகூலமான திட்டமே ஜி.எஸ்.பி.பிளஸ் (Generalized System of Preferences) எனப்படும் திட்டம். வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு உதவ வேண்டும் என்பதனை இலக்காகக் வைத்து ஐரோப்பிய ஒன்றியம் இந்த நலத்திட்டத்தை சில ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

தனது இந்த விசேட திட்டத்தின் கீழ் பயன்பெறும் நாடுகள், சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே வரிச்சலுகையைப் பெற முடியும் என்பதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த வரிச்சலுகையை இலங்கை கடந்த பல வருடங்களாகப் பெற்று வருகிறது - அனுபவிக்கிறது. ஆனால் அண்மைக் காலமாக இலங்கையின் - இலங்கை அரசின் - செயற்பாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தை - அதன் பல நாடுகளை - அதிருப்தி கொள்ள வைத்து வருகின்றன. அதனால் வகுக்கப்பட்ட சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிடில் வரிச்சலுகையை நிறுத்தப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த பல மாதங்களாக எச்சரித்து வருகிறது.

மிக விசேடமாக - குறிப்பாக - மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை, அவை சார்ந்த விதிமுறைகளை பதவியில் உள்ள அரசாங்கம் உரியவாறு நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகிறது.

இலங்கைக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் - இன்னும் இரண்டு மாதங்களில் - முடிவடையப் போகிறது. அதன் பின்னரான ஆறு மாத தவணைக் காலத்துக்கு வரிச்சலுகையை நீடிப்பதற்கு, அதாவது 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான தவணைக்குத் தக்கவைக்க வேண்டுமானால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பதினைந்து நிபந்தனைகளை அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும். எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டும்.

இங்கேதான் பிறக்கிறது பிரச்சினை. (இதே பக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை வாசித்தறியலாம்)

அவற்றில் ஒன்றைத் தானும் நடைமுறைப்படுத்தும் எண்ணப்போக்கில் இலங்கை அரசாங்கம் இல்லை. இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும் அது தெரியும். அவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டு வாழ்க்கையின் ஓரத்துக்கே செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முழுமையாகவும் மிக விஸ்தாரமாகவும் தெரியும்.

* தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தின் மிகுதிப் பகுதியை நீக்கவேண்டும்.

- குறிப்பாக விசாரணைகள் இன்றித் தடுத்துவைத்தல், நடமாட்ட சுதந்திரக் கட்டுப்பாட்டை நீக்குதல் என்பன அரசுக்கு வேப்பங்காயாகக் கசப்பது ஒன்றும் புதியதல்ல.

* பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில பகுதிகளை அகற்றுதல்.

- இதற்கு அரசு ஒருபோதும் இணங்காது.

- அதனை இன்னும் பல வருடங்களுக்குத் தக்கவைப்பதற்கான பின்புலங்கள், பின்னணிகளைப் பாதுகாப்பு அமைச்சு மேலும் சாந்து பூசிப் பலமாக்க முயற்சித்து வருகிறது .

- வெளிநாட்டுப் பயிற்சியின் பின்னர், விடுதலைப் புலிகள் கடல்வழி வந்து தாக்கும் வாய்ப்பு - போன்ற அரச தரப்பினரின் கூற்றுக்கள் இதனை ருசுப்படுத்துகின்றன.

* செஞ்சிலுவை சர்வதேசக்குழு போன்ற சுயாதீன மனிதாபிமான அமைப்புகள் கண்காணிப்பு நோக்கத்துக்காக தடுப்பு முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதித்தல்.

- கடந்த ஒரு வருடகாலமாக இது குறித்து பல தரப்புகளும் வைத்த கோரிக்கை கிணற்றில் போட்ட கல்லாக அமிழ்ந்து போயிற்று.

* அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள், ஏனையோரின் பெயர்ப்பட்டியலை பிரசுரித்தல் அல்லது அவர்களின் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

- இதுவும் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மனித உரிமை அமைப்புகளால், நாடாளுமன்றில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பிக்களால் வலியுறுத்தப்பட்டும், அரசிடம் இருந்து எதுவித பதிலும் இல்லையே....!

* ஊடகவியலாளர்கள் எவ்வித தொந்தரவும் இன்றி தமது தொழில்சார் கடமைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- சிறந்த செய்தியாளர்களுக்கு தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சு விருது வழங்கும் புதிய நடைமுறை குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

- அது எந்த லட்சணத்தில் அமையும். நேர்மையானதாக இருக்கும் என்பதற்கு இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் நாட்டைக் காட்டிக் கொடுத்தது போலாகி விடும் என்று பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஹெகலிய கூறிவிட்டார்.

இதற்கு மேல், அரசாங்கம் கூட ஐரோப்பிய ஒன்றியத்தின் பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டாது என்பது முற்றும் நிச்சயமாகிவிட்டது...!

எதிர்க்கட்சியினரும், ஆடைத்தொழிற்சாலைகளிலும் ஏனைய பல உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான இந்த நாட்டுப் பிரஜைகளும், முறையே வாயைத் துணியிட்டுக் கட்டிக் கொண்டும் வயிற்றைக் கட்டிக்கொண்டும் அல்லாட வேண்டியதுதான்..!

ஐரோப்பிய ஒன்றியம் விதித்த நிபந்தனைகளை வாசிப்பதே வெட்கக்கேடான செயல் என்று முத்திரை குத்தப்பட்ட பின்னர் -

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, எதற்கு எடுத்தாலும் புலம்பெயர் தமிழர்களும் எதிர்க்கட்சியினரும் ''போடுதடிகள்'' ஆகிவிட்ட பின்னர் -

ஓ ஐரோப்பிய ஒன்றியமே! உன்னால் என்னதான் ஆகப்போகிறது...?

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நிபந்தனைகள்

கொழும்பு, ஜூன் 25

அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்குதல், தடுத்துவைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அவர்களின் பெற்றோருக்குத் தெரியப்படுத்துதல், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுதல் உள்ளிட்ட 15 நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு விதித்துள்ளது.

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள இந்த நிபந்தனைகளில் அதிகமானவை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடியவை என்றும், அவற்றை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டுள்ள 15 நிபந்தனைகளும் வருமாறு:-

* சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கைக்கான பல மதிப்புக் குறைப்புகளை மேற்கொள்ளல்.

* அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

* தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தின் மிகுதிப் பகுதியை நீக்குதல். குறிப்பாக விசாரணைகளின்றித் தடுத்து வைத்தல், நடமாட்ட சுதந்திரக் கட்டுப்பாடு விதித்தல் ஆகியவற்றை நீக்குதல்.

* பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சில பகுதிகளை அகற்றுதல்

* பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 8 ஆம் பிரிவிலுள்ள விலக்கல் கூற்றையும் 9 ஆம் பிரிவிலுள்ள பாதிப்பின்மை கூற்றையும் நீக்குதல்.

* சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்படுமிடத்து உடனடியாகச் சட்டத்தரணி ஒருவரைச் சந்திப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதான உத்தேச திருத்தத்தைக் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டத் தொகுப்பில் மேற்கொள்ளல்.

* ஐ.நா. மனித உரிமைகள் குழுவுக்கும், சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவுக்கும் தனிநபர்கள் முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கேதுவான சட்டவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

* தனிப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் அபிப்பிராயங்களை ஏற்றுச் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

* இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ள ஐ.நாவின் விசேட குழுக்களுக்கு அனுமதியளித்தல்.

* காணாமற் போனோர்களுக்கான ஐ.நா. செயலாற்றுக் குழு முன் தற்போது நிலுவையிலுள்ள குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலுள்ள தனிநபர் பிரச்சினைகளுக்கான பதில்களை வழங்குதல்.

* 2008 ஆம் ஆண்டின் விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான இறுதி அறிக்கையைப் பிரசுரித்தல்.

* அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர்களின் பெயர்ப் பட்டியலைப் பிரசுரித்தல் அல்லது அதனை அவர்களின் குடும்பத்துக்கு கிடைக்கச் செய்தல். அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள எந்த நபரையும் விடுவிப்பதற்கான அல்லது அவர்களை விசாரணைக்கு உட்படுத்தி தடுத்து வைத்திருத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

* செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற சுயாதீன மனிதாபிமான அமைப்பொன்று கண்காணிப்பு நோக்கத்துக்காக சகல தடுப்பு முகாம்களுக்கும் நுழைவதற்கான அனுமதியை வழங்கல்.

* தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதனைத் தாமதமின்றி அமுல்படுத்துதல்.

* ஊடகவியலாளர்கள் எவ்வித தொந்தரவுமின்றி தமது தொழில்சார் கடமைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 15 நிபந்தனைகளையுமே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு விதித்துள்ளது. (சி)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஏற்று நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்
## அவற்றை வாசிப்பதே வெட்கக்கேடு என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூன் 25

ஐரோப்பிய ஒன்றியத்தின் முறையற்ற நிபந்தனைகளுக்கு அடிபணிந்து 'ஜி.எஸ்.பி. பிளஸ்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு நாட்டைக் காட்டிக்கொடுக்க அரசு தயாரில்லை. அந்த நிபந்தனைகள் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, மனோகணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோரின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டவையாகும். புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் இதன் பின்னணியில் இருக்கின்றன. - என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் முறையற்றவை. அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டும், பயங்கரவாதச் சட்டத்தின் 11, 12,13 சரத்துகளை நீக்கவேண்டும் என்ற நிபந்தனைகள் உட்பட எமது நாட்டுக்கு விரோதமான பல நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் வழமைக்கு மாறானவை. வழமைபோல் ஐரோப்பிய ஒன்றியம் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை வழங்குவதற்கு தொழில் சட்டங்கள் தொடர்பான நிபந்தனைகளையே விதிப்பது வழக்கம். ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்க்கட்சிகள், புலம் பெயர் தமிழ் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரல்களுக்குட்பட்டு வழமைக்கு மாறான நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகளை ஏற்பது மட்டுமல்ல, இந்த நிபந்தனைகளை வாசிப்பதே வெட்கக்கேடான விடயம். இது குறித்து இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் வெட்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஆவேசமாகத் தெரிவித்தார். (சி)

# காங்கேசன் சிமெந்து நிறுவனம் குறித்து ஆராய இந்தியப் பொறியியலாளர் குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்தியாவின் ஆறுபேர் அடங்கிய பொறியியலாளர் குழு, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து நேற்று அங்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளது.

இந்தக் குழுவுடன் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியவற்றின் புதிய தலைவர் தேசமான்ய எஸ்.ஜே.பரணகமவும் அங்கு சென்று நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள பழைய தொழில் நுட்பத்திலான இயந்திர சாதனங்களுக்குப் பதிலாக நவீனரக இயந்திரங்களைப் பொருத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. ஆசியாவிலேயே பெரிய தொழிற்சாலையாக இயங்கிய காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மூலம் முன்னர் நாளொன்றுக்கு ஆயிரத்து அறுநூறு மெற்றிக் தொன் சிமெந்து உற்பத்தி செய்ய முடிந்தது. எனினும் அவ்வாறான அளவில் தற்போது உற்பத்தி செய்வது சாத்தியமில்லை. எனவே நாளொன்றுக்கு சுமார் 300 மெற்றிக்தொன் சிமெந்தினை உற்பத்தி செய்யக்கூடிய செயற்திறன் கொண்ட இயந்திரங்களைப் பொருத்தி முதற்கட்டமாகத் தொழிற்சாலையை உடனடி யாக இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

இந்தக் குழுவுடன் காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அங்கு சென்றிருந்தனர். (50-14)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 13 | 27.06.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : பிரதமை |
| | மாலை 06.31 வரை |
| நட்சத்திரம் | : பூராடம் |
| | பி.இ. 12.29 வரை |
| சுபநேரம் | : 08.55 - 10.25 |
| ராகுகாலம் | : 04.25 - 05.55 |

# சங்கிலியை அபகரித்த திருட்டுக் கோஷ்டியை கைதடி இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர்!

நாவற்குழி, ஜூன் 26

கைதடி வடக்கு கயிற்றசிட்டி முருகன் கோயிலின் தேர்த்திருவிழாவன்று பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்த கோஷ்டி ஒன்று கையும் களவுமாகப் பிடிபட்டது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது :-

தேர்த்திருவிழாவன்று வசந்த மண்டபப் பூசையின்போது சன நெரிசலைப் பயன்படுத்தி பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைக் குறித்த கோஷ்டியினர் அறுத்தெடுத்தனர்.

பின்பு அதனைக் கோயிலுக்கு வெளியே உள்ள கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'மினிகோப் சிற்றிக்கு' அருகாமையில் புதைத்து விட்டு வந்தனர்.

மீண்டும் ஒரு பெண்ணின் சங்கிலியை அறுக்க முற்பட்டபோது பக்தர்கள் கண்டு கொள்ள சடாரென்று வெளியே சென்று ஓட்டோ ஒன்றைப் பிடித்துத் தப்பி ஓடினர். துரிதமாகச் செயற்பட்ட இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஓட்டோவைத் துரத்திச் சென்றனர்.

கைதடி மத்தி குமரன் நகரில் இராணுவ மினி முகாமுக்கு முன்பாக வைத்து ஓட்டோவை நிறுத்தினர். அப்போது [illegible] நடுத்தர வயதைக் கடந்த ஓர் பெண்ணும், இளவயது பெண்ணும், இளைஞரும் கீழே இறங்கினர். சடாரென இளைஞன் கைதடிச் சந்தியை நோக்கி ஓடத்தொடங்கினார்.

ஓட்டோ உரிமையாளர் கைதடியைச் சேர்ந்தவராகையால் அவர் இராணுவத்துடன் சேர்ந்து ஏனைய இருவரையும் தடுத்துவைக்க, ஓடிய இளைஞனை ஊரவர் கலைத்துப் பிடித்தனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு உடன் தகவல் கொடுக்கப்பட அவர்களும் விரைந்து வந்தனர். சந்தேக நபர்களை பொலிஸார் வாகனத்தில் ஏற்றித் தேர்த்திருவிழா நடைபெற்ற கோயிலுக்கு வந்தனர். பொலிஸாரின் விசாரணையில் அவர்கள் சங்கிலியைப் புதைத்த இடத்தில் இருந்து வெளியே எடுத்துக் கொடுத்தனர். சங்கிலியைப் பறிகொடுத்த பெண் அதனை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொண்டார்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். குறித்த திருடர்கள் வெளி மாவட்டம் ஒன்றிலிருந்து திருடும் நோக்குடன் வந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

துரிதமாகச் செயல்பட்ட இளைஞர்களின் முன்மாதிரியை ஊரவர்கள் பாராட்டினர். (க-207-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் மத்திய வங்கி அலுவலகம்; ஜூலை 4 இல் பஸில் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கை மத்திய வங்கியின் வடக்கு மாகாண அலுவலகம் எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த அலுவலகத்தை வைபவரீதியாகத் திறந்து வைக்கவிருக்கிறார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்வர்.

மாகாண மட்டத்தில் தனது பணியை விரிவுப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி தனது மாகாண அலுவலகங்களைத் திறந்து வருகிறது. அந்த வகையில் வடக்கு மாகாணத்துக்கான அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் வங்கிச்சேவை மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இந்த அலுவலகம் பணியாற்றும் என மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-1)


## வாழ்த்துகின்றோம்





மக்கள் வங்கியில் 38 வருடங்கள் சேவை
ஆற்றி ஓய்வுபெற்றுச் சென்ற
**உயர்திரு.எஸ்.ஹென்றி** அவர்களையும்
சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர்
**உயர்திரு.மா.சந்திரகாந்தன்**
அவர்களையும் ஓய்வு காலத்தில் எல்லா
சிறப்புகளும் பெற்று சுகமாக வாழ
வாழ்த்துகின்றோம்.

**லாலா சோப் ஸ்தாபனத்தினர்,**
**அச்சுவேலி.**
(சி/568679)



உ
சிவமயம்

### மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்: 2010.07.11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
இடம்: விநாயகர் மணிமண்டபம், மண்கும்பான்
தலைவர்: **திரு.செ.சிவலோகநாதன்** அவர்கள்

மேற்படி கூட்டத்துக்கு உபயகாரர்கள், வழிபடுவோர்கள், ஆலய நலன்விரும்பிகள் அனைவரும் உரிய நேரத்தில் சமுகமளித்து ஆலய முன் மொழிவுகளையும் வழங்குவதுடன் சிறந்த பரிபாலன சபையினரையும் தெரிவு செய்வதற்கு உதவுமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ம.மதிவர்ணன்
மண்கும்பான். செயலாளர், ஆலய பரிபாலன சபை.
(99928)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட அல்வை,
மாறாம்புலத்தைச்
சேர்ந்த செல்வி
**நவநீதமணி அபிஷா**
(யா/அல்வாய் வடக்கு
றோ.க.த.க. பாடசாலை)
**"CHANGE AGENTS FOR DISASTER RISK REDUCTION"**

என்னும் தலைப்பின் கீழ் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் நவநீதமணி அபிஷா அவர்கள் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக கொழும்பு ஜோன் டீ சில்வா மாநாட்டு மண்டபத்தில் 16.06.2010 அன்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இவர் கல்வியில் மேலும் மேலும் பல சிறப்புக்களைப்பெற்று பல்லாண்டுகாலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அன்புள்ள அப்புச்சி, அம்மம்மா, மாமாமார்கள், அத்தைமார்கள், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அன்ரா, கனடாத்தாத்தா.
(சி/568678)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### சின்னத்தம்பி இராசதுரை

தோற்றம்
22.02.1935

மறைவு
27.05.2010

கடந்த 27.05.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (25.06.2010) வெள்ளிக்கிழமை கீரிமலையில் இடம்பெற்றன. நாளை (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

72/4, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (99941) **குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், பொக்கட்பெனியர்பெண்நாயும், டாசோன் பெண் நாயும், பொமினேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான அதன் குட்டிகளும் அல்சேசன் குட்டியும் விற்பனைக்குண்டு.

லி.மயூரன், இல. 209, ராஜா ரீளாசா முன்பாக,
பலாலி றோட், கோண்டாவில்.

## விற்பனைக்கு

குமரன் டூரிஸ்ட் இன்னிலுள்ள பழைய தளபாடங்கள், மின்விசிறிகள் விற்பனைக்குண்டு. நேரில் சமுகம் தரவும்.

முகாமையாளர்,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, திருவாதிரை நட்சத்திரம், கிரகபாவம் 20, பட்டதாரி அரச உத்தியோகம் புரியும் சைவ போசன மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்பு: 0773271495**

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக்காணி பங்கு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அருகில்.

**தொடர்பு: 0777111400**

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P-4 Computers, Monitors மற்றும் கணனிப்பொருள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 13,250 ரூபா மட்டுமே)

தொடர்பு: **SKY Computer System**
162, Main Street, Jaffna.
(சென்.சார்ள்ஸ் பாடசாலைக்கு அருகில்)
T.P. 021 222 1417

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.**

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்
கோழிகள் விற்பனைக்குண்டு.
உயிருடன் 1 Kg 270/=
சுத்தம் செய்யப்பட்டது
1 Kg 450/=
மொத்தமாக கொள்வனவு
செய்பவர்களுக்கு விசேட
கழிவுண்டு.

★**விஜயகுமார்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## காணி விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 2 பரப்பு தனிக் காணி நன்னீர் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0776641076
0214921315

## குமரன் டூரிஸ்ட் இன்னிற்கு வேலையாள்கள் தேவை

* உதவியாளர் (Room boys)
* சலவைத் தொழிலாளி (படுக்கை விரிப்புகள் சலவை செய்வதற்கு)

30 இற்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராகவும், மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராகவும், உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் சமுகம் தரவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். முகாமையாளர்.

## கோட்டை புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா

* நற்கருணை விழா இன்று (26.06.2010) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
* திருவிழாத் திருப்பலி ஞாயிறு (27.06.2010) மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

புனிதரின் திருச்செருவப் பவனி ஞாயிறு மாலை 4 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இருந்து புறப்படும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(99938) பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம்

திதி: 26.06.2010

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சயந்தா நவநீதமணி
அவர்களின் அன்புத் தாயாரின்
31 ஆம் நாள் நினைவு தினத்தில்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, சக்கோட்டை.
(99926)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் தங்கராசா நிர்மலானந்தராசா

தோற்றம்
31.07.1953

மறைவு
27.05.2010

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே
எங்கள் ஆருயிர் தந்தையே
உம்மைப் பிரிந்து வாடி நிற்கின்றோம்.

இன்று (26.06.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லுவம்,
கரணவாய் மேற்கு. (99939)
பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை சிங்கராயர்



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான், 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிங்கராயர் 24.06.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பிறாஞ்சிகா (அன்னம்) தம்பதியினரின் அன்பு மகனும் சத்தியேஸ்வரியின் (சத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பூமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஞானம்மாவின் அன்புச் சகோதரனும் அலெக்சாண்டரின் அன்பு மைத்துனரும் ரஜனி, கிரிகரன், நிரஞ்சினி, யாழினி, நந்தினி, காலஞ்சென்றவர்களான சுகந்தினி, பவானி, பிரதாப் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரநாதன் (கரன்), சிவானந்தராசா, ஜீவகாந், கலைவாணி, ரவிராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் குருபரன், திவ்யா, கிருசன், நிறோஜன், சரணியா, சிலோஜன், ரினோச், கரிசனா, கர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் மலர், அன்ரன், யோசை றெஜியூட் ஆகியோரின் அன்புத் தாய்மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2010) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அல்லைப்பிட்டி உத்தரிய மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
மண்கும்பான் கிழக்கு,
வேலணை. (99933)
தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை குறித்து மத்திய வங்கியின் மதிப்பீடு அடுத்த மாதத்தில்

மூளாய்,ஜூன்26

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைகள் தொடர்பாக மத்தியவங்கி மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

யுத்தத்திற்குப் பிந்திய நிலையில் யாழ். மாவட்டத்தில் சமூக பொருளாதார நிலமைகள் எவ்வாறு உள்ளன என்பதை அறிந்து கொள்ளும் முகமாகவே இலங்கை மத்திய வங்கி மேற்படி மதிப்பீட்டை மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் மேற்படி மதிப்பீட்டுப்பணிகள் ஆரம்பிக்கப் படும். தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் வரை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இது தொடர்பான ஆய்வுகளும் தரவு சேகரித்தலும் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன,

யாழ்.செயலகமும் மத்திய வங்கியும் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் இச் செயற்றிட்டத்துக்கான ஆரம்ப நடவடிக்கைகள் அனைத்தும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

முதற்கட்டமாக இம்மதிப்பீட்டுப் பணிகளுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகவிரைவில் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(50-99)

## பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் க.பொ.த.உயர்தர வகுப்பு மாண வர்களிடையே (2011) நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

முடிவு விவரம் வருமாறு:-

முதலாம் இடம்-சி.பவித்திரா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), இரண்டாம் இடம்-ர.தர்சினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்-வ.பாமினி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.). (50-207)






தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் எஸ்.வி.டி.காமினி சமரநாயக்க, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி பேரானந்தராஜா நிகழ்த்துவதையும் சட்டத்தரணி இ.செல்வகந்தன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன், கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்த நான்கு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள் : ம.பா.மகாலிங்கசிவம்)*

## வாக்காளர் அட்டை மீளாய்வு தொடர்பாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுச் செயற்பாடு

மூளாய், ஜூன்26

வாக்காளர் அட்டவணையில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீளாய்வு தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு வலி.மேற்குப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பின்தங்கிய கிராமங்கள் பலவற்றில் வாக்காளர்களாக பதிவு செய்யப்படாத பொது மக்கள் பலர் இன்னமும் உள்ளனர். தகுதி இருந்தும் இதுவரை வாக்காளர் அட்டவணையில் இவர்களின் பெயர் இடம்பெறவில்லை.எனவே இவ்வருடம் இடம்பெறும் மீளாய்வின்போது இவர்களது பெயர்களை மேற்படி அட்டவணையில் இணைப்பதற்கும் இவர்களுக்கு வழங்கப் படவிருக்கும் படிவங்களை பிழையின்றி பூரணப்படுத்துவதற்கும் பொதுமக்கள் மத்தியில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகளுக்கான இல்லம் என்ற நிறுவனம் இவ்வாறான விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. தொல்புரம் மேற்கு, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் இதற்காக தொண்டர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (50-99)

## நவநாகரிக உடையணிந்து நயினாதீவில் நகைகளைக் களவாடிய ஐந்து பெண்கள்

### பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்

நல்லூர்,ஜூன் 26

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நாளான நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஐந்து பெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஆலயச் சுற்றாடலில் சங்கிலி, காப்பு போன்ற தங்க நகைகள் பரவலாகக் களவாடப்பட்டன. பெண் ஒருவர் தாலிக்கொடி ஒன்றைத் திருட முயன்றபோது கையும் களவுமாகப் பிடிபட்டார். இவரி டம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக குறிகாட்டுவானில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் சந்திர தெரிவித்தார்.

இந்த பெண்கள் அனைவரும் நவநாகரிகமாக உடையணிந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-111)

## நிலாக்காலம் கலை நிகழ்வில் இந்திய சங்கீத வித்துவான்

யாழ்ப்பாணம்,ஜூன்26

அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டம் மாதம் தோறு நடத்தும் நிலாக் காலம் கலை நிகழ்வுகளில் இந்த மாதத் துக்குரிய நிலாக் காலம் இன்று சனிக் கிழமை நடைபெறவுள்ளது.

சங்கீத பூஷணம் வி.கே.நடராஜா தலைமையில் மகாஜன சபை திருமண மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள கர்நாடக சங்கீத இசை வித்துவான் சங்கீதரத்தினா இளம் இசைத் தென்றல் நெடுமறம் முத்தழகின் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு அணி செய் கலைஞர்களாக வயலின் ஆ.ஜெயராமன், மிருதங்கம் கி.அனந்தகோபன், மோர்சிங் எஸ். செந்தூரன், கடம் சி.சிவசிவா, கெஞ்சிரா எஸ்.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மூத்த கலைஞர் தைரியநாதனின் நெறியாள்கையில் அளவை முருகானந்தன் குழுவினர் வழங்கவுள்ள 'பூதத்தம்பி' வரலாற்று இசை நாடகம் நடைபெறவுள்ளது. மறைந்த இசை நாடக கலைஞர் சின்னவி அருள் ஞாபகார்த்தமாக இந்த மாத நிலாக்காலம் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(50)

## இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு இன்று

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தன் மீது திருமதி உமாராணி பிறேமச் சந்திரனால் இயற்றப்பட்டு பிரபல தென்னிந்திய பின்னணிப் பாடகர் ரி.எம். எஸ்.




செல்வகுமாரால் பாடப்பட்ட இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் சு.வைகுந்தநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் வலி கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் இறுவட்டை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியார்; காட்டுமலைக்கந்தன் ஆலய பிரதமகுரு சி.சிவசுப்பிரமணிய ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

மதிப்பீட்டு உரையை விஜயரத்தினமும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் சிவானந்தமூர்த்தி, காரை எம்.பி அருளானந்தம், ஆசிரியர் சி.சிவலிங்கம், கலாவினோதன் கே. என்.கணபதிப்பிள்ளை, இ.சக்திகிரீபன் கிராம அலுவலர் பு.சாந்தரூபன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (201-11)

## வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள திண்மக் கழிவுகள் அகற்றப்படும்

மூளாய்,ஜூன் 26

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் மற்றுமொரு அம்சமாக இந்தத் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு வலி. மேற்குப் பிரதேச சபை தற்போது நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் ஆங்காங்கே பொதுமக்களால் சேகரிக்கப்பட்ட திண்மக் கழிவுகள் பல்வேறு இடங்களில் குவிக்கப்பட்டுள்ளன. இவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கின்றது.

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக்கான பிரதேச மட்டக் குழுவின் விசேட கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது இவ்விடயம் குறித்து விரிவாக ஆரயாப்பட்டது. இதற்காக மேலதிகமாக வாகனங்களை பணிக்கமர்த்திக் கொள்வது என்றும் இந்த நடவடிக் கையை தொடர்ச்சியாக குறிப்பிட்ட கால அட்டவணையில் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (50-99)



இலங்கையில் செயற்பட்டுவரும் றோட்டறக்ட் கழகங் களில் மூன்று கழகங்களுக்குச் சிறப்பான பணிகளை மேற்கொண்டமைக்கான மிகச் சிறந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இதில் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகமும் மேற்படி விருதைப் பெற்றுள்ளது. விருதுடன் மூன்று [illegible]சேர்ந்த உறுப்பினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மாற்றிய பாதை...

**உலக புகைத்தல் மற்றும் போதை ஒழிப்பு தினங்களையொட்டிய நிகழ்வு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல்2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது. யாழ்.மாவட்டப் புகையிலைக் குழு இதனை ஏற்பாடு செய்துள்ளது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

பொது இடங்களில் மதுப்பாவனை, புகைப்பிடித்தல் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர் சிகரட் விற்றல் என்பன தடையென்பது எமக்குத் தெரியும். அப்படியிருந்தும் இவற்றை அமுலாக்க நாம் தயாரில்லை. காரணங்களாக புறச்சூழல் பயம் நிறைந்ததாகவும், இவற்றின் பாதிப்பை உணரத் தவறியிருப்பதையும் சுட்டிக்காட்டலாம். புகைப்பிடிப்பதால் புகைப்பவருக்கு அருகில் நிற்பவர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றார்கள். தன்னுடலை மட்டுமல்லாது பிறரது உடலையும் தாக்கும் இச்செயலை எதற்கு ஒப்பிடுவது? தனது உடல் நலத்தை ஓரளவு காத்து, மற்றவர்களின் உடல் நலத்தையும் ஓரளவேனும் காக்க வேண்டும் என்ற சிந்தனைகள் முதலில் எங்களுக்குள் வரவேண்டும். ஆரோக்கியமான சிந்தனைகள் உள்ளிறங்கும்போது, ஆரோக்கியமான வெளியீடுகள் பரந்து நிரவும் என்பது வெள்ளிடைமலையாகும்.

ஆரோக்கியமான வளர்ச்சிக்கு நல்ல சிந்தனைகள் அத்திபாரமாக வேண்டும். பொது இடத்தில் மனிதர்கள் எப்படி நடக்க வேண்டும் என்பது நாகரிகத்தின் தோற்றுவாயாக உள்ளது. இது இப்படியிருக்க "பொது இடத்தில் மதுபாவனை, புகைத்தல் தடை என்றால், எங்கு பயன்படுத்துவது?" என ஒருவர் கேட்டார். பொதுமக்கள் கூடியிராத, பொது மகனுக்கு கேடு நேராத இடமாகத்தான் அது அமைய வேண்டும். யாழ்ப்பாணத்தில் மதுபாவனைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள நினைத்தால், கௌரவமாக இரகசியம் பேணலுடன் வழிகாட்டல் ஏற்பாடுகளை வழங்க யாழ். சுகாதாரத் திணைக்களம் ஆயத்தமாகவுள்ளது. எதிர்காலத்தில் தனித்துவம் பேணும் நடவடிக்கைக்காக தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக மனமாற்றத்தின் பின் தொடர்பு கொள்ளல் மூலம் தமது எதிர்காலத்தைப் பிரகாசமாக்கிக் கொள்ளலாம்.

எல்லா மனிதர்களும் மதுவைத் தொட்டதற்குக் காரணங்கள் தாராளமாகச் சொல்ல முடிகின்றது. இன்று திருமணத்தின் பின் குடிப்பவர்கள் பட்டியலில் இணைந்தவர்கள் கூடியுள்ளார்கள். குடும்பக் கருத்து வேற்றுமைகளை ஆற்றுப்படுத்தும் கருவியாக மதுவைப் பாவிக்கின்றார்கள். சமூக ஆய்வுகள் இவற்றைக் கோடிட்டுள்ளன. சமூகத்தில் சுலபமாகக் கிடைக்கும் ஒன்றாக மதுவும் புகையிலையும் இருப்பதுவும் காரணமாகக் கூறமுடியும். எத்தகைய பிரச்சினைக்கும் இதுதான் ஒரே தீர்வு என்ற "மாயை" நிலையும் மேலோங்கியுள்ளது. தாமும் அழிந்து தம்மைச் சுற்றியுள்ளவர்களையும் அழிக்கும் செயலில் இவர்கள் இறங்கியுள்ளார்கள் என ஏன் எண்ண முடியாது?

இன்றைய சமூகக் கட்டமைப்பு புகையிலைப் பாவனையாலும், மதுபாவனையாலும் உருக்குலையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் உணர்ந்தும் உணராமல் தொடர்ந்தும் இருக்க முடியுமா? வைகாசி 31 ஆம் நாள் உலக புகையிலை தினமாகும். இத் தினத்தில் இக் கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தினமாக உதயமாக வேண்டும். இந்த எண்ணக்கரு எம் அனைவருக்கும் உந்துதலாக அமைய வேண்டும் என்ற நோக்கில் ஒரு கணம் காரணங்களைக் கோர்வையாக்கிக் கொள்வோம்.

மதுவால் ஏற்படும் விளைவுகளை அறிந்த நாம், புகையிலைப் பயன்பாட்டால் ஏற்படும் கேடுகளை அறிந்துள்ளோமா என்பதை சிந்திக்க வேண்டும். மதுவின் விளைவுகளை உடனடியாகக் கண்டுவிடுகின்றோம். பிரச்சினைகள், அடிதடிகள், நிம்மதியின்மை, சிந்தனைகள்.... என அடுக்கிக் கொண்டே போகலாம். இதைவிட நீண்ட காலப்போக்கில் பிள்ளைகளின் எதிர்காலம் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. வறுமை சொந்தமாகி, வெறுமை மீதமாகி விடுகின்றது. "குடிகாரனின் குடும்பம்" என்ற செல்லப் பெயர் ஏற்படுத்தப்பட்டு விடுகின்றது. இவற்றை நாங்கள் அறிந்தும் அறியாதவர்களைப் போன்று வாழ்க்கையின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கின்றோம்.

குடிப்பதற்குப் பலர் காரணங்களைக் கூறுகின்றார்கள். அவர் கடுமையாக உழைத்த களைப்பில் குடிக்கத்தானே வேண்டும். மகப்பேற்றின் பின் மருந்தாகப் பத்தியம் என்ற பெயரில் மது பாவிக்கத்தானே வேண்டும்... என்று சமூகம் அங்கீகாரம் வழங்கப்பட்ட மாயைநிலை இங்குள்ளது. இவை சரிதானா? இவையெல்லாம் நிரந்தரத் தீர்வாக உள்ளனவா? சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் எங்கள் வசதிக்காகப் பரம்பரையாகச் சில வழக்கங்களைக் காவிச் சுமப்பவர்களாக இருக்கின்றோம். வளர்ச்சியுறும் சமூகத்தில் மூட நம்பிக்கைகளை இறக்கி விடவேண்டுமல்லவா? இப்படியான விடயங்களைப் பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது? எமது வாழ்வில் திருப்பு முனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சமூகத்தில் ஒருவர் புகைப்பிடித்தால், நாங்கள் விலகிச் சென்றுவிட்டு, திட்டித் தீர்க்கின்றோம். மாறாக அவ்விடத்தில் வைத்து, "தயவு செய்து இங்கு புகைக்காதீர்கள்" என்று சுட்டிக் காட்டலாமே! இத்தகைய சமூகமாற்றம் ஏற்படவேண்டும்.

வீடுகளில் உணவு சமைக்க வைக்கும் உலைகளுடன் ஒப்பிடுகையில், இன்று கசிப்புக்காக வைக்கும் உலைகள் போட்டியாகின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது. பிரச்சினைகளைத் தீர்க்க "உளவளத்துணை" என்ற மாற்றுத் தீர்வு சமூகத்தில் கைப்பிடிப்பார் இன்றி நிறைந்துள்ளது. இது பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது? உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக உள்ளபோது, எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்பது ஒரு சமூக உண்மையாகும்.

புகையிலை என்பது இன்று பணப்பயிராக இருக்கின்றது. படிப்படியாக இச்செய்கை குறைக்கப்பட்டு பணத்தை நிகராக அள்ளித்தரக் கூடிய முந்திரிகை போன்ற பயிர்களை மாற்றீடாகப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் நிச்சயமாக இதை முன் நகர்த்த முடியும். இங்கு சுழற்சி முறை பயிர்ச்செய்கையும் கைக்கொள்ளப்பட்டால், மண்வளமும் மீண்டெழும். மனிதனுக்கும் மண்ணுக்கும் பாதகம் செய்யாமல் இருப்பது மண்ணில் பிறந்த மனிதர்களின் கடமை அல்லவா?

மனிதர்கள் ஒன்றுகூடல்களிலும், திருமணத்திற்கு ஆயத்தமாகும்போதும், பிறந்த நாள்கள், இறந்த நாள்கள் என விழாக்களை முன்னிறுத்தி மதுவைப் பின் நிறுத்துகிறார்கள். சாராயம் படைக்காவிடில், ஆவி நடுவில் நிற்கும் என்கிறார்கள். இப்படியாக எங்கள் வாய்ப்புக்களுக்காக இன்னொன்றினைக் காரணங்காட்டுவது இனியும் சரிதானா? நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். தீர்மானிக்கும்போது, வாழப்போகும் குழந்தைகளைப் பற்றியும் எண்ணிப் பாருங்கள்.

மதுவுக்கும் புகையிலைக்கும் பயன்படுத்துவதில் கைதேர்ந்தவர்களாக்கும் கைங்கரியத்தில், புதிய ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும். எதிர்காலக் குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டும். கலாசார சீரழிவுகள் குறைக்கப்பட வேண்டும். இவற்றிற்குச் சிறுவர்கள் அனைவரும் பாதிப்புக்களை உணர்ந்தவர்களாகவும், சமூகத்தைக் காப்பவர்களாகவும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் மனநிலை, ஆழமாக சிந்திக்கும் தன்மையானதாக மாற்றப்பட வேண்டும்.

சமூகத்தில் உள்ளூர் தலைவர்கள் முன்வந்து, பிரச்சினைகளைக் கையாளும் போது , சமூகம் ஏற்றுக்கொள்ளும். உரும்பிராயில் சமூக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அன்பரின் முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் முன்னுதாரணமாகவுள்ளது. தனது சமூகத்தைப் போதையிலிருந்து மீட்டு, மறுசீரமைக்கும் பொறுப்பு ஒவ்வொரு உள்ளூர் தலைமை சமூக சேவகரின் கடமையாகும். அயல் கிராமத்துடன் ஒப்பிட்டு, போதையில் பாதி வாழ்வைச் செலவிட்ட கிராமம் மீண்டெழுதல் வேண்டும். இதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைதல் வேண்டும்.

த.கிருபாகரன்,
சமூகசேவை
திணைக்களம்.

## வாசகர் திருமுகம்

### பொருள்களைக் கொடுத்துவிட்டு நடுறோட்டில் நிற்கின்றோம்

நாங்கள் சிறுசிறு கட்டடம், வீதிகள் செய்பவர்கள். அந்தவகையில் ஜனாதிபதியின் வடக்கின் வசந்தம் திட்டத்தில் கிராம அபிவிருத்திச்சங்கம், மகளிர் அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையங்களை வளர்ப்பதற்காக அந்தத் திட்டத்தின் மூலம் அந்த சங்கங்களின் தகுதிக்கு ஏலாத வீதி வேலைகளை செய்யக் கொடுத்தார்கள். ஆனால் அந்த சங்கங்கள் ஒரு நாள் கூலிவேலை செய்பவனுக்கு பணம் கொடுக்க முடியாத நிலையில் இந்த வேலைகளை எங்களைப் போல் உள்ளவர்களை பிடித்து தேவையான மூலப்பொருள்களை கடனுக்கு வாங்கி வேலையைத் தொடங்கினார்கள். அதாவது வீதிக்குப் பாவிக்கும், கற்கள், தார், ஊரி போன்றவற்றை எம்மிடம் கடனாக, நாங்களும் நம்பிக்கையின் நிமித்தம் கொடுத்தோம். 25.08.2009 ஆம் திகதி தொடக்கம் பொருள்கள் கொடுத்தோம். அதில் ஒவ்வொருவரும் பலலட்சக்கணக்காண பணத்தை கடன் அடிப்படையில் கொடுத்து இன்று மட்டும் பணம் தரப்படவில்லை. எமக்கு பொருள்கள் தந்தவர்கள் பொருள்களின் பணத்தைக் கேட்டு எச்சரிக்கை விடுகிறார்கள். அப்பொருள்களின் பெறும்திக்கு வட்டியும் தரச்சொல்லிக் கேட்கிறார்கள். சங்கக்காரரிடம் பணத்தைக் கேட்டால் ஜனாதிபதி அனுப்பவில்லை. வந்தால் தருகிறோம் எனக் கூறுகிறார்கள். ஆனால் ஜனாதிபதியோ எமது அமைச்சரோ இதைப் பற்றி கவனத்தில் எடுக்காமல் உள்ளார்கள். இந்த வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர்தான் பார்வையிட்டார்கள். அதன்படி பார்த்தால் அந்தப் பணத்தை அதிகாரசபை எடுத்து வேறு வேலைகளுக்கு பாவித்தார்களோ தெரியவில்லை. கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் எங்கள் கெதி கடன் காரர்களுக்கு பயந்து ஒளித்து திரியவேண்டிய நிலையில் உள்ளோம். இந்தத் திட்டத்தில் செய்த வேலைகளின் பட்டியல் உங்கள் உதயன் பத்திரிகைகளிலும் வெளிவந்ததையும் அறியத்தருகிறோம். இப்படி பணம் இல்லாமல் வேலையை செய்ச்சொல்லி ஜனாதிபதி நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொண்டு போய் விட்டார். ஆனால் லட்சக்கணக்கில் பொருள்கள் கொடுத்த நாங்கள் நடுறோட்டில் நிற்கிறோம். பொருள்கள் கொடுத்த பணத்தையும் [illegible] பெற்றுத்தரும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

செ.மனோகரன், த.குகதாசன், அச்சுவேலி.

## புத்தகசாலை

### பயன்தரு சிறப்புறு முயற்சி




மனிதர் இவ்வுலக வாழ்க்கையில் மேற்கொள்ளும் தொழில்சார் பணிகளில் கற்பித்தல் பணியே அவர் தமக்கு மன நிறைவையும் திருப்தியையும் அளிக்கவல்ல அரிய பணி என்பது ஆன்றோர் கண்ட முடிவு. இதன் பொருட்டே நாம் தெய்வமாகப் போற்றத் தக்கோராக எமையீன்று வளர்த்தெடுத்த பெற்றோருக்கு அடுத்தபடியாக, எமக்குக் கல்விச் செல்வத்தை ஈந்து வாழ்வில் உயரவைக்க- நல்வழி நடக்க உதவும் ஆசான்களும் மதிக்கப்படுகின்றனர்.

அந்தவகையில் ஆசிரியப் பெருந்தகை வி.சிவசுப்பிரமணியம் தமது 80ஆவது அகவை நிறைவையொட்டி வெளியிடும் 'எனது ஆசிரியப் பணியின் நினைவுகள்' (SOUVENIR -80) என்ற நூல் ஆசிரியத்துவத்தின் மேன்மையையும் சிறப்பையும் நாம் உணர்ந்துகொள்ள வைக்கும் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் எனக் குறிப்பிட இயலும்.

பெருந்தகை வி.சுப்பிரமணியம் அவர்கள் தமது அனுபவப் பதிவுகளை தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகள், அனுபவங்கள் (Anecdotes), வழிகாட்டிகள் (Role Models), உபசாரம் (Tributes), புகைப்படத் தொகுப்பு (Photo Album) , பாராட்டுக்கள் (Appreciation) என்ற ஐந்து முக்கிய தலைப்புக்களுள் உள்ளடங்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

சிறந்த ஆசிரியத்துவத்தின் உயர் பண்புகளான ஆளுமை, கண்டிப்பு, அரவணைப்பு, கடமையுணர்வு, கண்ணியத்தன்மை, அர்ப்பணிப்பு உணர்வு என்பனவற்றினூடாக தமது 80 ஆண்டுகால வாழ்க்கைப் பயணத்தில் 46 ஆண்டுகள் காலம் ஆசிரியப் பணியைச் சிறப்பாக முன்னெடுத்துத் தம் அனுப வங்களை வாசகர்களுடன், தம் மாணவர்களுடன், நண்பர்களுடன், உறவினர்களுடன் எம்முடன், பகிர்ந்து கொள்கிறார் ஆசிரியப் பெருந்தகை.

யாழ்.இந்துக் கல்லூரியில் 1940ஆம் ஆண்டில் மாணவராகக் காலடி எடுத்து வைத்து 1953 ஆம் ஆண்டு அதே கல்லூரியில் ஆசிரியராக இணைந்து 19 ஆண்டுகளாக கற்பித்தல் பணியை திறம்படச் சிறப்பாக ஆற்றிய சிறப்புக்குரிய அவர் யாழ்.இந்துக் கல்லூரியுடனான தமது பிணைப்பில் தாம் பெற்ற அனுபவங்களையும், தமது கல்விப் பணியில் தமக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்களையும் நினைவுகூரத் தவறவில்லை.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தொடர்ச்சியாக 19 ஆண்டுகள் காலமாக ஆசிரியப் பணி உட்பட தமது 46 ஆண்டுகள்கால ஆசிரியத்துவ சேவையில் ஆசிரியராக, அதிபராக வெளிநாடுகளில் ஆசிரியராகச் சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகை வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது 80ஆவது அகவைப் பூர்த்தியை முன்னிட்டு உருவாக்கிய SOUVENIR -80நூல் இன்று (26.06.2010) சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.**

ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் தம்முடன் இணைந்து பணி புரிந்த 218 ஆசான்கள் குறித்தும் தமது உணர்வுகளை- நினைவுகளை- உபசாரங்கள் அத்தியாயத்தில் பதிவு செய்து நினைவு கூர்ந்துள்ளார். இது வேறு எவரும் நினைத்துப் பார்க்காத சிறப்பம்சம்.

அது மட்டுமல்லாது புகைப்படத் தொகுப்பு என்ற பிரிவுக்குள் தமது தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் தொழில்சார் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை இணைத்துப் பதிவு செய்துள்ளதன் மூலம் சம்பவங்களை நம் கண்முன் கொண்டுவந்து உணர்த்துவதில் அவர் வெற்றி கண்டுள்ளார்.

நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள பாராட்டுக்கள் பகுதியில் ஆசிரியர்வி.சிவசுப்பிரமணியத்துடன் கல்விசார் முயற்சிகளில் தொடர்புபட்டு, வாழ்க்கையில் பல்துறையிலும் சிறப்புப் பெற்றுத் திகழும் புத்தி ஜீவிகள், கல்விமான்கள், உத்தியோகத்தர்கள் பலர் தமது ஆசானுடனான தமது நெருக்கத்தின் பிணைப்பின் காரணமாகத் தாம் ஈட்டிக்கொண்ட பயன்களை மனம் திறந்து பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

தமது வாழ்நாள் பணியாக கற்பித்தல் பணியைத் தேர்ந்தெடுத்து கல்விப் புலத்தில் தமது தனித்துவத்தை வெளிப்படுத்திப் புகழ் ஈட்டிக் கொண்ட ஆசிரியப் பெருந்தகை வெளியிட்டிருக்கும் SOUVENIR -80 நூல், கற்றல், கற்பித்தல் துறையில் இன்று ஈடுபட்டிருக்கும் தரப்பினருக்குப் பெரும் பொக்கிஷமொன்றாக அமைகிறது என தயக்கமின்றிக் கூற இயலும். ராஜா

## காலச்சுவடுகள்




மன்னார் தகவல் தொடர்பாடலுக்கான ஊடக வலைப்பின்னல் நிலையத்தின் வெளியீடான "காலச்சுவடுகள்" சஞ்சிகை வெளிவந்துள்ளது.

காலம் கடப்பதை கண்முன் கொண்டுவரும் காலச்சுவடுகள் என்ற வாசகத்துடன் தமிழ்மக்கள் படுகின்ற இன்னல்களை துணிச்சலாக எடுத்தியம்பும் சஞ்சிகையாக "காலச்சுவடுகள்" கால் பதித்துள்ளது.

அத்துடன் சமூகப் பிறழ்வுகளை வெளிப்படுத்தும் சஞ்சிகையாகவும் இது மிளிர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பிரதம தபாலகத்துக்கு நேற்று வருகை தந்த தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் குமரகுரு ஆகியோர் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதல் இருபடங்களிலும், தபாலக ஊழியர்கள் அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

# நாட்டில் அனைத்துத் தபாலகங்களும் விரைவில் கணனி மயப்படுத்தப்படும்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க

யாழ்ப்பாணம், ஜூன் 26

நாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களையும் கணனி மயப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பிரதம தபாலகத்துக்கு விஜயம் செய்த அமைச்சர், அங்கு தபாலக ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

முதற்கட்டமாக 631 தபாலகங்கள் விரைவில் கணனிமயப்படுத்தப்படவுள்ளன. இரண்டாம் கட்டமாக 4ஆயிரம் உப அஞ்சல் அலுவலகங்களை கணனி வலையமைப்புக்குள் கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச அஞ்சல் சேவையின் தரத்துக்குச் சமமாக நாட்டின் அஞ்சல் அலுவலகங்கள் விரைவில் நவீனமயப்படுத்தப்படும். இதன் மூலமாக கிராம மற்றும் நகர்ப்புற மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

இவற்றைவிட வடமாகாணத்தில் உள்ள அனைத்து தபாலகங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

எந்தச் சவால்களுக்கும் முகம்கொடுத்து சளைக்காது துணிச்சலுடன் பணியாற்றியவர்கள் வடமாகாண அஞ்சல் பணியாளர்கள்.

இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு சளைக்காது அரும்பணியாற்றியவர்கள் இந்த அஞ்சல் பணியாளர்கள் தான்.

அப்போது தொலைத்தொடர்பு வசதி இன்றி தபால் வசதியையே நம்பியிருந்த பிரதேச மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் திறம்பட சேவை புரிந்ததையிட்டு இந்த மண்ணில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்-என்றார்.

நேற்றைய இந்த நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன், மன்னார் அஞ்சல் அத்தியட்சகர் ஜ.சின்னப்பு, யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், அமைச்சரின் மக்கள் தொடர்பாளர் எஸ்.சந்தன, பிரத்தியேகச் செயலாளர் ஜானக மல்லவராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். (50-224)

## நயினை அம்மனின் தேர்ப்பவனி காண பெரும் எண்ணிக்கையான தென்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழாவில் இம்முறை தென்பகுதி மக்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

இதற்கென நேற்றும், நேற்றுமுன்தினமிரவும் பெரும் எண்ணிக்கையான தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகையினால் குறிகாட்டுவான்துறையில் சனநெருக்கடி ஏற்பட்டது.

எனினும் மேலதிக படகுகள் சேவையில் அமர்த்தப்பட்டதால் மக்களை உடனுக்குடன் ஏற்றி இறக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை-

குறிகாட்டுவான் இறங்குதுறையில் பயணிகளின் வசதிகருதி குடிதண்ணீர் உட்படச் சகல அத்தியாவசிய சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலதிக தேவை கருதி யாழ்.நகரில் இருந்தும் பவுசர் வாகனங்கள் மூலம் குடிதண்ணீர் அங்கு கொண்டு செல்லப்பட்டது. (50-111-224)

## சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 'நெல்சிப்' வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 'நெல்சிப்' வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 11 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட பிரிவு மக்களின் பிரதிநிதி தலைமையில் நகரசபை உத்தியோகத்தர்களால் 'நெல்சிப்' திட்டத்தின் பயன்பாடு தொடர்பான விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

11 வட்டாரங்களின் மக்களால் வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் வேலைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் வேலைகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களையும் ஆதனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு இரு கொத்தணிகளாக (சாவகச்சேரி கிழக்கு, சாவகச்சேரி மேற்கு) பிரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் வீதிகள், பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி, சனசமூகநிலையங்கள், சிறுவர்பூங்கா, சிறுவர் விளையாட்டு இடம், நூல் நிலையம், மழை நீர் சேகரித்தல், பொழுதுபோக்கு வசதி, மயானப் புனரமைப்பு போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள மக்கள் தமது முன்மொழிகளை வழங்கியுள்ளதாகவும் வேலைத்திட்டங்கள் மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் அரசியல் கருத்துரைகள்

### தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் இல்லம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழர் தம் சமகால அரசியல் நிலை, போக்கு, எதிர்காலம் என்னும் தலைப்பில் தொடர் கருத்துரையும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

இலங்கைத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், அரசியல் பிரமுகர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டு தமிழ் மக்களின் இன்றைய நெருக்கடிகால அரசியல் போக்கு, எதிர்காலம் பற்றி மக்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இந்த வரிசையில் முதல் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 46, செட்டித்தெரு, நல்லூரில் அமைந்துள்ள மனித உரிமைகள் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மாநாபா அணியின் தலைவரும் வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜப்பெருமாள் கலந்துகொள்கின்றார்.

அவரது கருத்துரையைத் தொடர்ந்து மனந்திறந்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளோர் எவரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (50)




## யாழ்ப்பாணத்தில் பாண் விலை நேற்றுமுதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 26

யாழ்.மாவட்டத்தில் பாணின் விலை நேற்று வெள்ளிக்கிழமை முதல் 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பை அடுத்து 38 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பாண் 42 ரூபாவாக தற்போது விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒரு சோடி கிறீம் பணிஸ் 24 ரூபாவாகவும், ஒரு சோடி ரீ பணிஸ் 22 ரூபாவாகவும், சங்கிலி பணிஸ் ஒன்று 22 ரூபாவாகவும், கொம்பு பணிஸ் ஒன்று 14 ரூபாவாகவும், அடைக்கேக் ஒன்று 20 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக பேக்கறி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (50-201)

## பாதீனியச் செடிகளால் சிரமப்படும் விவசாயிகள்

கோப்பாய்,ஜூன் 26

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில்



பாதீனியச் செடிகளை அழிப்பதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இக்களைகளை அழிப்பதில் பெருமளவானோர் இரசாயன மருந்து கொல்லிகளையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் இவற்றின் வித்துக்கள் அழிவடையாமல் தப்பிவிடுவதாகவும் மீண்டும் நீர்ப்பாசன வசதிகள் மற்றும் மழை போன்ற காரணிகளால் அவை பெருகிவருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் மனித வலுவைப் பயன்படுத்தி இவற்றைப் பிடுங்கி எரியூட்டி அழித்தமையினால் பெருமளவு கட்டுப்பாட்டில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-72)

## இணுவில் லயன்ஸின் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இணுவில் லயன்ஸ்கழகப் பிரிவின் 2010 /2011 வருடத்துக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களை பணிசூட்டல், கழகத்தின் பட்டயம் பெற்ற நாளை நினைவு கூரல் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைக்கால் சிவன் கோயில் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் 2ஆவது மாவட்ட ஆளுநர் லயன் எஸ். எஸ். தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கழகத்தின் பட்டயத்தை வாசித்து அதனுடன் தொடர்புடைய சடங்குகளை நடத்தி வைக்கவுள்ளார். அதனையடுத்து 2010/ 2011 வருடத் [illegible] உறுப்பினர்களுக்கு பணி சூட்டும் சடங்கும் இடம் பெறவுள்ளது. (50-201)

## நற்கருணைப் பெருவிழா

வலி.வடக்கு, ஜூன் 26

மல்லாகம் புனித சகாய மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலிப் பூசையும், அதனைத் தொடர்ந்து புனித சகாய மாதா வீதி உலா வருதலும் நடைபெறவுள்ளன. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி இரு தடவைகளுக்கு மேல் பதவி வகிப்பது காலத்தின் அவசியம்

## ஐ.ம.சு. கூட்டமைப்பு செயலாளர் அறிக்கை

கொழும்பு, ஜூன் 26

ஜனாதிபதி இரு தடவைகளுக்கு மேல் பதவி வகிப்பதற்கு அரசமைப்புத் திருத்தத்தில் வழி செய்வது காலத்தின் தேவையாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசமைப்பின்படி நாட்டின் நிறைவேற்று அதிகாரம் என்பது பிரதமரும் அமைச்சரவையுமாகும். அந்த அரசமைப்பின் படி பிரதமரின் பதவிக்காலம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இரு தடவைகளுக்கு மேல் பிரதமர் பதவி வகித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

1978 அரசமைப்பின் 31(2) ஷரத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் இரு தடவைகள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1978 அரசமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை முழு நாட்டினதும் மக்களே தெரிவு செய்கின்றனர். இதன்படி நாட்டு மக்களின் விருப்பத்தின்படி ஜனாதிபதி தெரிவுசெய்யப்படும் கால எல்லை அல்லது பதவிக் காலத்தை மட்டுப்படுத்த முடியாது.

30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவந்த புலிப் பயங்கரவாதம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டமை பதவிக் காலத்தை அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களுக்குள் ஒன்றாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முதலாவது பதவிக் காலத்தைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காகவே செலவிட்டுள்ளார். அத்துடன் உலக பொருளாதார பிரச்சினை, உலக உணவுப் பிரச்சினை, இயற்கைச் சீற்றம் ஆகிய சவால்களுக்கும் முகம் கொடுத்து இன்றளவில் பயங்கரவாதம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டமையால் நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட்டுள்ளது. நாடு விடுதலை பெற்றுள்ளது.

இந்த யதார்த்தத்தை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் உலக பொருளாதார வீழ்ச்சியின் கீழும் இயன்றளவில் இலங்கையில் வெளிநாட்டு செலாவணி அமெரிக்க டொலர் ஆறு மில்லியனுக்கு மேல் கையிருப்பிலுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 30 வருடங்களாக நாடு இழந்துள்ள அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இருந்தும், புலி ஆதரவாளர்கள், இனத்துரோகிகள் உட்பட பிரிவினைவாதத்துக்கு ஆதரவானவர்களின் அச்சுறுத்தலும் இன்னும் இருக்கின்றது. இந்தச் சவால்களுக்கு தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மாத்திரமே முகம் கொடுக்க முடியும்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பினை மேற்கொள்ள சாவக்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீசாலை ஐயா கடையடியிலிருந்து நுணாவில் கிழக்கு வரையான ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் புகையூட்டல் பணியினை சாவகச்சேரி நகரசபையின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் நகரப் பகுதியில் உள்ள வடிகால்கள் தினமும் துப்புரவு செய்யப்பட்டு புகையூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

**இன்று மீண்டும் யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாத நோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப்பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexucl Disorders (ஆண்மை சக்தி குறைவு-பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக்கட்டணம் 250/=

**கமால் ரூறிஸ்ற் இன்**

இல.392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0719315664, 0777569205

(சி/568671)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் M.A. பட்டம்பெற்ற

**திருமதி உமாவாகீசர் பவானி**

அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றேன்.

ஏழாலை தெற்கு, ஏழாலை. (99843) பதீஸ் (சகோதரன்).

## HOLY FAMILY CONVENT, JAFFNA PAST PUPILS' ASSOCIATION ANNUAL GENERAL MEETING 2009

All members of the above association are invited to the annual general meeting, which will be held on the 3rd of July, 2010, at 3.30 p.m., in the school hall. Members are kindly requested to renew their membership during the annual general meeting. Past pupils who wish to join the association may do so at the beginning of the meeting.

Principal
J/ Holy Family Convent,
Jaffna.

Secretary
Holy Family Convent
Past Pupils' Association, Jaffna.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது சக ஊழியர் இரவீந்திரன் அவர்களின் தந்தை

**சின்னத்துரை விஸ்வலிங்கம்**

அவர்களின் இன்றைய (26.06.2010) ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் நாமும் கலந்துகொள்கின்றோம்.

வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்,
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை, யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. பிரதான உணவகம்-திருநெல்வேலி
2. ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
3. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்- மருதனார்மடம்.
4. சித்தமருத்துவத்துறை உணவகம்-கைதடி

மேற்படி உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 12.07.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.


மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/= உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200 உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப்படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 24.06.2010

(சி/563670)

## 31 ஆம் நாள் நினைவு



அன்னை மடியில் 12 ★ 08 ★ 1932

ஆண்டவன் அடியில் 27 ★ 05 ★ 2010

**அமரர் சின்னத்துரை விஸ்வலிங்கம்**

(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)
திதி: பௌர்ணமி

எம் அருமை அப்பாவே!
எத்தனை நாள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எமைவிட்டு அகலாது.

இன்று (26.06.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவில்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (99915)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்



அச்சுவேலி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (கிளி அண்ணை) கனடாவில் 20.06.2010 ஞாயிற்றுக் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கோகுலன், ராகுலன், சாரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆர்த்தி, பிருந்தா ஆகியோரின் மாமனும் ஆரனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தொ.பே: (905)-470-0614
E-mail kohulon-bala@yhoo.com

தகவல்: குடும்பத்தினர்.

### அருளானந்தம் கொட்விறி விஜயறாஜ்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் கொட்விறி விஜயறாஜ் நேற்று முன்தினம் (24.06.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் திரேசாபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும் திருமதி மேரிறீற்றாவின் அன்புக் கணவரும் அனற்றோயலினின் (மாணவி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும் திருமதி மேரிஅக்னெஸ், திருமதி மேரிறெஜினா, எட்மன் டேவிட், பற்றிக் இம்மனுவேல், அருட்பணி ஜூட்வில்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மேரி ஆன்கிறேஸ், தவராஜா, திருமதி வினிவிறேற், சவுந்தரராஜா, காலஞ்சென்ற பற்றிக் இம்மனுவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.06.2010) சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,பண்டத்தரிப்பு. (99916) தகவல்: குடும்பத்தினர்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No-1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 05.07.2010 காலை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை,நல்லூர்.
T.P: 021 222 6944
சூட்டிபாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
T.P: 021 321 6290

குறிப்பு - எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பி கோழி கொள்வனவு செய்யப்படும்.

## புறொயிலர் விற்பனைக்கு

உடன்சுத்தம் செய்யப்படும் புறொயிலர் ஒரு கிலோகிராம் 480/= மட்டும். புதன், சனி, ஞாயிறுகளில் 12 மணிவரை.

**குமரன் பாம்**
227, பிறவுன் வீதி (நரியன் குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். 0776180675


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணப் பாடசாலை அதிபர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்துக்கு முஸ்தீபு

கொழும்பு,ஜூன்26

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 140 பாடசாலை அதிபர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவர் என அம்பாறை அதிபர்கள் சங்கக் கூட்டு அமைப்பாளர் ஈ.எல்.சுனில் இணைய மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

முறைகேடான இடமாற்றங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்தே இப்போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை, மகாஓயா, தெஹியத்த கண்டி, கந்தளாய், திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அதிபர்களே இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முறைகேடான இடமாற்றங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விடமும் முறையிட்டுள்ளோம் என்றும் அமைப்பாளர் ஈ.எல்.சுனில் மேலும் குறிப்பிட்டார்.

அதிபர்களின் இடமாற்றத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து சமீபத்தில் இப்பகுதிகளைச் சேர்ந்த பெற்றோர்களும் போராட்டம் நடத்தியுள்ளனர்.

அதேவேளை, தொழில்வாய்ப்புக்கான விளம்பரங்களை வெளியிடுவதிலும், கல்வித் தகைமைகளுக்கேற்ப விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்வதிலும் முறையான முன்னெடுப்புகள் இடம்பெறவேண்டும் என்றும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ளி)

## திருமலையில் கடும் வெப்பம்! மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

திருகோணமலை,ஜூன்26

திருகோணமலை மாட்டத்தில் நிலவி வரும் வெப்பமான காலநிலை காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன. அத்தோடு, பயிரினங்களும் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக வெப்பத்துடன் கூடிய அனல் காற்று வீசுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட தொழி லில் ஈடுபடுவோர்களும் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

சில இடங்களில் குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு, ஆடு, மாடு முதலான கால் நடைகளும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

கிராமப்புறங்களில் சில இடங்களில் நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தோட்டப் பயிர்கள் கருகிவாடுவதோடு, வீட்டுத் தோட்டப் பயிர்களும் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன. (ளி)

## போதிய வசதிகள் இன்றி இயங்கும் மூதூர் கோட்டக்கல்வி அலுவலகம்

திருகோணமலை,ஜூன்26

மூதூர் கோட்டக்கல்வி அலுவலகம் போதிய வசதிகள் இன்றி அந்தோனியார் மகாவித்தியாலயத்தின் ஓர் அறையில் இயங்கிவருவது குறித்து கவலை வெளியிடப்பட்டுள்ளது.

மூதூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஓரிரு மேசை கதிரைகளு டன் சிறிய கட்டடத்தின் ஓர் அறையில் இவ்வலுவலகம் இயங்குகின்றது.

தொலைபேசி, தொலைநகல் வசதிகள் இங்கு செய்து கொடுக்கப்படவில்லை. அத்துடன், கணினிகள் உள்ளிட்ட வசதிகளும் இல்லை.

களஞ்சிய வசதிகள் இந்த அவலுவலகத்தில் இல்லாமையால் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற லட்சக்கணக்கான பாடநூல்கள் வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

மூதூர் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் சிறந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு இங்கு போதுமான பௌதீக, ஆளணி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, மூதூர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு தனியான கட்டடம் ஒன்றை வழங்கி அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ளி)

## போக்குவரத்து விதிகள் கடைப்பிடிப்பு: மாணவர், ஆசிரியருக்கு கருத்தரங்கு

திருகோணமலை,ஜூன்26

போக்குவரத்து விதிகளை கடைப்பிடிப்பது சம்பந்தமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கிண்ணியா அல்-அக்ஷா கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எஸ்.ஏ.எம்.பாரூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கருணாரட்ன, போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்டவிதிகளைப் பின்பற்றாமல் சாரதிகள் வாகனங்களைச் செலுத்துவதனால் ஏற்படும் விளைவுகள், குற்றச் செயல்கள், அவற்றினால் ஏற்படும் விளைவுகள், அவற்றைத் தவிர்த்துக் கொள்ள கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் ஆகியவை கருத்தரங்கில் விளக்கப்பட்டன. (ளி)

## ஆதரவற்ற குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த அறக்கட்டளையை உருவாக்குவதற்குத் திட்டம்

திருகோணமலை,ஜூன்26

யுத்தத்தினால் பெற்றோரையும், இருப்பிடங்களையும் இழந்து ஆதரவற்றவர்களான குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான அறக்கட்டளையை திருக்கோணேஸ்வராலய பரிபாலன சபை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம் செயலுரு பெறுவதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனை, கருத்துகளை சைவ மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக திருக்கோணேஸ் வராலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக பரிபாலன சபை வெளியிட்டுள்ள ஆலய செய்திமடலில், ''திருக்கோணேஸ்வரம் உங்களுடைய ஆலயமாகும். ஆலய வளர்ச்சி மற்றும் மேம்பாடு சம்பந்தமாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை தங்களிடமிருந்த ஆர்வத்தோடு வரவேற்கின்றோம்.'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கும் எமது நடவடிக்கைகள் யாவும் பொதுமக்களின் பார்வைக்கு திறந்த புத்தகமாக இருக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். வெறும் பேச்சில் நாட்டம் கொள்ளாது, இறைவன் பணியில் எமது ஆலயத்தை வளர்த்தெடுக்க நாமெல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

## கேகாலை மாவட்ட தோட்டங்களுக்கு ரூ.50 லட்சம் பெறுமதி கூரைத் தகடுகள்

கேகாலை,ஜூன் 24

கேகாலை மாவட்டத்திற்கு உட்பட்ட தோட்டங்களில் பொதுவசதிகளை மேம்படுத்துவதற்கு சப்ரகமுவ மாகாண தோட்ட நலன்புரி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக மாவட்டத்திலுள்ள கோவில்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் உள்ள தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவதானம் செலுத்தி வந்த சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத், தற்போது அவற்றைத் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத்தின் வேண்டுகோளையடுத்து சப்ர கமுவ மாகாண தோட்ட நலன்புரி அமைச்சு 50 லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கூரைத் தகடுகளை வழங்கியுள்ளது.

களுபஹன தோட்டம், மானங்கல, வேவலவத்த, பாராவத்த, வீட்டுத்தோட்டம், பொட்டலகம, மீப்பிட்டிகந்த, கிரிபோருவ ஆகிய தோட்டங்களுக்கே இந்தக் கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.(ளி)

## நுவரெலியா வைத்தியசாலையில் விசேட வேலைத்திட்டத்திற்கு வலியுறுத்து

### மத்திய மாகாணசபை உறுப்பினர் சதாசிவம்

நுரரெலியா,ஜூன்26

நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு மாதாந்த சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் நன்மைகருதி சுகாதார அமைச்சு விசேட வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் - என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்ன ணித் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் ஊடா கவே இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.




நுவரெலியா ஆதார வைத்திய சாலைக்கு மாதாந்த சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் அதிகாலைவேளையில் வந்து தமக்குரிய இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை உள்ளது.

எனினும், நுவரெலியாவில் தற்போதுள்ள சீரற்ற காலநிலையினால் நோயாளர்கள் இலக்கங்களைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, நோயாளர்களின் நலன்கருதி நுவரெலியா ஆதார வைத்தியசாலை நிர்வாகம் புதியதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் - சதாசிவம் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

## ஒலிபன்ட் கீழ்ப்பிரிவு தோட்டத்தின் பாதை புனரமைப்புச் செய்யப்படுமா?

நுவரெலியா,ஜூன் 24

நுவரெலியா மாவட்டத்தின் ஒலிபன்ட் கீழ்ப்பிரிவுத் தோட்டத்திற்குச் செல்லும் பிரதான பாதை சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாக எவ்வித புனரமைப்பும் இன்றிக் காணப்படுகின்றது எனப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், நோயாளர்கள் மற்றும் வாகனச்சாரதிகள் எனப் பலதரப்பினரும் பய ணிக்கின்றனர். இவர்கள் தாம் பாரிய சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில் நிலைமை மிக மோசமடைகின்றது.

தேர்தல் காலங்களில் வாக்குக்கேட்டு வரும் அரசியல்வாதிகள் இவ்வீதியைப் புனரமைத்து தருவார்கள் எனக் கூறுவர்.

எனினும்,தேர்தல் முடிவடைந்தவுடன் எவரும் இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

இதேவேளை, இவ்வீதியின் புனரமைப்புப் பணிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை செப்பனிடப்பட்டு பின்னர் அது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. என்று தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே,சம்பந்தப்பட்ட வீதியை விரைவில் புனரமைத்து தமது சீரான போக்குவரத்திற்கு வழி ஏற்படுத்தித்தர வேண்டுமென தொழிலாளர்கள் தரப்பில் கோரப்படுகின்றது. (ளி)

## ஆற்றில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்பு

கம்பளை,ஜூன்26

கடந்த ஞாயிற்றுக்கிழமை கெலிஓயா ஆற்றில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்த இளம்பெண்ணின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கரையொதுங்கியது.

பெண்ணின் சடலம் கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்பு நேற்றுமுன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ளி)

## சப்ரகமுவ பாடசாலைகளுக்கு 257 புதிய அதிபர்கள் நியமனம்

இரத்தினபுரி,ஜூன் 26

ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 257 பேர் சப்ரகமுவ மாகாணப் பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கே இந்த அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆசிரியர்சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களுக்கு பரக்கடுவ, மெனேரிப்பிட்டிய பயிற்சி நிலையத்தில் வைத்து நியமனங்கள் வழங்கப்பட்டன.

சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் பல கல்வி அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

மாகாண முதலமைச்சர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக நான் நியமனம் பெற்றபோது, இந்த மாகாணம் ஏனைய மாகாணங்களையும் பார்க்க கல்வித்துறையில் பின்தங்கிய நிலையில் இருந்தது.

எனினும், கடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் படி நாட்டின் ஒன்பது மாகாணங்களில் சப்ரகமுவ மாகாணம் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இது இலகுவான முன்னேற்றமல்ல. எங்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியின் பயனாகவே இந்த முன்னேற்றத்தை எட்ட முடிந்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக நான்காயிரத்து 954 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். எனினும், 600 ஆங்கிலமொழிமூல ஆசிரியர்களுக்கும், 333 தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது- இப்படி முதலமைச்சர் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வாழ்ந்தவன் வடக்கே போ, தாழ்ந்தவன் கிழக்கே போ" இது யாழ்ப்பாணப் பக்கம் சொல்லப்படும் ஒரு கூற்று. இதன் அர்த்தம் யாதென்றால் வாழ்ந்தவன் - என்பது சீரும் சிறப்புமாக வாழ்ந்தவன் வடக்கே - தீர்த்த யாத்திரை, தல தரிசனத்திற்கு போய் புண்ணியம் தேடவும், தாழ்ந்தவன் - வறுமைப்பட்டவன் கிழக்கே அதாவது தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பக்கம் போ- அங்கே உழைப்புக்கு வழி இருக்கின்றது. இந்த உழைப்பு பனைமரத்தால் ஏற்படும் என்பதை குறிப்பதாகவும் அமைவதாக நான் கருதுகின்றேன். பனைமரத்தில் கிடைக்கும் பனம்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல் போன்றவற்றைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதால் உழைத்து உயர்ந்துவிடலாம் என்பதேயாகும்.

பனை மரம் ஒரு அற்புதமான மரம். அதன் பகுதிகள் அனைத்தும் மிகவும் பயனுள்ளவை.

எனது நண்பன் சிவராசன் தமையனின் கடையில் நிற்கும்போது ஏற்பட்ட ஒரு முரண்பாட்டால் "நான் பனம் மட்டை வெட்டி சீவிப்பன்" என்று வீராப்புடன் வெளியே வந்தது எனக்கு நல்ல ஞாபகம்.

இதனாலேயே பனைமரம் கற்பகதரு என அழைக்கப்படுகின்றது என நினைக்கின்றேன்.

பச்சிலைப்பள்ளியின் பெரும் செல்வம் பனையும் தென்னையும் தான்.




சொல்லித் தெரிய வேண்டியதில்லை

ஒரு மூன்று பனம்கிழங்குப் பாத்தி (10×7 அடியில்) போட்டால் ஒரு வருடத்தின் மூன்று மாதங்களுக்கு வீட்டில் பஞ்சம் இராது. அப்படி வளத்தை தரக்கூடியது பனை மரம்.

பச்சிலைப்பள்ளியில் திரும்பி பார்த்தால் எங்கும் தெரிவது பனைதான். தென்னையினை நட்டு தண்ணீர் ஊற்றி எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.

பனை ஒரு ஊதாரிப் பிள்ளை தானாக படித்து பெரிய உத்தியோகம் பார்ப்பது போலதானாக வளர்ந்து பயன் தரவல்லது.

பனங்காய் சீசன் வந்து விட்டால் பழையபடி முதுகுத் தண்டு நோகும். பனங்காய் பொறுக்கி சுமக்க வேண்டும். உள்ள காணி முழுக்க பொறுக்க வேண்டும். போனாப் போகுது அரச காணியிலும் கள்ளப் பனங்காய் பொறுக்கிப் போட்டால் வருமானம் ரொம்ப உயரும்.

நான் நினைக்கின்றேன் 1990 வரை பனங்கிழக்குக்கு இருந்த மவுசு யுத்த காரணத்தால் மிகக் குறைந்துவிட்டமை துரதிஸ்ரம். பனங்காய் சீசன் என்றால் வேலை அதிகம். பொறுக்கி வண்டி கட்டி ஏற்றி வந்து பாத்தி கொத்தி முளைக்க வைத்து பிறகுகிண்டி எடுத்து அவித்து புழுக்கொடியாலாக்கி எஞ்சியதை ஒடியலாக்கி பெண்டுகளும் ஆண்களும் ஓயவேமாட்டார்கள். *(இன்னும் வரும்...)*




மெட்டியொலி நாடகமும் கனகர் மனைவி
மகிழ்வுடனே பார்த்திருக்க வந்த கனகர்
சட்டெனவே சாப்பாடு போடும் படியே
சுறுக்குடனே படத்தினையும் நிறுத்தி விடவே
சீட்டான மனைவியுமோ சீற்றம் உற்றே
சிறுத்தையாய் பாய்ந்தடித்து ஓடி னாளே
றொட்டிசுட ஓடுகிறாள் என்று சிரிக்க
றொக்கெட்டாய் வந்ததுவே தோசைக் கல்லு.

*(அடுத்த சனிக்கிழமை கனகர் சந்திப்பார்)*




யாழ்ப்பாணத்தின் மிகப் புராதன தேவாலயமாகக் கருதப்படுவது புதுமை மாதா தேவாலயமாகும். யாழ்ப்பாண அரசனுடனான வெற்றி ஒன்றின் ஞாபக மாக வெற்றி மாதா திருக்கோயில் எனும் பெயருடன் தற்போதைய கோட்டைப் பகுதியில் மேற்படி ஆலயம் அமைக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது. தற்போதைய குருநகர் புதுமை மாதா கோயிலின் தாயால யமாக மேற்படி கோட்டையடி வெற்றிமாதா திருக்கோயிலே அமைந்திருந்தது. இக் கோட் டையடி ஆலயத்தை மையமாகக் கொண்டே யாழ்ப்பாணக் கோட்டையினை போர்த்துக் கேயர் நிர்மாணித்தனர் எனவும் அறிய முடிகின்றது. அவ்வகையில் 1614 களில் மேற்படியாலயத்தினை பெறே பேதுரு டி பெத்தங்கோர் எனும் பிரான்சிஸ்கன் சபைக் குருவானர் கட்டினாரென, ம.ஞா. செல்வராஜா குறிப்பிடுகிறார். 7620 களில் இக்கோயிலைச் சுற்றி ஒரு சிறிய கோட்டை கட்டப்பட்டதாகவும் இதுவே இன்றுள்ள கோட்டைக்கான ஆரம்ப அடியெடுப்பாக வும் கருதப்படுகின்றது. கொட்டடி என்று இன்றழைக்கப்படும் கோட்டையடியில் வாழ்ந்த கத்தோலிக்கரின் முதன்மையால யமாக விளங்கிய தேவாலயம் ஒல்லாந்தர்து யாழ்ப்பாண வருகையோடு வீழ்ச்சியடைகிறது.

மேற்படி தேவாலயத்தின் பெருமணி. ஒல்லாந்தர் கோட்டையுள் கட்டிய தேவா லயத்தில் அவர்களால் பயன்படுத்தப் பட்டது. போர்த்துக்கேய மொழியில் மணி யில் யாழ்ப்பாணம் வெற்றி மாதா கோயில் என அதில் எழுதப்பட்டு இருந்ததாக அதனைப் பார்த்தவர்கள் கூறுகின்றார்கள். புலிகளது யாழ்ப்பாணக் கோட்டை வெற்றியின் பின் அது காணாமல் போய்விட்டது.

1650 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட மேற்படி ஒல்லாந்தர் வருகையின் பின்னணி யில் தேவாலயத்தின் திருச்சொரூபம், பூசைப் பாத்திரங்கள் மற்றும் முக்கியமான பொருள்கள் கடல் வழியாகக் கோவாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கோவாவில்

## நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

உள்ள பஞ்சீம் பகுதியில் மண்டூவி ஆற்றங்கரையில் மேற்படி மாதாவின் சொரூபத்துடன் கூடிய ஆலய மொன்று நிர் மாணிக்கப்பட் டது. யாழ்ப்பாண புதுமை மாதா கோயில் எனும் பெயர் முகப்பிற் பொறிக்கப்பட்ட தேவாலயத்திற்கு 1970 களில் விஜயம் செய்த சுவாமி ஜெயசீலன் மேற்படி மாதா சொரூபத்துடன் யாழ்ப்பாண கிறிஸ்தவ வரலாற்றை சித்திரிக்கும் சில ஓவியங்களையும் பார்த்தாகக் குறிப்பிடு கிறார். இவற்றுள் புதுமை மாதாவின் வீதி உலாவினைக் கண்டுகளிக்கும் யாழ்ப்பாண அரசனின் குடும்பத்தினர்களும் ஒன்றாகும்.

ஒல்லாந்தர் எழுச்சியோடு கோட்டைச் சூழலுள் இருந்த கத்தோலிக்க சாதிக் குழுக்கள் பலவும் சமூக, சமய அரசியல் நிலவரங்கள் காரணமாக தமது வாழ் விடங்களை மாற்றிக் கொண்டுள்ளனரெனத் தெரிகின்றது. இவ்வாறான நிலவரங்களுள் புதுமை மாதாவும் அவரது ஞாப கங்களும், வழிபாடுகளும் அவர்களோடு கூடவே இடம் பெயர்ந்தன. ஒல் லாந்தர் கால முற்பகுதி களில் காணப்பட்ட மத வொடுக்க முறைக்குள் மறை வாக - இரகசியமாக உறைந்து இருந்த வழிபாடுகள் ஒல்லாந்தர் கால பிற்பகுதி - பிரித்தானிய வருகையோடு மீளவும் எழுச்சியுறுகிறது.

அவ்வகையில் இன்று எம்மிடம் காணப்படும் புதுமை மாதா கோயில் அதன் முகப்பிற் காணப்படும் 1887 எனும் ஆண்டடிப் படையில் பார்த்தால் சுமார் 123 வருடங்களுக்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது.

புதுமை மாதா கோயிலை ஆதரிக்கும் கடையர் சமூகத்தினர் கிறிஸ்தவ காண் பியக் கலைப் பாரம்பரியத்தின் பிரதான உற்பத்தியாளர்கள் ஆவர். யாழ்ப்பாணத்திற் காணப்படும் பல்வேறு சொரூபங்கள், ஓவியங்கள், தேவாலயக் கட்டுமானங் களின் ஆக்கத்தில் இவர்களதும், இவர்களது மூதாதையரது பங்கும் பணியும் முக்கிய மானது. எமது பெருமை மிகுந்த கலைப் பாரம்பரியத்தின் மிக முக்கியமான ஒரு

# "மக்கள் களரியின் நா

*மக்கள் களரியின் நாடக விழா வலயக் கல்வி காரியாலத்திற்கு அருகில் அமைந்த C.C.T.M பாடசாலையில் அமைக்கப் பட்டுள்ள சதுர வடிவான மேடையில் பார்வை யாளர் சுற்றிவர இருந்து பார்க்கும் முறையில் நடந்து கொண்டிருக்கிறது. யூலை 02 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த நாடகவிழா வில் 23.06.2010 அன்று நடைபெற்ற பராக் கிரம நிரியெல்லவின் இரண்டு நாடகங் களான "திருடன் வந்தான்" "தேவலோக பயணம்" என்கின்ற சிறுவர் நாடகங்களை பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.*

*1980களில் யாழ்ப்பாணத்தில் நல்லதொரு நாடகப் பாரம்பரியம் இருந்தது. அது யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக நாடகம் பார்க்கும் பழக்கமும் படிப்படியாய் குறைந்து போனது. மற்றது சிங்கள நாடக அரங்கை வெறும் கோட்பாடு ரீதியாக மட்டுமே அறிந்த சூழ்நிலையில் பராக்கிரம நிரியெல்லவின் முயற்சியால் அதை செயன்முறையில் பார்க் கும் வாய்ப்பு கிட்டியது. இவ்வாறானதொரு முயற்சி நாடகம் பார்க்கும் பழக்கத்தை மீளக் கட்டியெழுப்ப உதவி புரியலாம்.*

*மேற்படி இரண்டு நாடகங்களிலும் "திருடன் வந்தான்" என்ற நாடகம் களவாக தேனீக் களை ஏமாற்றி தேன் குடிக்கும் கரடியினது கதையாகும். பார்ப்பதற்கு மகிழ்ச்சியாகவும் நல்லதொரு அனுபவமாகவும் இருந்தது.*

*இந்த நாடகத்தில் எளிமைப்பண்பு அதன் சிறப்பாகவும் அழகியலாகவும் இருந்தது. கதையானது கதையை நோக்கி நேர்த்தியாக நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு விடயத்தை மையப்படுத்தி தெளிவாகவும் இலகுவாகவும் நகர்ந்த அதேவேளை அதிக செறிவுத் தன்மையைத் தவிர்த்திருந்தது.*

*ஆடல்பாடல் கூட குறிப்பாக சிறுவர் களாலும் பாடக்கூடிய முறையிலும் ஆடக் கூடிய முறையிலும் கட்டமைக்கப் பட்டிருந்தது சிறப் பானதாகும். பார்ப்போர் கூட இருந்தயிரையில் அந்த தாளத்திற்கு அசைந்து கைகளைத் தட்டி யது குறிப்பிடத்தக்கது.*

*சுற்றிவர படிப்படியாய் உயர்த்தப்பட்ட பார்வையாளர் இருக்கையில் இருந்து உள்ளக அரங்கில் நாடகம் பார்த்தது இதுதான் முதல் அனுபவமாகும். படச்சட்ட அரங்கில் அருகில் இருப்போரையும், ஆள்களின் பிடரிகளும், மூடப்பட்ட அல்லது திறக்கப்பட்ட முன்மேடை யும் போலல்லாது எல்லோரும் மேடைக்கு அருகில் இருந்து நாடகம் பார்த்து அனுபவிக் கும் வாய்ப்பும் முன்னுள்ள மற்றும் சுற்றிவர உள்ள சக பார்வையாளனை பார்க்கும் வாய்ப் பும் இந்த அரங்கில் கிட்டியது. அதனால் பார்ப்போருக்கும் உணர்வுகளின் தொற்றுகை மிக அதிகமாக இருந்தது. உதாரணமாக நானும் சிரித்து முன்னுள்ள பார்வையாளனும் சிரிக்கும் போது அந்த சிரிப்பின் அளவு அதிகரித்தது. இந்த வெளி யில் திறந்த மருட்கைப் பண்பு வெளிப்பட்டது.*

**க. ரதிதரன்**

*பொதுவாக சிறுவர் அரங்கு பார்ப்போரு டன் ஏதாவது வகையில் பங்குபற்றும் பண் போடு செய்யப்படும். அந்த முறை இங்கும் இருந்தது. அதில் மிக சுவையான அனுபவ மாக இருந்தது. நரி கழற்றிப் போட்டுவிட்டுப் போன உடைகளை மீளவும் கரடி எப்படி அணிந்து கொள்வது என பார்ப்போரிடம் கரடி கேட்ட போது சிறுவர்கள் தாமே முன்சென்று அந்த ஆடைகளை அணிவித்தது சிறுவர்கள் அரங்குடன் எவ்வளவு நெருக்கமாக இருந்தனர் என்பது தெரியவந்தது. அதிலும் குறிப்பாக கடைசி யாக ஒரு ஆடையைக் கரடி தனக்கது சரியாக அணியத் தெரியும் என்று கூறி உதவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறரது விமர்சனங்கள்



மகாத்மா காந்தி தனது சபர்மதி ஆசிரமத்தில் இரண்டு இளம் பெண்கள் தோள்மீது கைபோட்டு நடந்து செல்வார்.

இக்காட்சியைக் கண்ட பலர் காந்திஜியைத் தவறாக விமர்சனம் செய்தார்கள். இதைக் கேள்விப்பட்ட காந்தி மனம் வருந்தினார்.

''ஏன் மனதில் எவ்விதமான களங்கமுமின்றி எனது பேத்தி வயதுள்ள இந்தப் பெண்களின் துணையுடன் நான் நடந்து செல்வதை இவர்கள் இப்படிக் கேலி செய்கிறார்களே'' என்று காந்திஜி கலங்கினார்.

தனது வருத்தத்தை இராஜாஜிக்குக் கடிதமாக எழுதினார். காந்திஜியின் கடிதத்தைப் படித்த இராஜாஜி, அதற்குப் பின்வருமாறு பதில் எழுதினார்.

''மகாத்மா காந்திக்கு...

தங்கள் கண்ணியத்தைப் பற்றியும் நேர்மையைப்பற்றியும் மற்றவர்களைவிட, தங்களுக்கே நன்றாகத் தெரியும். மற்றவர்களின் தவறான விமர்சனத்தைக் கண்டு நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. ஒருவேளை நீங்கள், அந்த விமர்சனத்திற்கு மதிப்புக் கொடுத்து வருந்தினால் அவர்கள் சொல்வது உண்மை என்றாகிவிடும். எனவே, அடுத்தவர்களின் தவறான விமர்சனத்தை ஒரு பொருட்டாகக் கொள்ளாதீர்கள்.

காந்திஜி அன்றிலிருந்து மற்றவர்களின் விமர்சனத்தைக் கண்டு கொள்வதில்லை. பிறர் விமர்சனங்களால் நீங்கள் பாதிக்கப்படத் தொடங்கினால் ஒரு நாள் கூட சந்தோஷமாக இருக்க முடியாது.

(சொன்னவர் - காந்திதாசன்).

# மன்னனே சிறந்த முட்டாள்

மன்னன் ஒருவன் குதிரைகள் மீது உயிரையே வைத்திருந்தான். இதை நன்கு அறிந்து வைத்திருந்த ஒரு ஏமாற்றுக்காரன் மன்னனிடம் வந்து,'' மன்னா பறக்கும் பஞ்சகல்யாணிக் குதிரை ஒரு இடத்தில் இருக்கிறது. லட்சம் வராகன் விலை. ஒரு லட்சம் பொன், முன்பணம் தாருங்கள். விட்டால் மறுபடி கிடைக்காது.'' என்று கூறினான்.



மன்னனும் அதை ஆராய்ந்து பார்க்காமல் ஒருலட்சம் வராகன் கொடுத்துவிட்டு அவன் பெயரில் கணக்கில் எழுதிக் கொள்ளக் கூறினான். மந்திரியும் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டான். ஆனால் தன் குறிப்பேட்டில் 'இந்த நாட்டின் மன்னன் ஒரு தலைசிறந்த முட்டாள்' என்று எழுதி வைத்தான். அக்குறிப்பைப் படித்த மன்னன் கோபம் கொண்டு, என்னையா முட்டாள் என்கிறாய்?' அவன் குதிரை கொண்டு வந்துவிட்டால் என்ன செய்வாய்?'' என்று கர்ஜித்தான்.

மந்திரி நிதானம் தவறாமல், ''மன்னர் பெருமானே! கோபம் வேண்டாம். ஒரு வேளை அந்த ஆள் குதிரை கொண்டு வந்துவிட்டால், தங்கள் பெயரை அழித்துவிட்டு அவன் பெயரை எழுதிவிடுவேன்.'' என்றார்.

சாதாரண குடிமக்களே எதையும் ஆராய்ந்துதான் செய்ய வேண்டும் என்கின்றனர் அறிஞர்கள். ஒரு மன்னன் ஆராயாது முட்டாள்தனமாகச் செயற்படலாமா? மன்னனாகவே இருந்தாலும் ஆராயாது செயற்படுபவன் முட்டாளே ஆவான்.

இப்படித் தலைவர்கள் தவறு செய்யும்போது சுற்றி இருப்பவர்கள் இடித்துரைக்க வேண்டும். நடக்குமா?

(சொன்னவர் - அமரர். டி.என்.சுகி[illegible])

# ஆண்டவனா? அயிரை மீனா?

கிராமத்துக்கு விஜயம் செய்த முனிவர் ஒருவர், மக்களிடம் ஆன்மிக விடயங் களை விளக்கி, உபன்னியாசம் புரிந்தார்.

அவர் பேசிய உயர்ந்த ஆன்ம தத்துவங்களை, அப்பாமர மக்கள் ஏதும் புரியா விட்டாலும், பக்தியோடு கேட்டார்கள்.

முனிவர் பேசிக்கொண்டிக்கும் போதே இடைவெளியில், 'ஆண்டவன் ஒருவனே நம்மைக் காப்பாற்றுவான்' என்றார்.

இதை கேட்டுக் கொண்டிருந்த கிராமவாசி ஒருவன், '' சுவாமி, என்னை ஒரு சமயம் ஒரு அயிரை மீன் காப்பாற்றியதே! என்றான்.

இந்த அயிரை மீன் தத்துவம் முனிவருக்குப் புரியவில்லை. அயிரை மீனும் கட வுளோ.. இந்த மனிதர் பரிபக்குவம டைந்தவராக இருப்பாரோ என்று அவனை எண்ணி விட்டார்.

உடனே கிராம வாசியை அழைத்து,

'' பிற உயிர்களை உய்விக்கும் அந்த அயிரை மீனின் சக்தியைத் தாங்கள் எனக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும்'' என்று பணிவாக வேண்டினார்.

கிராமத்துப் பாமரன் , வெட்கம் அடைந்தவனாக '' சுவாமி தங்களிடம் பேசப் பயமாக இருக்கிறது'' என்றான். கூட்டத்தில் சொல்லக் கூச்சப்படுகிறான் என்று நினைத்த முனிவர் ''நம்மைத் தனிமையில் சந்தித்துக் கூறுங்கள்''என்றார்.



ஒருவாரம் சென்றது. தனிமையில் இருவரும் சந்தித்தனர். முனிவர் பயபக்தியுடன் அயிரை மீன் தத்துவத்தைக் கூறுமாறு கேட்டார். கிராமவாசி கூறினார்.

'' நீங்கள் கேட்பதால் சொல்கிறேன் சுவாமி, எனக்கும் அம்மாவுக்கும் ஒருநாள் சண்டை, நான் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினேன். காட்டுவழியில் போனேன். மூன்று நாள் பட்டினி. பசி தாங்கவில்லை. இன்னும் சிறிது நேரத்துக்குள் ஏதாவது சாப்பிடாவிட்டால், உயிர்போய்விடும் என்ற நிலை. அப்போது அங்குள்ள ஒரு குளத்தில் ஒரு அயிரை மீன் தெரிந்தது. உடனே அதைப்பிடித்துத் தின்றேன். அப் போது அந்த அயிரை மீன் என்னைக் காப்பாற்றியது. அதைத்தான் அன்று சொன்னேன்''

முனிவருக்கு அவமானமாகப் போய்விட்டது. இவன் சொன்ன விடயத்தைப் பெரி தாக நினைத்து ஏமாந்து விட்டோமே என்று வருந்தினார்.நாமாகவே சிறிய விடயத் தைப் பெரிய விஷயமாக நினைத்து சின்ன மனிதர்களைப் பெரிய மனிதர் களாக நினைத்து விடுகிறோம்.


(சொன்னவர்: அமரர்.டி.என்.சுகி சுப்பிரமணியம்).

# மிகச் சிறிய குரங்கு

உலகிலேயே மிகச்சிறிய குரங்கு. சுவீடன் மிருகக் காட்சிச்சாலை யில் உள்ள இந்த குட்டிக் குரங்கு 35 சென்றி மீட்டர் (13.7அங்குலம்) அளவு மட்டுமே வளரும். தென் அமெரிக்காவில் அமேஸான் ஆற்று படுகைக் காடுகளில் மட்டுமே காணப்படும் குரங்கினம் மிருகக் காட்சி சாலையின் அதிகாரி ஒருவரின் பெரு விரலை இக் குட்டி பற்றிக் கொண்டி ருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டு வி

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய

காலம் : 26, 27 ஜூன் 2010 இடம் : யா



### தலைவரின் உள்ளத்திலிருந்து ....



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனது 125 ஆவது ஆண்டு நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் தனது நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கல்லூரி வளாகத்தில் கொண்டாடுகின்றது.

பாடசாலையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்து இன்னோரன்ன உதவிகளைச் செய்து வந்த இச்சங்கம், பின்னய காலங்களில் கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி பலவித ஆக்கபூர்வமான நிரந்தரத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

இன்றும் விழாவைக் குறிக்கும் முகமாக 22 கணனிகளைக் கொண்ட அதி நவீன முறையிலான கணனிக் கூறு ஒன்றும் திறந்து வைக்கப்பட இருக்கின்றது.

உலகெங்கிலும் வியாபித்திருக்கக் கூடிய பழைய மாணவர் சங்கக் கிளைகளின் இணைப்புப் பாலமாக இச்சங்கம் தொழிற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதொன்று. மேலும் இன்றும் நாளையும் (26 ஆம் 27 ஆம் திகதிகளில்) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தில் சிறப்புற நடைபெற ஏற்பாடாகி இருக்கும் எமது சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் எமது கல்லூரி பழைய மாணவர் மற்றும் நலன்விரும்பிகளை பங்குபற்றி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவுமாறு வேண்டுகிறேன்.

உங்கள் அனைவரையும் எமது விழாவுக்கு அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்

செ.இராகவன்
தலைவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.

### நூற்றாண்டு விழாத் தலைவர் செய்தி



இன்று நூறாவது ஆண்டிலே காலடி எடுத்து வைத்திருக்கும் எமது பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை, பல இன்னல்களையும் தடைகளையும் தாண்டி எமது கல்லூரி அன்னைக்குச் சேவை செய்து வந்துள்ளது.

இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து பல தலைவர்களின் சிறப்பான வழி நடத்தலிலே கல்லூரியின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

120 இற்கும் மேற்பட்ட தொன்மையான எமது கல்லூரியின் ஆரம்பக்காலங்களில் இருந்து செயற்பட்டு வரும் பழைய மாணவர் சங்கக் கிளைகளில் கொழும்புக் கிளையும் ஒன்றாகும்.

உலக நாடுகளில் உள்ள பல்வேறு கிளைகளுடனும் தொடர்புகளைப் பேணி ஒரு உறவுப் பாலமாகத் தொழிற்படுகின்றது.

இன்றும் நாளையும் (26 ஆம் 27 ஆம் திகதிகளில்) கல்லூரி வளாகத்திலே சிறப்புற நடைபெற ஏற்பாடாகி இருக்கும் எமது சங்கத்தின் நூற்றாண்டு விழாவிலே எமது கல்லூரி பழைய மாணவர், ஆர்வலர்கள், மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து சிறப்புச் சேர்க்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

''எவ்விட மேகினும் எத்துயர் நேரினும் எம் மண்ணை நின்நலம் மறவோம்''

திரு.எம்.என்.அசோகன், நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர்,
பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை.



யாழ்.இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணி



## நூற்றாண்டு விழ

இன்றும் நாளையும் (26 ஆம் 27 ஆம் திகதிகளில்) திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்திலே நடைபெற இருக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கின்றன.

நூற்றாண்டுகளுக்கு மேல் தொண்மையான தலைநிமிர் கழகத்தில் கலைபயின்ற புதல்வர்கள் வளர்த்த சங்கத்தின் நூற்றாண்டு நிறைவை அன்னையின் மடியில் கொண்டாடி மகிழ இருக்கிறார்கள். இது அன்னையின் மகுடத்தை மென்மேலும் மிளிரச்செய்யும் என்றால் அது மிகையாகாது.

இந்தச் சிறப்பு விழா இரண்டு தினங்களாக நடைபெற இருக்கின்றது. இரண்டு தினங்களுமே காலை 8 மணியளவில் ஆரம்பமாகி மாலை 6.30மணிவரை நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்று 26 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 7.30 மணியளவில் கல்லூரி ஞானவைரவர் ஆலய அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய ஒரு கலை விழாவாக அமையும். அந் நிகழ்ச்சி களில் எமது கல்லூரி முன்னாள் ஆசிரியர் சிவசுப்ரமணியம் அவர்களது பழைய நினைவுகளை மீட்கும் நூல் வெளியீடு உள்ளடங்கலாக கல்லூரி மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் பங்குபற்றும் கலை, இலக்கிய நிகழ்வுகளும் இடம் பெறும்.மேலும் இலங்கைத் தீவின் புகழ்பூத்த இந்து மைந்தர் மற்றும் தமிழ் ராவண்ணர்கள் பங்குபற்றும் கவியரங்கம் மற்றும் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெறும். நிறைவாக இந்துவின் மைந்தர்கள் வழங்கும் இசைவிருந்தும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் 27 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக்கல்லூரி துடுப்பாட்ட அணிகள் மோதும் வடக்கு - தெற்கு துடுப்பாட்ட சமர் இடம்பெற இருக்கிறது.

வடக்கு - தெற்கு உறவுகளை இணைக்கும் பாலங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இந்த மாபெரும் துடுப்பாட்டப் போட்டி அசாதாரண நாட்டுச் சூழ்நிலையால் தடைப்பட்டிருந்தது துரதிர்ஷ்டமே. எனினும்

விழாச் சிறப்புற வ


கஜமுகன்
ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

Bartleet Finance Ltd
306/A, Hospital Road, Jaffna,
Srilanka.
021 5672250/0215672240(D)
0773464399(M)
0212221766 (F)
ulaganathank@bartleet.com

Lukshmee Agency
S/Lon Delivery Centre
No.23/1, 4th Lane,
Brown Road, Jaffna.
Lukshmee
Organization
Sole Distributors for Bata
No.25,
4th Lane, Brown Road, Jaffna

Uthayan
Guesthouse
No.12, Sivagurunathar Lane,
Kasthuriyar Road, Jaffna
T.P: 021 222 2330
No. 392/6,
Near Kailasapillayar Kovil,
Navalar Road, Jaffna.
T.P: 021 222 5660

GATEWAY CfICT
Gateway
Language And ICT Centre
347, Kasthuriyar Road,
Jaffna.
Phone: 021 5675555,
021 222 7967


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா 1910-2010
## ழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகம்




### ஞானவைரவர் ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும், பல ஆண்டுகள் தொன்மையான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை தனது நூறாவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கின்றது.

அன்னை மீதான அவர்களின் பயபக்தி மற்றும் விசுவாசங்கள் அனைவராலும் பாராட்டப்பட்ட விடயம்.

இதுவரை காலமும் கல்லூரியின் வளர்ச்சிப்படிகளில் பல்வேறு விதங்களில் உதவி,ஒத்தாசை புரிந்து வந்த இச்சங்கம், இன்று போல் என்றும் செழிப்புடனும் ஊக்கத்துடனும் தமது சேவையைக் கல்லூரி அன்னைக்கு வழங்க எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டுகிறேன்.

அவர்களின் பெருமை நிறைந்த நூற்றாண்டு விழாச் சிறப்புற இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

''சர்வே ஜனகா சுகினோ பவந்து''

பிரம்மஸ்ரீ கா.சதானந்தசர்மா பிரதான குருக்கள், ஞானவைரவர் கோயில்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

### அதிபரின் உள்ளக்கிடக்கை....



ஏறக்குறைய நூற்றி இருபது ஆண்டுகள் பழமைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அதன் ஆரம்ப காலங்களில் இருந்தே பழைய மாணவர் சங்கங்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையிலே இன்று நூறாவது ஆண்டிலே காலடி எடுத்து வைத்திருக்கும் பழைய மாணவர் சங்கம்-கொழும்புக்கிளை எமது கல்லூரி வளர்ச்சியிலே பல வழிகளிலும் பங்காற்றி வருகின்றது.

அன்னையின் தேவைகளை உணர்ந்து அவற்றைத் தீர்த்து வைப்பது மைந்தர்களின் கடமை என்பதற்கு உதாரணமாக இவர்கள் பங்காற்றி வருவது எமது கல்லூரியின் சிறப்பினை மெருகூட்டி நிற்கின்றது.

நூற்றாண்டு விழாக்காணும் கொழும்பு பழைய மாணவர் சங்கம், சர்வதேசரீதியாக உலகின் மூலை முடுக்கெங்கும் வியாபித்திருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களின் ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டு வருகின்றது என்றால் அது மிகையாகாது.

இன்றும் நாளையும் 26,27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்திலே நடக்க இருக்கும் இச்சங்கத்தின் நூற்றாண்டு விழாச் சிறப்புற அமைய எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

திரு.வி.கணேசராஜா, அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## விழா அறிமுகம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை தனது நூற்றாண்டு விழா நிறைவினை கொண்டாடும் இவ்வேளையில், இச்சரித்திரம் முக்கியம் பெற்ற மாபெரும் துடுப்பாட்டப் போட்டியை மீள ஆரம்பித்து வைக்கின்றார்கள்.

யாழ்.மண்ணிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், தலைநகரிலிருந்து கொழும்பு இந்துக் கல்லூரியும் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் விற்பன்னர்களை உருவாக்கிவருவது யாவரும் அறிந்ததே. அப்பேற்பட்ட இவ்விரு அணிகளும் மோதிக் கொள்ளும் வடக்கு - தெற்கு மாபெரும் கிரிக்கெட் சமர் இம்முறை பலத்த எதிர்பார்ப்புகளுடன் நடைபெற இருக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டமாக இடம்பெறும் இந்த நிகழ்வு காலை 8 மணியளவில் ஆரம்பமாக இருக்கின்றது. இப்போட்டி தொடர்பான score விவரங்கள் இணையத்தின் மூலமாக உலகெங்கிலும் உள்ள ஆர்வலர்கள் பார்க்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது சிறப்பம்சமாக விளங்குகிறது.

மேலும் 27 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி, எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அணிகள் பங்குபற்றும் சினேக பூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றும் இடம்பெற இருக்கின்றது.

எனவே புகழ்பூத்த கல்லூரியின் புகழ்மிகு மைந்தர்களால் ஒழுங்கமைத்துக் கொண்டாடப்படும் இந்த நிகழ்வுகளில் பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும் ஊக்கம் அளிக்குமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

தூரதேசங்களில் இருக்கின்ற ஆர்வலர் கள் கீழ்வரும் இணையப் பக்கங்களில் இந்த நிகழ்வுகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிய முடியும்.

**விழாபற்றிய தகவல்களுக்கு :** http:// jaffnahindu. org/wall/oba/ colombo. 253 - centenary - celebration - of - jaffna - hindu - oba - colombo.html.

**ஸ்கோர் விவரங்களுக்கு:** http.// www.cricket.jaffnahindu.org/ மேலும், http: // cricket.jaffna hindu.org/



பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணி

## புற வாழ்த்துவோர்




YOGI'S BEAUTY

No. 14, Ebenizer Place
Dehiwala North
Tel : 060 215 0731
Yogisbeauty@yahoo.com

No., 75, Amman Road
Nallur, Jaffna
021 222 2796
060 221 0077

Hot Line: 0777 164 923




RG
இரத்தினகோபால்ஸ்
63,65, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

அமைதியான, மனோரம்மியமான எழில்மிகு சூழலில் ஐஸ்கிறீம் குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகள் உண்டு மகிழ.....

**ராஜா கிறீம் ஹவுஸ்**

37, சேர் பொன்.இராமநாதன் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 3207369
(நாச்சிமார் கோயிலுக்கு நேரெதிராக பல்கலைக்கழகம் செல்லும் வீதி)

டியூலக்ஸ் பெயின்ற் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவகுமரன் என்ரப் பிறைஸ்**
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**
டியூலக்ஸ் காட்சியறை
கண்டி வீதி, சாவகச்சேரி.

**ஈஸ்வரன் ரான்ஸ்போட்சேவிஸ்**

யாழ்.-கொழும்பு
போக்குவரத்துச்சேவை
கொழும்புக் காரியாலயத்தில்
24 மணிநேரமும் பொருள்கள்
பொறுப்பேற்கப்படும்.
201பி, டாம் வீதி, கொழும்பு-12
தொ.பே: 0112 433889, 0777674119
இல.1, கரடிபோக்கு, கிளிநொச்சி.
(செலான் வங்கி அருகில்)
தொ.பே: 021 2285306.
69,115 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2813, 021 222 4317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 கோடி அமெ. டொலருக்காக நாட்டின் இறைமையை அடகு வைக்க முடியாது



## ஜனாதிபதி மஹிந்த ஆவேசம்

கொழும்பு, ஜூன் 26

15 கோடி அமெரிக்க டொலருக்காக இலங்கையின் இறைமையை அடகு வைக்க முடியாது - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை நீடிப்பது தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆறு மாத காலத்திற்கு சலுகைத் திட்டத்தை நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 15 முக்கிய நிபந்தனைகளை விதித்துள்ளது.

எனினும், இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, சலுகைத் திட்டம் தொடர்பில் ஸ்பெய்ன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டுள்ளன எனவும், இத்தாலி ஆதரவு தெரிவித்துள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் கூட இலங்கைக்கு ஆதரவாகவே செயற்பட்டன என்றும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழித்தல், அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்தல் போன்ற நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் உள்துறை விடயங்கள் எனவும், இவற்றுக்கும் சர்வதேச வர்த்தகத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆறு மாத காலத்திற்குள் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்வது நடைமுறைச் சாத்தியப்பாடற்றது எனவும், இதனால் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டத்தை பெற்றுக் கொள்ளும் முனைப்புகளை கைவிடுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சந்தை வாய்ப்புக்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கட்டம் கட்டமாக அவசரகாலச் சட்டம் தளர்த்தப்பட்டு வருகிறது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகித்த பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு சக்திகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தயாரில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த இருவர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கிய அறிக்கையின் பின்னரே, இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருட டிசெம்பர் மாதத்திற்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியும் எனவும், நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளின்போது வெளிநாட்டு சக்திகளிடமிருந்து சொற்ப அளவிலான உதவியே கிடைக்கப் பெற்றது எனவும், அரசே கூடுதல் முனைப்புடன் செயற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு 15 வீத வரி அறவீடு செய்யப்பட வேண்டுமென அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

எனினும், இந்த யோசனைத் திட்டம் நடைமுறைச் சாத்தியப்பாடற்றதென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.(சி)

# புலிகளின் பாடல்களை போனில் வைத்திருந்த மூவர் கிழக்கில் கைது

கொழும்பு, ஜூன் 26

விடுதலைப் புலிகளின் பாடல்களை கைத்தொலைபேசியில் வைத்திருந்த மூன்று இளைஞர்கள் காத்தான்குடிப் பொலிஸார் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் வாகரை, நாவற்குடா மற்றும் ஆரையம்பதிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியாது

## பிரதமர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 26

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அரசு ஒருபோதும் அடிபணியாது என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட இராணுவத்தினர் மத்தியில் உரை யாற்றியபோதே இவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்ததால் சில நாடுகள் ஏமாற்றம் அடைந்துள்ளன. அந்நாடுகளில் பயங்கரவாதம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஆகவே அவை வெட்கப்படுகின்றன.

எனவே, இலங்கை அரசின் மீது குற்றம் காண முயற்சிக்கின்றன. இதனால்தான் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. இப்படியான நாடுகளின் அழுதங்களுக்கு நாம் அடி பணியவே மாட்டோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# படையினருக்கு எதிரான விசாரணைக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது

## ஐ.தே.க. எம்.பி. சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

படையினருக்கு எதிரான சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச சக்திகளுக்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சுமிஹிரிகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டை பாதுகாப்பதற்காக பல்வேறு தியாகங்களை மேற்கொண்டு யுத்தத்தை முன்னெடுத்த படையினரை சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்த அனுமதியளிக்கப்படமாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# அரசின் அரசமைப்புத் திருத்தங்கள் நாட்டுக்கு எதிரான மாபெரும் பாவம்

## ரணில் விக்கிரமசிங்க விசனம்

கொழும்பு, ஜூன் 26

அரசால் மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்புத் திருத்தங்களை ஓர் பாவமாகக் கருதுகிறேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவால் எழுதப்பட்ட நூல்களை வெளியீடு செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவசரமாக அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் சில அடிப்படைச் சட்டங்களை மாற்றியமைக்க அரசு முயற்சித்து வருகிறது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளும் அரசின் முனைப்பை நாட்டுக்கு எதிரான மாபெரும் பாவமாகத் தாம் கருதுகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிர்வாகக் கட்டமைப்பை அரசியல்மயப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்படக் கூடாது எனவும், சுயாதீனமான முறையில் நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் ஆங்கில மொழியின் ஆதிக்கம்

## தமிழ்ச் சான்றோர்கள் - மக்கள் விசனம்

கொழும்பு, ஜூன் 26

கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆரம்ப விழாவில் ஆங்கில மொழியே ஆதிக்கம் செலுத்தியதால், மாநாட்டுக்கு வந்த தமிழ் மக்களிடையே மனச்சஞ்சலம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் ஆங்கிலத்தில் உரையாற்றுபவர்களுக்கு மொழி பெயர்ப்பு வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழுவினரால் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அந்த ஒழுங்குகள் எதுவும் செய்யப்படவில்லை.

இதனால் மக்கள் விசனத்துடன் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக ஆளுநர் பர்னாலா, ஜனாதிபதி பிரதீபா பட்டீல், பின்லாந்து அறிஞர் உட்பட அனைவரும் ஆங்கிலத்தில் பேசினர். இவர்களின் பேச்சுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை.

அத்துடன் ஏனைய தமிழர்களும் ஆங்கிலம் வடமொழி எல்லாம் கலந்தே உரையாற்றினர்.

இதனால் மா நாட்டிற்கு வந்திருந்த தமிழ் சான்றோர்கள் அனைவரும் மனக்குமுறலுடன் வீடுதிரும்பினர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன.(சி)

# போர்க் குற்றங்கள் தொடர்பில் அரசின் சாட்சியாளராக கே.பி.

## அதற்கு சட்டத்தில் இடமுண்டு என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, ஜூன் 26

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை அரசிற்கு எதிரான போர்க் குற்றங்கள் தொடர்பில் பதிலளிக்கும் அரசின் சாட்சியாளராக பயன்படுத்தப்படுவார். இதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வட பகுதிக்கு கே.பி. விஜயம் செய்தார் என ஊடகமொன்று தகவல் வெளியிட்டமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை அரச சாட்சியாளராக ஏற்றுக்கொள்ள சட்டத்தில் இடமிருக்கிறது என்றும், ஒருவர் தற்போதைய நாட்டின் பிரச்சினை மற்றும் சர்வதேச மட்டத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில், அரசுக்குப் பயனுள்ள விடயங்களில் உதவுவாராக இருந்தால், அரசு என்ற வகையில் முடியுமான விடயங்களை மேற்கொள்ள முடியும் என்றும்" அவர் தெரிவித்தார்.

இந்தவேளையில், உலக நாடுகளுடன் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசால் கைதுசெய்யப்பட்டுள்ள கே.பி. கடந்த வாரம் வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமுக்கும் அரசால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனவும், அத்துடன் இடம்பெயர்ந்த மக்களையும் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களையும் அவர் சந்தித்துள்ளார் எனவும், அவர் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.



இந்நிலையிலேயே அவர் தொடர்பாக அரசு எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதன் விவரம் வருமாறு -

கேள்வி - போர்க் குற்றம் தொடர்பாக அரசின் மீதே குற்றம்சுமத்தப்பட்டுள்ளது எப்படி கே.பியை சாட்சியாளராக்க முடியும்?

பதில் - புலம்பெயர் தமிழர்கள் குற்றம் சுமத்துவதால் கே.பியை அரசு சாட்சியாளராக பயன்படுத்த முடியும் - என்று அமைச்சர் கூறினார்.

கே.பியை அரசு விடுதலை செய்யுமா என்ற கேள்விக்கு அமைச்சர் ரம்புக்வெல்ல பதிலளிக்கவில்லை. (சி)

# அமைச்சரவை முடிவுகள்

கொழும்பு, ஜூன் 26

அமைச்சரவை நேற்றுமுன்தினம் கூடிய போது சில முடிவுகளை எடுத்துள்ளது.

அவற்றின் சில முடிவுகள் வருமாறு:

* திரிபோஷ தயாரிப்பை மீண்டும் அரசு பொறுப்பேற்கும். தற்போது திரிபோஷ உற்பத்தி தனியார் நிறுவனம் ஒன்றிடம் உள்ளது.
* வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான அனுமதி பெறுவதை இலகுபடுத்த முதலீட்டுச் சபைக்கு உதவும் வகையில் குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் குறிப்பிட்ட சில அமைச்சுக்களின் செயலாளர்கள் அங்கம் வகிப்பர்.
* பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை முழுமையாகக் காப்புறுதி செய்யப்படும்.
* பொலன்னறுவை வைத்தியசாலை மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்படும்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளை யாக அவர்கள் காணப் படுகின்றனர்.

புதுமை மாதா கோயி லின் முகப்பும் (Facade) அதனோடு கூடிய ஒரு பகுதி நடுக்கூடமும், சிறகு மண்டபமும் (have and asiles) பண்டைய கட்டுமானத் தின் தொடர்ச்சியாக இன்று காணப்பட்டாலும், அதன் பலிபீடமும்,

# ...தா கோயில் : நீண்ட பயணம்



நடுக்கூட கூரை தாங்கு தூண்கள்

அதனுடன் கூடிய முற்பகுதியும் மாற்றப்பட்டுள் ளன. கோயிலின் முகப்பிற் காணப்படும் தேவால யத்தின் வருங்கால திட்ட முன்வரைபின் படி பழைய பகுதியும் இனி இல்லாமல் போய் கோயில் முழுதாகப் புதிய தோற்றம் பெற இருக்கிறது. புதுமை மாதா மட்டுமன்றி பண்டைய பல கிறிஸ் தவ தேவாலயங்களும், சைவக் கோயில்களும் இவ்வாறுதான் செய்து வரு கின்றன. புதுமை நாட்டம், பழையவற்றின் அழிவு, யுத்தத் தால் ஏற்பட்ட சேதம் பொருளா தார முன்னேற்றம் எனப் பல காரணங்களால் பழையதை அவசரமாக உதறி, புதிய வற்றை நோக்கி விரையும் போக்கு யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. புதுமை மாதா கோயிலும் இந்தச் சூழலுக்கு விதிவிலக்கல்ல.

கவலையான விடயம் என்னவெனில் எமது மாதா கோயில் நீண்ட பயண வர லாற்றின் காண்பியச் சாட்சி யாக இருக்கக் கூடிய கட்டுமானங்களை இழந்து, நேற்று முளைத்த புதிய ஒரு கட்டுமானம் போல அது மாறப் போகிறது என்பதுதான்.

பிற பண்பாடுகளில் இவ் விதமான பண் டைய கட்டுமானங்களை மாற்றியமைக்காது, விஞ்ஞான பூர்வமான முறைகளால் பழைய வற்றின் அழிந்து செல்லுகைகளைத் தடுத்து தமது பெருமைச் சின்னமாக அதனைப் பேணும் முறையே தலையாய போக்காக உள்ளது. தவிர்க்க முடியாத அழிவு - இயற்கையாக வோ , செயற்கையாகவோ நடந்துபோனாற் கூட பழைய கட்டுமானத்தை மீள எஞ்சிய வற்றோடு சேர்த்தமைத்தலே மரபாகவுள்ளது. மேலைத்தேயத்தினை கண்டபடி பின்பற்ற விரும்பும் நாம் அவர்களின் சிறப்பான விடயங்களை மட்டும் ஏறெடுத்தும் பார்ப் பதில்லை. புதுமை மாதா கோயிலுக்குள் மிஞ்சியிருக்கும் பழைய துண்டம், எவ்வாறு உள்ளூர் மரத் தூண் செதுக்கு, மேற்கத்தைய கூரை அமைப்பு உள்ளிட்ட விடயங்களைச் சேர்ந்த ஒரு புதிய யாழ்ப்பாண கிறிஸ்தவத் திறகேயான சிறப்பு வகை வெளிப்பாட்டை கொண்டிருந்தது என்பதற்கான சான்றாகும். அது இனி இல்லா மற் போய்விடும். அதே சமயம் இவ்விதம் அறிந்தோ அறியாமலோ பிடுங்கப்பட்டவற் றினை மீள ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒருவகையில் பேணும் நடைமுறையும் நம் மிடம் இல்லை. இதை யொத்த பண்டைய கிறிஸ்தவ மரத்தூண்கள் பருத்தித்துறை தேவாலயமொன்றிலிருந்து அகற்றப்பட்டு மாற்றி அமைக்கும்போது உள்ளூர் வியாபாரி களால் அவை வாங்கப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப் பட்டதை ஒரு கையாலாகா சாட்சியாக நான் பார்த் திருக் கின்றேன். இவ்வாறான ஒரு நில வரம் இனியும் இனியும் ஏற்படாது கிறிஸ்தவ சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எளிமை யான பரோக்கியப் பாணி (Baroqne Style) முகப்பும் (இதனோடு சேர்ந்துள்ள முகப்பு மண்டபம் காலத்தால் பிற்பட்டதாக இருக்க வேண்டும்) உள்ளூர் மரத்தூண் மரபும் சேர்ந்து கலந்து புதுமை மாதாவின் பழைய அமைவினை பேணிப் பாதுகாக்க ஏதாவது வழியுண்டா? ★★

ம. திருக்குமரன்




தொகுப்பு: ஒளண்யன்

# இது இந்தக் காலம்

தொல்புரம் சி.கதிர்காமநாதன்



# கேள்விகளுக்குப் பதில் இல்லை

கூடாநாடு களை கட்டத் தொடங்கி விட்டது. அப்பாக்கள், அம்மாக்கள் பிள்ளைகளோடு இரவிலும் வெளியே தலை காட்டத் தொடங்கி விட்டார்கள். " என்ன ராத்திரி வந்தன் ஆக்களை காணேல்லை வீடு பூட்டிக் கிடந்தது''

'ஓ... அதுவே ராத்திரி ரவுனுக்கு போட்டம் பிள்ளையளும் பிறந்த நாள் தொடங்கி வீட்டுக்குள்ளதானே வெளி உலகம் தெரியாமல் அடைந்து கிடந்ததுகள்.. அது தான் " பம்பலாய் போய் வந்த னாங்கள். எனவே இனி மேல் பிள்ளைகளுக்கு வெளியுலகம் காட்ட பெற்றோர்கள் கிளம்பி விடுவார்கள். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு வெளியுலகம் என்பது தெரிய வேண்டியது ஒன்றுதான், வெளியே போனால் பலவற்றைப் பார்க்கலாம், ரசிக்கலாம், அனுபவிக்கலாம். (சில நேரங்களில் அடிகளும் விழும்) இதனால் பல கேள்விகள் மனதில் தோன்றும், பல கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்.

பிள்ளைகளை 'சும்மா' கொஞ்ச நேரம் சைக்கிளில் கூட்டிச் சென்றாலே எவ்வளவு கேள்விகள் கேட்கிறார்கள். விண்ணிலிருந்து பூமிக்கு தாவுவார்கள், பூமியிலிருந்து விண்ணுக்கு தாவுவார்கள்.

கேள்விகள் கேள்விகள்

எல்லாக் கேள்விகளுக்கும் எங்களுக்கு விடை தெரியுமா? நிச்சயமாக எல்லாவற்றுக்கும் விடை தெரியப் போவதில்லை. விடை தெரிந்தாலும், அதனை எப்படிச் சொல்லுவது என்ற நிலையில் நாங்கள் திணறிப் போவோம்.

குழந்தைகளின் உலகம் பெரியது. தனித்துவமானது. குழந்தைகளுக்கு நாங்கள் சொல்லிக் கொடுப்பதை விட, நாங்கள் குழந்தைகளிடமிருந்து பல விடயங்களை தெரிந்து கொள்கிறோம்.

குழந்தைகளின் கேள்விகள், சில வயதுக்கு ஏற்ப குழந்தைத் தனமாகவும் இருக்கும். சிலவேளை வயதுக்கு மீறிய பெரியதனமாகவும் தென்படும்.

என்னவாக இருந்தாலும் நாங்கள் பொறுமை சாலிகளாக இருக்க வேண்டும். ஆத்திரப்படவோ, சினம் கொள்வதோ விரும்பத்தக்கதல்ல. கேள்விகள் மூலம் பிள்ளைகளின் அறிவு விருத்தியடைகிறது. கேட்டும் கேள்விகளுக்கு நாங்கள் சொல்லும் விடைகள், சரியானதாகவும், தெளிவாகவும், விளங்கிக் கொள்ள கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அது மழுப்பலாகவோ, பொய்த்தனமாகவோ இருக்கக்கூடாது.

மகனை "ஸ்கொ(லை)சிப்" ( 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்) நேரம் சைக்கிளில் கூட்டிச் சென்று கொண்டிருந்தேன். ஒருநாள் மகன் கேட்டார்.

"பெரிசாகிறது எண்டால் என்னப்பா?"

..................................................

(என்ன நல்லா மாட்டுப் பட்டுப் போனீர்)

" அப்பா சொல்லுங்கோ பெரிசாகிறது எண்டால் என்ன?'' நான் மகனுக்கு விடை சொல்ல வேண்டும். "அப்பு.. ஆம்பிளைப் பிள்ளைகளுக்கு மீசை முளைக்கத் தொடங்கினால் அவன் பெரிசாய் வந்துட்டான் என்று சொல்லுவினம்... அது மாதிரி பொம்பிளைப் பிள்ளையள் பெரிசாகிற தெண்டால்.....''

விஷயத்தைச் சொல்லி முடித்தேன்.

"அப்ப எங்கட தங்கச்சியும் ஒரு நாள் பெரிசாவாவா?''

விடையைச் சொல்ல வேண்டியதுதான் மறைக்கத் தேவையில்லை.

"உதுகள் உந்த வயசில, உனக்குத் தேவையில்லை. உந்த விசர் கேள்விகளை யார் கேட்கச் சொன்னது?'' என நாங்கள் கொடுக்கு கட்ட வெளிக்கிட்டால்... குழந்தைகளின் தேடல் வேறு விதமாக இருக்கும். அப்படியான ஒரு சம்பவத்தை இங்கே பார்ப்போம்.

குடும்பம் எப்படி உருவாயிற்று? என்னும் தலைப்பில் ஆசிரியர் கட்டுரை எழுதச் சொன்னார். வீட்டிற்கு வந்த ஒன்பது வயது சிறுமிக்கு சந்தேகம். கட்டுரை எழுத முன் தாயாரிடம் கேட்டாள்.

"அம்மா நான் எங்கிருந்து வந்தேன்...?''

திடுக்கிட்ட தாய் சமாளித்தபடி

"கொக்கு கொண்டு வந்து போட்டது மகளே..'' என்றாள்.

"சரி அம்மா நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?''

"என்னையும் கொக்குத்தான் கொண்டு வந்து போட்டது.''

"அப்படியானால் பாட்டி எங்கிருந்து வந்தார்?''

"பாட்டியையும் கொக்குத்தான் கொண்டு வந்து போட்டது.''

சிறுமி கட்டுரை எழுத போய்விட்டாள். அந்தப் பக்கமாக வந்த தாயாருக்கு எதேச்சையாக கட்டுரையை பார்க்க நேர்ந்தது. வாசித்தாள். அதில் இப்படி எழுதியிருந்தது - 'கடந்த மூன்று தலைமுறைகளாக எங்கள் குடும்பத்தில் ஒருவருமே இயற்கையான முறையில் பிறக்கவில்லை.' ★★★★★

# ...நாடகங்கள்''

தேவையில்லை என்றுவிட்டு பின் அதைப் பிழையாக அணிந்த போது சிரிப்பால் பார்வை யாளர் கூடம் அதிர்ந்தது. இது பராக்கிரம நிரியல்லவின் நுட்பமான நகைச்சுவை சார்ந்த அரங்க அறிவிற்கும் அனுபவத்திற்கும் சாட்சி சொல்லியது.

மிக நுணுக்கமான நாடக வேலைப்பாடுகள் அங்கு காணப்பட்டன. நடித்து விளையாடல் அல்லது விளையாடி நடித்தல் என்ற சிறுவர் அரங்கு பண்பிற்கு அமைய கரடிக்கு நடித்தவரும் நரிக்கு நடித்தவரும் செய்தது மிக அழகானது, பாராட்டத்தக்கது. கோமாளி நடிப்பு முறையும், மேடையை வெவ்வேறு விதமாக பயன்படுத்தியதும், தேனீக்களின் கைவிரல்கள் தொடர்ந்து ஆடியபடி இருந்ததும் 1-2-3-4-5 என்ற இலக்கங்களை பாடலாக்கி அதற்குள்ளேயே ஒரு சம்பவத்தை நிகழ்த்தி முடித்ததும் மகிழ்வைத் தந்தது. கரடிக்கு நடித்தவர் தனது குரலில கரடி போலவும் , மற்ற பாத்திரத் துடன் கதைக்கும் போது ஒரு விதமாகவும், பார்வையாளருடன் கதைக்கும் போது இன்னொரு விதமாகவும் பேசிய குரல் முறைமை பாராட்டுக்குரியது. நரியும் கரடியும் மேடையைக் கலக்கினர்.

சிறுவர்களுக்கான கல்வியூட் டல், ஒழுங்கு என்பன இந்த நாடகத்தில் முதன்மைப்பட்டிருந் தது. நாடக முடிவில் கரடியையும் நரியையும் தண்டிப்போமா என்று பார்ப்போரிடம் கேட்டபோது 95% சிறுவர்கள் "ஆம்'' என்றும் 5% "இல்லை'' என்றும் கூறினர். பின்னர் நாடகத்தில் அவர்களை முதல் தடவையாக மன்னிப்போம் என்று கூறி நாடகம் முடிந்தது.

" தேவலோகப் பயணம்'' எனும் நாடகமும் மகிழ்ச்சியாக பார்ப்பதற்கான ஊர் புறக்கதையை உரைஞரின் உதவியோடு செய்து காட்டப்பட்டு ஒரு செய்தியும் வெளிப்படுத்தப்பட்டது. நடித்தவர்கள் எல்லோரும் நன்றாக நடித்திருந்தனர். அதிலும் குடிகாரப் பாத்திரத்தின் பொருத்தப்பாடும், அந்த சூழலின் இயல்பும், ஆர்வத்தை தூண்டி கிராமத்தின் உண்மைத் தன்மையை அதிகரித்தன. இந்த நாடகம் நகைச்சுவையோடு வெளிப்பட்டது.

சில வகையான விடயங்களை கவனத்தில் நல்லது போலப் பட்டது. குறிப்பாக நரியையும் கரடியையும் முதல் தடவை மன்னித்து அடுத்த தடவை செய்தால் அவர்களைப் பொலிஸில் ஒப்படைத்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் தாமே தண்டிக்கக்கூடாது என்பது சிறுவர் மனதில் வர அதற்கான அத்திபாரத்தை இடலாம்.

" தேவலோகப் பயணம்'' நாடக ஆற்றுகையில் போடப்பட்ட உடுப்புகளை இந்தச் சூழலிற்கு ஏற்ப மாற்றினால் நன்றாயிருக்குமோ என எண்ணத் தோன்றியது. கரடியின் பேச்சை இன்னமும் அறுத்துறுத்து பேசலாம். பாடல் வரியில் சில விளங்காது இருந்தன. மற்றும்படி எல்லாம் சிறப்பாக இருந்தன. எமது சிறுவர் அரங்கு அதிகம் மோடிப்படுத்தப்பட்ட நடிப்பும் இந்த நடிப்பு யதார்த்தத்தையும் உள்வாங்கியிருந்தது குறிப்பிடத் தக்கது. மொத்தத்தில் போர், சமாதானம் என்பதற்கப்பால் நல்ல பார்வையாளனாக இருந்து நல்ல நாடகத்தைப் பார்த்த அனுபவம் வந்தது. ஒரு மாதத்திற்கு முன்பு இங்கு வந்து ஒரு சதுர அரங்க கூடாரம் அமைத்து நடிகர்கள் தாங்களே சமைத்து சாப்பிட்டு மேடைகட்டி, ஒத்திகை பார்த்து நாடகம் செய்தது முதல் அனுபவமாயிருந்தது. ★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனஅமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களை தள்ளி வைக்கலாம். வியாபாரிகள் எதிர்பார்த்த பணம் வசூலாகாமல் அதிருப்தி அடையலாம். சிறிய வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் நேரம் காத்திருக்கலாம்.

### இடபம்



ஆசைப்பட்ட சில பொருள்களை அதிக விலை கொடுத்தாவது வாங்குவீர்கள். நண்பர்கள் வழியில் முக்கியமான உதவிகள் கிடைக்கலாம். உறவினர் ஒருவரைப் பற்றி மற்றொரு உறவினரிடம் பெருமையாகப் பேசுவீர்கள். எதிர்பாராத உதவி கிடைக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

### மிதுனம்



இரண்டு நாள்களாக நீடித்த மனக்குழப்பங்கள் முடிவுக்கு வரும். தொழில் விடயமாக முக்கியமான ஒருவரை சந்திக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒன்று நடக்கலாம். வாகன யோகத் திற்கு வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் அன்புக்கு கட்டுப்படுவீர்கள்.

### கடகம்



போட்டிகள், எதிர்ப்புகளை சந்திக்கலாம். கேட்ட ஒருவருக்கு உதவி செய்து விட்டு நீங்கள் பணம் இல்லாமல் தவிக்கலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள்.

### சிங்கம்



மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அலைச்சல் இல்லாமல் சுலபமாக முடிவுக்கு வரும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நபர்களை அடையாளம் கண்டுகொள்வீர்கள். நீங்கள் உதவி செய்ய முன்வந்தும் சிலர் அதை மறுத்து விடலாம். சில விடயங்களில் மற்றவர்களை பார்த்து சபலப்படுவீர்கள்.

### கன்னி



கடந்த சில நாள்களாக மனதில் குடி கொண்டிருந்த ஆசை ஒன்றுக்கு நிறைவேறும். சுபபோக விடயங்களுக்காக கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். பெண்கள் உதவி கிட்டும்.

### துலாம்



உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நேரம் காத்திருந்தாவது முக்கிய வேலை ஒன்றை முடிப்பீர்கள். உங்களிடம் பொய் சொல்லி சிலர் காரியம் சாதிக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

### விருச்சிகம்



உடல் உபாதைகள் நீங்கி உற்சாகமாக செயற்படுவீர்கள். தொழில் விடயங்களில் புதிய அணுகுமுறையை கடைப்பிடித்து கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். சிலர் மீது கோபம் கொள்ளலாம்.

### தனுசு



அடுக்கடுக்காக பல வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்வீர்கள். உடன் பிறந்தவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கடந்த காலத்தில் செய்த தவறு ஒன்றை நினைத்து இப்போது வருத்தம் அடைவீர்கள். வேலையாள்கள் திடீர் விடுமுறையால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். தர்ம காரியம் செய்வீர்கள்.

### மகரம்



நண்பர் ஒருவர் மூலம் எதிர்பாராத உதவி கிடைக்கலாம். குடும்பத்தினருடன் சந்தோஷமாக, பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். ஆனந்தமான நாள்.

### கும்பம்



தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதை பற்றி கவலைப்படாமல் துணிச்சலாக சில வேலைகளைச் செய்வீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். எதிர்ப்பு விலகும்.

### மீனம்



உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பல நாள்களாக கைவிட்ட பழக்கம் ஒன்றை மீண்டும் தொடரலாம்.

பிறர் பேச்சை கேட்டு காரியத்தில் இறங்க வேண் டாம். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படும் அல் லது பரிதாபப்படும் நிகழ்ச்சி நடக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.


## Vacancy Notice - Walk in Interview

We seek people for these new positions for Jaffna, Kilinochchi, Vavuniya Branches

**Minimum Qualifications and Work Experience:**

**Accountant**

★ G.C.E A\L with Accountancy qualification.
★ The ideal candidate should have at least 3 years related work experience.
★ Be flexible in his\her working hours and perform other duties as directed by manager.
★ Ability to speak English.
★ Competencies in computers including MS Office & E-mail

**Computer Typist**

★ G.C.E A\L and partly or fully 3 years related work experience.
★ Typesetting - English &Tamil.
★ Competencies in computers including MS Office, Graphic Designing & E-mail
★ Ability to speak English.

**Sales Executive Officer**

★ G.C.E A\L and partly or fully 3 years work experience in Maketing
★ Ability to actively seek to improve target performance
★ Well - developed and effective communication (verbal)

**Interested candidates should come to our office on 27 th June 2010 at 3.00 P.M**
**Thirumurugan com Net**
**259, K.K.S Road, Jaffna.**

[சி/568661]

## கணனிக் கல்வி

* Ms office * DTP * Hardware * Web Design
* Computerized Accounting * Graphic Design
* Internet & E-mail * Kids Program

அனைத்துக் கற்கை நெறிகளும் தனிப் பட்ட கவனிப்புடன் கற்பிக்கப்படும்.

*Sky Computer (pvt) Ltd*
162, Main Steet, Jaffna. Tel: 0212221417

## வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 2பரப்புக் காணியுடன் கூடிய மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0112714842
00333 25495063


## விளையாட்டு விழா

கைதடி,ஜூன்26

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் தி.துபிலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

(50-9-288)


## நாளை

இலவச புலமைப்பரிசில் பரீட்சை அனுமதிகளுக்கு

விரையுங்கள் !

வெற்றி பெறுங்கள்.

## MULTIMEDIA

அனிமேஷன் பயிற்சிக்கான புலமைப்பரிசில் பரீட்சை

June 26-27 (சனி-ஞாயிறு)

இலவச அனுமதிகளை

ASIAN CSC
COMPUTER EDUCATION

யாழ்.நகர், சாவகச்சேரி மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொல்லாம்.

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


## நீங்கா நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 ★ 07 ★ 1943
மறைவு 07 ★ 07 ★ 2009

திருமதி
செல்லையா பூமாதேவி
திதி: பூர்வபக்க பூரணை

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 ★ 11 ★ 1943
மறைவு 13 ★ 08 ★ 2007

பெரியதம்பி செல்லையா
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
திதி: பூர்வபக்க பிரதமை

அன்பினால் இனிய அமுதூட்டி எம்மை வளர்த்தெடுத்து
அறிவினால் பெருமைபெற என்றுமே வழிகாட்டி வைத்து
இன்பமே நிழலதனில் நீவிர் எம்மை உறங்கவைத்து
உயர்வுறு வாழ்வு தந்த எம் இனிய தெய்வங்களே!
உயிர்வரை உம்மை நாம் மனத்திடை நினைத்திடுவோம்.

உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கைதடி தெற்கு,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையின் அலுவலகம் அடுத்த 3 மாதங்களுக்குள் கிளிநொச்சியில்

## ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணிப்புரை

கிளிநொச்சி,ஜூன்26

வடக்கு மாகாண சபையின் அலுவலகம் கிளிநொச்சியில் இயங்கவுள்ளது. இதற்கான உத்தரவை வடக்கு மாகாண ஆளுநர், மாகாண அமைச்சின் செயலாளருக்கும் விடுத்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி அமைச்சர்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தில் இதற்கான அறிவித்தலை ஆளுநர் விடுத்தார்.

மாகாண சபையின் அலுவலகத்தை அடுத்த மூன்று மாதங்களுக்குள் கிளிநொச்சியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி அறிவுநகரில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட தமிழ் பல்கலைக்கழகக் கட்டடத்தில் மாகாண சபையை இயக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளதாவும் ஆளுநர் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு போதிய இடம் இல்லாத பட்சத்தில் கிளிநொச்சியில் வேறு கட்டடங்களில் மாகாண அமைச்சின் திணைக்களங்களை இயக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டபடி மாங்குளத்தில் மாகாண சபை அலுவலகத்தை இயக்கப் போதிய கட்டடவசதி இல்லாமையால் இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் அங்கு தெரிவித்தார்.

எனினும் மூன்று வருடங்களுக்குள் மாங்குளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும் எனவும் ஆளுநர் அங்கு குறிப்பிட்டார். (50)

## மண்ணித்தலையில் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்26

பூநகரி, வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள தமது குடியிருப்புக்களை பார்வையிட்டு அவற்றைப் புனரமைப்பதிலும் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டியுள்ளனர்.

சிலர் தற்காலிகமாக குடிமனைகளை அமைத்து அங்கு மீளக்குடியமர்ந்துள்ளனர். (50-224)




## மன்னாரில் அதிகளவில் களவுபோகும் சைக்கிள்கள்

மன்னார்,ஜூன்26

சமீப காலமாக மன்னாரில் சைக்கிள்கள் அதிகளவில் களவாடப்படுவதாகத் தெரிகின்றது. ஆயினும் களவு கொடுத்த அதன் உரிமையாளர்கள் எவரும் காவல் நிலையத்தில் புகார் தெரிவிப்பதில்லை.

மன்னாரில் வாகனங்கள் தொகை அதிகரித்துள்ளன. இதில் சைக்கிள்கள் மிகவும் அதிகம். இவைகளுக்கு நகர, பிரதேச சபைகள் உரிமப்பத்திரங்கள் எதுவுமே பெறுவதுமில்லை.

இந்த நிலையில் சைக்கிள் திருடர்களுக்கு இது மிகவும் இலகுவாகிறது. இங்கு அனேகமாகப் போதைவஸ்துக்காரர்களும் சிறுவர்களும் இத்தொழில் தைரியமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே மன்னார் நகர சபையும் பிரதேச சபைகளும் சைக்கிள்களுக்கான 'லைசன்ஸ்' வழங்கும் முறையை உடன் அமுல் நடத்தும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-80)

## வன்னியில் மூன்று தபாலகங்களின் மீள்நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன்26


வன்னியிப் பகுதியில் மூன்று தபாலகங்கள் மீள்நிர்மாணம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

நானாட்டான், கண்டக்கல், யோகபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள தபாலகங்களே புதிதாகக் கட்டியெழுப்பப்படவுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளின் போது இந்தத் தபாலகங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. மேலும் வன்னியில் சேதமடைந்த ஏனைய தபாலகங்களையும் விரைவாகப் புனர்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-224)



எதுவித செதிகளுமின்றி தனியார் கடையொன்றில் இயங்கிவரும் கிளிநொச்சி பிரதம தபாலகத்தையும் தபாலகத்தின் பழைய கட்டடப் புனரமைப்பிற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படாத நிலையில் முட்கம்பிகளால் அடைக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

# இறுதிப் போரின்போது கைவிடப்பட்ட சைக்கிள்களை திருத்தியமைக்க 10 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவு

## வாகனங்களை கையளிக்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர்

கிளிநொச்சி,ஜூன் 26

போரின் போது கைவிடப்பட்ட வாகனங்களைச் சட்டரீதியாக உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறுகிறது. இவற்றைக் கொண்டு வந்து ஓரிடத்தில் சேர்ப்பதற்கு நான்கு மாதங்கள் எடுத்தன. அத்துடன் இந்தச் சைக்கிள்களைத் திருத்தியமைத்தல் மற்றும் இதர செலவுகளாக பத்து மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது பொதுமக்களால் கைவிடப்பட்ட வாகனங்களை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் மற்றும் படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மோட்டார் வாகனங்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் எவ்வித திருத்தப் பணிகளும் செய்யப்படாமல் வழங்கப்பட்டன. சைக்கிள்கள், வாகனங்கள் திருத்தியமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் உரையாற்றிய வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சேகரிக்கப்பட்ட வாகனங்களில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்களும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும் அடங்குகின்றன.

இவற்றைத் திருத்தியமைக்க ஒத்துழைப்பு நல்கிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் கீழ் துவிச்சக்கரவண்டிகள் புனரமைப்புக்கு உதவிய 'நைற்றா' நிறுவன ஊழியர்களுக்கும் எனது நன்றிகள் - என்றார். (50-16-405)

## வன்னிப் பகுதியில் இப்போது கொப்பறாவுக்கு மவுசு

கிளிநொச்சி,ஜூன்26

வட்டகச்சி, உருத்திரபுரம், ஒட்டுசுட்டான், வற்றாப்பளை போன்ற இடங்களில் உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் கொப்பறா கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் கொப்பறாக்கள் குருநாகலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலைகளுக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தமது வளவுகளில் கடந்த 3 வருடங்களில் விழுந்த தேங்காய்கள் காய்ந்து கொப்பறாவாகிய நிலையில் உள்ளன என்று மீளக்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவற்றைச் சேகரித்து வைத்த மக்கள் தற்போது இவ்விதம் விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

தமக்கு சில ஆயிரம் ரூபாக்கள் இந்த விற்பனை மூலமாக வருமானம் கிடைத்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர். (50-121)

## மன்னார் மாவட்டத்தில் நேற்று பொசன் கொண்டாட்டங்கள்

மன்னார்,ஜூன்26

மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை பொசன் நோன்மதி தின வைபவங்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. மன்னாரில் உள்ள பௌத்த ஆலயங்கள் காவல் நிலையங்கள், இராணுவ முகாம்கள் பொது இடங்களில் இவ்வைபவங்கள் கொண்டாடப்பட்டன. இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் தள்ளாடி இராணுவமகாம், மாந்தை மேற்கு 215ஆவது 212 ஆவது படைத் தலைமை, மன்னார் நகர கொமாண்டர், மன்னார், முருங்கன், தலை மன்னார், விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, பூநகரி ஆகிய காவல் நிலையங்களிலும் அதையொட்டிய காவலரண்களிலும் வெகு சிறப்பாக நடந்தேறின.

பொலிஸ் நிலையம் ஒழுங்கு செய்திருந்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு மன்னார் கனகதுர்க்கை அம்மன் சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

பிரதான இருநாள் நிகழ்வுகள் நேற்றும் இன்று சனிக்கிழமையும் மன்னார் தனியார் பேருந்துத் தரிப்பிடத்தில் நடைபெற்று வருகின்றன. இருநாள்களும் சுமார் நான்காயிரம் உணவுப் பார்சல்களுடன் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் விசேட ஆராதனைகளும் பக்தி கீதங்கள் இசைத்தல் மற்றும் இரவில் வண்ண விளக்குகள், வெளிச்சக்கூடுகள் அலங்காரங்களும் இடம்பெற்றன. (50-80)

## பிரதான வீதிகள் புனரமைக்கப்படவில்லை

கிளிநொச்சி,ஜூன்26

கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம், விஸ்வமடு, கண்டாவளை, கௌதாரி முனை, முக்கொம்பான், பூநகரி போன்ற பிரதான இடங்களுக்குச் செல்லும் பொதுமக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் வீதிகள் புனரமைக்கப்படாமையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


அத்துடன் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களும் விரைவாகப் பழுதடைவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதிகள் குண்டும் குழியும் நிறைந்த வீதிகளாகக் காணப்படுகின்றன. இதனால் அரச ஊழியர்கள் விரைவாக தமது கடமைக்குச் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்த வீதி புழுதி நிறைந்தவையாகக் காணப்படுவதால் பயணம் செய்வோரின் ஆடைகளில் உடனே அழுக்குப் படிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (50-325)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்...




## தமிழ் மொழிக்கும் ஏனைய திராவிட மொழிகளுக்கும் இடையேயான தொடர்புகளை ஆராய்வது அவசியம்

### செம்மொழி மாநாட்டில் பேராசிரியர் கா.சிவத்தம்பி



தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்புகளை ஆராய வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் பல உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும் இவ்வாறு செம்மொழி மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வில் தலைமை தாங்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பி தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் உரையாற்றுகையில் - இந்தியத் துணைக்கண்டத்தில் முக்கியத்துவம் மிக்க தலைவராக விளங்குகிறார் கருணாநிதி. உலகத்தமிழர்கள் கருணாநிதியை மிகப் பெரிய தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளனர். உலகத் தமிழர்களின் தலைவர் எனும் வகையில், உலகத்தில் உள்ள தமிழர்களின் எண்ணங்களை எதிரொலிக்கும் குரலாக இருந்து இவர் வழிகாட்ட வேண்டும்.தமிழ் தொன்சீர் மொழி. தமிழைப் பற்றிய ஆய்வுகள் அதிகளவில் நடத்தப்பட வேண்டும். அந்த ஆய்வுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எந்த விஷயங்கள் பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். விருப்பு, வெறுப்பு இல்லாமல் இந்த ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். தமிழர்கள் இல்லாமல் தமிழ் இல்லை. எனவே, தமிழர்களின் பண்பாடு, வாழ்வுமுறை, சமூக அமைப்பின் தன்மைகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கிய பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வுசெய்ய வேண்டியது அவசியம். தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பை ஆராய வேண்டும்.

மற்றவர்கள் நாம் பேசுவதை ஏற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியம். அதற்கு அறிவியல் பூர்வமான அணுகுமுறையை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். தமிழில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள், எந்த துறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளன என்பது அறிவிக்கப்பட வேண்டும். அமெரிக்க பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்போது அந்த ஆராய்ச்சிகள் எதுபற்றி நிகழ்த்தப்படுகிறது என்பது குறித்து அறிவிக்கப்படுகிறது. ஆனால், இங்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி கூட மதுரையில் உள்ளவருக்குத் தெரியாத நிலையே உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். அப்போது தான் ஆராய்ச்சியின் சரி, பிழைகள் தெரியவரும் - இவ்வாறு அவர் கூறினார்.

## 'தமிழுக்கு இணையாக எந்த மொழியும் இல்லை'

### மாநாட்டில் செக். நாட்டு பேராசிரியர் புகழாரம்



தமிழுக்கு நிகர் தமிழ்தான். தமிழுக்கு இணையாக எந்த ஒரு மொழியாலும் போட்டிபோட முடியாது இவ்வாறு செக். நாட்டுப் பேராசிரியர் ஜரோஸ்லாவ்வாசெக் கூறியுள்ளார்.

செக். குடியரசிலுள்ள சார்லஸ் பல்கலை பேராசிரியர் ஜரோஸ்லாவ்வாசெக் செம்மொழி மாநாட்டில் கலந்துகொண்டார். இதன் போது அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

செக்குடியரசின் தலைநகரான பராக் பகுதியில் நான் வசிக்கிறேன். நான் 75 வயதைக் கடந்தவன். ஆனால் எனக்கு 30 வயதிலிருந்தே தமிழ் மொழி மீது ஈடுபாடு அதிகம். தமிழில் ஏராளமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உலகம் முழுதும் பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளேன். என்னுடைய மொழி ஆராய்ச்சிகள் பலவற்றில் முக்கிய இடம்பிடித்தது தமிழ்தான். ஏனென்றால் தமிழ் தனித்துவமான மொழி. தமிழுக்கு நிகர் தமிழ் தான். தமிழுக்கு இணையாக எந்த ஒரு மொழியாலும் போட்டிபோட முடியாது. உலகின் முதன்மையான தொன்மையான மொழி தமிழ். திராவிட மொழியான தமிழுக்கு மற்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்புண்டு. ஏனென்றால் தமிழிலிருந்து ஏராளமான மொழிகள் பிரிந்து சென்றுள்ளன.


பண்பாட்டு பேரணி

தமிழ் மொழிக்கும் மங்கோலிய மொழிக்கும் நிறையத் தொடர்பு உண்டு. மங்கோலிய மொழியில் கால் என்பதற்கு கோல் என்று கூறுவர். தமிழ் மொழியில் பேசுவதற்கும் மங்கோலிய மொழியில் பேசுவதற்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. ஆனால் சில வார்த்தைகளில் மட்டும் வித்தியாசங்கள் உள்ளன. அதனால் தமிழில் இருந்து பிரிந்து சென்ற மொழியாகவே மங்கோலிய மொழியை என்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளேன். தமிழில் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற சங்க கால இலக்கியங்களைக் கரைத்துக்குடித்து விட்டேன். அதில் எந்த இடத்தில் எந்த விஷயத்தை கேட்டாலும் என்னால் விளக்கமளிக்க முடியும். திராவிட மொழியிலிருந்து பிரிந்து சென்ற மொழிகள் எத்தனை? அந்த மொழி யின் தற்போதைய நிலை என்ன? என்பது குறித்து நான் ஆராய்ச்சி மேற்கொண்டு வரு கிறேன்.

தமிழ் ஆய்வரங்கத்தில் திராவிடமொழிகளுக்கும் 'அல்தாய்' மொழிக்கும் உள்ள உறவு குறித்து பேசுகிறேன். தற்போது சமஸ்கிருதத்தை முழுமையாகக் கற்றுவருகிறேன். முழுமையாக கற்றபின் தமிழுக்கும், சமஸ்கிருதத்துக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்துள்ளேன். - இவ்வாறு பேராசிரியர் ஜரோஸ்லாவ்வாசெக் கூறினார்.

## அரிசியில் திருக்குறள்

உலக தமிழ் செம்மொழி மாநாட்டு வளாகத்தில் தமிழ்நாடு கைவினை பொருள்களின் கண்காட்சி நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில், பூம்புகார் சார்பில் நடமாடும் கைவினைப் பொருள்கள் வாகனமும் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சியில் கோவை சாமளாபுரத்தை சேர்ந்த ஓவியர் மனோகர், 11,000 அரிசியில் 1330 திருக்குறள்களையும் எழுதி வைத்திருந்தார். மஞ்சள், நீலம், பச்சை , சிவப்பு என நான்கு நிறங்களிலும் 475 நிமிட நேரத்தில் அரிசியில் திருக்குறள்களை எழுதி இவர் சாதனை படைத்துள்ளார். குமிழ்முனைப் பேனா மூலமாக அரிசியில் தெளிவாகத் திருக்குறள்களை எழுதியுள்ளார். கடந்த ஏப்ரல் 17ஆம் தேதி ஓவியர் மனோகர் திருக்குறள் எழுதும் பணியை ஆரம்பித்து இதனை வெறும் 25 நாள்களில் பூர்த்திசெய்துள்ளார். இந்தச் சாதனை ஓவியம் மக்களின் பார்வைக்காக அரங்கில் வைக்கப்பட்டுள்ளது.

## அப்துல் கலாமை ஏன் அழைக்கவில்லை?

### செம்மொழி மாநாட்டில் பரபரப்பு எஸ்.எம்.எஸ்.



கோவையில் நடைபெறும் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் பற்றியும், இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மாநாட்டில் அழைக்கப்படாதது பற்றியும் விமர்சித்து திடீரென பரப்பப்பட்ட 'எஸ்.எம்.எஸ்' பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செம்மொழி மாநாட்டின் ஆரம்ப நாள் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்ற இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் மற்றும் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா, பின்லாந்து நாட்டில் இருந்து பங்கேற்ற அஸ்கோ பார்போலா ஆகியோருக்கு தமிழ் தெரியாததால் அவர்கள் ஆங்கிலத்திலேயே உரை நிகழ்த்தினர். இவர்கள் அனைவரும் 'வணக்கம்' என்ற ஒரு வார்த்தையை மட்டும் தமிழில் சொல்லத் தவறவில்லை.

துணை முதல்வர் ஸ்டாலின் மட்டுமே ஆங்கிலக் கலப்பில்லாமல் பேசினார். முதல்வர் கருணாநிதி உட்பட ஏனைய அனைவரின் உரையிலும் ஆங்கிலம் இடம்பெற்றிருந்ததால் அது தமிழ் ஆர்வலர்கள், கட்சித் தொண்டர்களிடம் அதிருப்தியை ஏற்படுத் தியது.

ஆங்கிலத்தில் பேசியவர்களின் உரையைத் தமிழில் மொழி பெயர்க்கக் கூட எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படாததால், மாநாட்டின் உரையை கேட்க வந்திருந்த பாமர மக்கள் மேடையில் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் விழித்தனர். அவ்வப்போது கூச்சல் எழுப்பி தமது அதிருப்தியை அவர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை, நாடாளுமன்றம் என்று தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் திருக்குறள் வரிகளைச் சொல்வதோடு, அதை .ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து விளக்கித் தமிழுக்கு பெருமை தேடி தரும் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் செம்மொழி மாநாட்டின் எந்த நிகழ்வுக்கும் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

மாநாட்டு மேடையில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தைக் கண்டு அதிருப்தி அடைந்த பொதுமக்களுக்கு, அப்துல் கலாம் பற்றிய நினைவு வருவதை தவிர்க்க முடியவில்லை. அனைவரும் இது பற்றிச் சிந்தித்தபடி மாநாட்டு நிகழ்ச்சிகளில் மூழ்கியிருந்த போது, அதே கருத்தை மையமாக வைத்து பரப்பப்பட்ட ஒரு எஸ்.எம்.எஸ். மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த எஸ்.எம்.எஸ். தகவலில், 'தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சிறப்பு விருந்தினர்கள் தமிழ் தெரியாத வடமாநிலத்தவர். ஆனால் நன்கு தமிழ் தெரிந்த நம் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பெயர் சிறப்பு விருந்தினர்கள் பெயர்ப் பட்டியலில் இல்லை. தமிழர்களான நாம் ஒவ்வொருவரும் இதை நினைத்துப் பார்க்க வேண்டும். இது நம் போன்ற மாணவர்களின் கௌரவப் பிரச்சினை' என அந்த எஸ்.எம்.எஸ்ஸில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


சலங்கை ஆட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணப் பாடசாலைகளின் ஹொக்கி

# தடுப்பாட்டம் ஆடியது யாழ்.மத்திய கல்லூரி; வெற்றிக்கிண்ணம் யாழ்ப்பாணக் கல்லூரியிடம்!

வலி.வடக்கு, ஜூன் 26

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வட மாகாண சம்பினாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்ட ஆரம்பம் சற்றுச் சூடாகக் காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாணக் கல்லூரி வீரன் நிதர்சன் முதல் கோலைப் பெற்றதைத் தொடர்ந்து பாதி ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளையில் 5 கோல்களைப் பெற்று யாழ்ப்பாணக் கல்லூரி வலுவான நிலையில் இருந்தது.

நிதர்சன் 3, பிரியலக்சன் 2 கோல்களையும் பெற்று அணியை முன்னிலைப் படுத்தினர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய போது யாழ்.மத்திய கல்லூரி கோல்கள் எதிரணிபெறுவதை தடுத்து நிறுத்துவது என்ற உற்சாகத்துடன் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி மீண்டும் கோல்கள் பெறலாம் என்ற எதிர்பார்ப்புடனும் களமிறங்கினார்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது நோக்கில் வெற்றிபெற்ற போதிலும் அதனால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. யாழ்ப்பாணக் கல்லூரியினால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைக் கூடப் பெறமுடியாத நிலையில் ஆட்டம் முடிவுபெற்றது.

ஆட்ட நிறைவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 05:00 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (6-86)



புங்குடுதீவு அம்பாள் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தீவக ரீதியில் முதலாம் இடத்திளைப் பெற்றுக் கொண்ட ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட அணியினையும், பயிறுவிப்பாளரையும் படத்தில் காணலாம். (படம்:புலி)

## யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் பயிற்றுநர்களுக்கான பயிற்சிகள் ஜூலையில்

வலி.வடக்கு, ஜூன் 26

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் பயிற்றுநர்களுக்கான தரம்காண் பயிற்சிகள் அடுத்த மாதம் ஜூலையில் ஆரம்பமாகவுள்ளன.

அடுத்த மாதம் 10ஆம் திகதியிலிருந்து 2 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறிக்கு மட்டுப்படுத்திய அளவிலான பயிற்சியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்க உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் கொழும்பில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி வகுப்புக்கள் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் செ.ரமணனுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி அறிவுறுத் தப்பட்டுள்ளது. (6-86)

## புத்தூர் விக்னேஸ்வராவின் உதைபந்தாட்டம்; வெற்றிக்கிண்ணம் ஏழாலை ஞானமுருகன் வசம்!

வலி.வடக்கு, ஜூன் 26

புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் கடுமையாக மோதிக்கொண்டமை ரசிகர்களுக்கு மகிழ்வையும், உற்சாகத்தையும் ஊட்டியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்த நிலையில் கோல்கள் எதனையும் பெறாமலேயே முதல் பாதியாட்டம் இடைநிறுத் தப்பட்டது.

இரண்டாம் பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் பெறவேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக்கொண்ட போதிலும் இருவரும் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் பலவற்றை தவறவிட்ட நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுக்கு வந்தது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா ஐந்து சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் தனக்கான நான்கு சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு ஒரு கோலையே பெற்றது. ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் ஐந்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் நான்கை சிறந்த முறையில் பயன்படுத்தி கோல்களாக மாற்றிக் கொண்டதனால் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை இலகுவாக சுவீகரித்துச் சென்றது. (6-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன் 26

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்படும் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகம்.
* வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலகம்.
* சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலகம்.
* சங்கானை பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகம்.
* நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணிகள் இரண்டாம் சுற்றில் இருந்து கலந்துகொள்கின்றன. (6-86)

## மூன்று முதலிடங்கள்



நவாலி, ஜூன் 26

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட ''மாற்று வலுவுடையோருக்கான'' மெய்வன்மைப் போட்டியில் ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் மாணவியான ப.ஜானுஜா மூன்று முதலிடங்களைப் பெற்றுச் சாதனை படைத்தார். (6-100)

## புத்தூரில் இன்று உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் , ஜூன் 26

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (1-86)

## யாழ்ப்பாணம்-பம்பலப்பிட்டி இந்துக்களின் கிரிக்கெட் இன்று

யாழ்ப்பாணம் , ஜூன் 26

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (6)




## பெண்களுக்கான கிரிக்கெட் ஆட்டங்கள் நாளை மருதனார்மடம் மைதானத்தில்

வலி.வடக்கு, ஜூன் 26

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பிரதேச விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.
* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.
* கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.
* சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி.
* சங்கானை பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.
* இரண்டாம் சுற்றில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (1-86)



அண்மையில் நடைபெற்ற ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட வி.கழகங்களுக்கு இடையேயான மெய்வன்மை விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தினைப் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது. வெற்றிபெற்ற வீரர்களையும், விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரிகளையும் படத்தில் காணலாம். (படம்:புலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் நாகன் சின்னப்பொடியன்



மண்ணில் 02★03★1937

விண்ணில் 27★05★2010

எம் குடும்பத்தின் குல விளக்காய்
ஒளிர்ந்த அன்புத் தெய்வமே!
இறுதிவரை எம்மோடு
இணைந்திருப்பீர் என்றிருந்தோமே
திடீரென எமைத் தவிக்கவிட்டு
பாதியிலே விண்ணுலகம் சென்றது ஏனய்யா?
உம் பிரிவால் எமை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரே!
உங்கள் ஆத்மா சாந்திபெற என்றும்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோமய்யா

(99922)

இராஜபுரி, கைதடி கிழக்கு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 658 திகதி 24-06-2010

வெற்றி எண்கள்

13 31 50 52 E

ஜக்பொட் பரிசு ரூ. 24,231,580/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 24,231,580/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 20 | 2,000/= | 40,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 354 | 1,000/= | 354,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 579 | 1,000/= | 579,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14359 | 60/= | 861,540/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6803 | 40/= | 272,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 168945 | 20/= | 3,378,900/= |
| | | மொத்தம் ரூ. | 5,885,560/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 700122946-4-38 |
| நுவரெலியா | 700122451-4-36 |
| மட்டக்களப்பு | 700123804-4-10 |
| கொழும்பு | 700135352-4-17 |
| கொழும்பு | 700132479-4-28 |
| புத்தளம் | 700131621-4-04 |
| குருணாகல் | 700120370-4-32 |
| கொழும்பு | 700130549-4-14 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,285,560/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 24,689,350/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜூன் 28 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர் (White Master))



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் Catford, Londan ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 19.06.2010 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கங்கமுத்து- சந்திரசேகரம் தம்பதிகளின் புதல்வரும், சண்முகாராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செம்பொற்சோதி-தியாகராஜா தம்பதிகளின் மருமகனும், பவானி(Accountant), Dr.நிவேதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன் அவர்களின் மாமனாரும் அரன்,அஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(27.06.2010) மு.ப.9.30 மணிக்கு Goals Beekenham Corpers மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகளின் பின் 27.06.2010 ஞாயிற்றுக் கிழமை பி.ப.12.05-01.00 மணிக்கு Highter green Cemetary யில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: மோகன் (மருமகன்) London
தொலைபேசி: +442082977889
செல்லிடத் தொ.பே: +447886545894 [99927]

தகவல்: குடும்பத்தினர்.

## வடக்கு,கிழக்கில் 50 ஆயிரம் வீடுகள்

# இந்திய அதிகாரியுடன் அமைச்சர் பஸில் ஆலோசனை

கொழும்பு,ஜூன்26

வடக்கு,கிழக்கின் அபிவிருத்தியில் தீவிர அக்கறை கொண்டுள்ள இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை கடந்த புதன்கிழமை கொழும்புக்கு அனுப்பி வைத்தது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இலங்கை வந்திருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட நிதித்துறை ஆலோசகர் கே. என்.சிறிவாஸ்தவாவுடன் நேற்றுமுன்தினம் ஆலோசனைகள் நடத்தினார்.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது தொடர்பாக இந்த ஆலோசனைகள் நடைபெற்றன. ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. (ப)

## யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மெய்வன்மைப் போட்டி நாளை

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முதல் நிலை மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த மெய்வன்மைப் போட்டியில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(50-224)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்26

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நூற்றாண்டு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் சிறப்பு விருந்தினராக அளவெட்டிப் பிரதேச தபாலதிபர் திருமதி சு.ஞானேஸ்வரனும் கௌரவ விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபையின் அளவெட்டி பங்குத் தந்தை அருட்பணி ம.யூட்சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(50-201)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான உணவுப் பொருள்கள் கையாளுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

கடந்த 18ஆம் திகதி மேற்படி கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அன்றைய தினம்விசேட பொது விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டதால் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(201-207)


## சித்தாவைத்தியம்

வாதம், பாரிசவாதம், பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், மார்பகவளர்ச்சியின்மை, ஹிஸ்ரீரியா, சோரியாசிஸ், குளோக்கோமா, தொய்வு, தோல்நோய், குழந்தை கிரந்தி, உடல் பருமன் மெலிவு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், இளநரை, பொடுகு நோய்களுக்கு

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்

26 - 28.6.2010 வரை சுன்னாகத்தில் சந்திப்பதற்கு

0770047271
0757390195


## தையல் பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

மல்லாகம், தெல்லிப்பழை பிரிவு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பில் பயில விரும்பும் மாணவிகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தெல்லிப்பழையில் உள்ள லயன்ஸ் கழக அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(50-201)

## யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோவில் விசேட சகஸ்ர (1008) சங்காபிஷேகம்



அடியார்களே!

நாளை (27.06.2010) ஞாயிறு காலை 8 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசையும் நடைபெறவுள்ளது. அதன்பின் கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதான நிகழ்வும் நடைபெறும்.

[99931]

உபயகாரர்.


# ஜோர்தான் ஆடைத்தொழிற்சாலையில்

தமிழ் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

வயதெல்லை: 18 - 30
முன் அனுபவம் தேவையில்லை

தையற்கலையில் அரிய நுணுக்கங்களை அங்கேயே பழகி உழைக்கலாம்.

ஜூகி மெஷின் ஒப்பரேட்டர் - 50 - US $ 150 (1 US $ = RS. 115)

1. உணவு, தங்குமிடம்,வைத்திய வசதி இலவசம்
2. போக்குவரத்து விமானப்பயணச்சீட்டு இலவசம்
3. 3 வருட சேவைக்காலம்
4. பூரண பாதுகாப்பு

தொழிற்சாலை உள்ளேயே விடுதி வசதி

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் 15 வருடத்திற்கு மேல் அனுபவம் மிக்க ஓரியன்ட் லிங்க் தாபனத்தார் தமிழ் இளம் பெண்களுக்கு பெற்றுக் கொடுக்கும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

FLEX Graphic

Orient Link (Pvt) Ltd.

No : 24, Station Road, Wellawatte, Colombo - 06.
License No : 1176 Tel : 011 5669566 App No: AL/1176Advt:/04/10


# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வேலன் இராமசாமி

திதி: சதுர்த்தி



பிறப்பு 27★07★1922

இறப்பு 26★06★2006

எங்கள் அருமை ஐயா
ஆண்டுகள் நான்கு கழிந்தாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது.

105,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [99919]

குடும்பத்தினர்.


# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 823 திகதி: 24.06.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| N | 36 | 51 | 57 | 66 | 26 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 16,858,293.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 279 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13512 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 188737 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 28169 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,747,320.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 16,863,355.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசுப் பணம் பெறும் போது அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாத அமைப்புகள் செயற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்

## இஸ்லாமாபாத் சந்திப்பில் இந்தியா வலியுறுத்து



இரு தரப்பு பேச்சு நடத்துவதற்காக இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவை (இடது) வியாழக்கிழமை வரவேற்று அழைத்து வருகிறார் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீர்.

இஸ்லாமாபாத், ஜூன் 26

பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாத அமைப்புகள் செயற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்திய - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் வியாழக் கிழமை இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற பேச்சுகளின்போது இந்தியா வலியுறுத்தியது.

இஸ்லாமாபாத்தில் இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ், பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செயலர் சல்மான் பஷீர் ஆகியோருக்கிடையே வியாழக் கிழமை பேச்சுகள் இடம்பெற்றன.

இந்த பேச்சுகளில் பங்கேற்பதற்காக முதல் நாளான புதன்கிழமை நிருபமா ராவ் இஸ்லாமாபாத்துக்கு வந்தார். 2008ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் பாகிஸ்தான் வருவது இதுவே முதன்முறையாகும்.

புதன்கிழமை இரவு சல்மான் பஷீர் அளித்த விருந்தில் நிருபமா ராவ் கலந்துகொண்டார். இந்நிலையில், வியாழக் கிழமை காலை 11 மணிக்கு இரு நாடுகளின் வெளியுறவுத் துறை செயலர்கள் சந்தித்துப் பேசினர்.

பின்னர் இருவரும் நிருபர்களுக்குக் கூட்டாகப் பேட்டியளித்தனர். அப்போது நிருபமா ராவ் கூறியவை வருமாறு:-

''இரு நாடுகளின் முக்கியமான பிரச்சினைகள் குறித்து பேச்சுகள் நடத்தினோம். பயங்ரவாதத்தால் இரு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து விவாதம் நடத்தினோம்.

''பூட்டானில் இடம்பெற்ற சார்க் மாநாட்டின்போது இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் மண்ணிலிருந்து பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டவிழ்க்க பயங்கரவாத அமைப்புகளை அனுமதிக்கமாட்டோம் என்று பிரதமர் மன்மோகன்சிங்கிடம், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்திருந்தார்.

''இதை முக்கியமான உறுதிமொழியாக நாங்கள் நம்புகிறோம். இரு நாடுகளுக்குமிடையே உள்ள தீராத பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று எண்ணுகிறோம். பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாத அமைப்புகள் செயற்படுவதை பாகிஸ்தான் தடுத்து நிறுத்த வேண்டும். இதில் உறுதியாக உள்ளோம்.

''அமைதிப் பேச்சுகளைக் குலைக்க தீவிரவாத சக்திகள் முயல்வதை இரு நாடுகளும் அனுமதிக்கக்கூடாது.''

- இவ்வாறு நிருபமா ராவ் தம் உரையில் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீர் கூறியவை வருமாறு:-

''வெளியுறவுத்துறை செயலர்களின் பேச்சுகளைத் தொடர்ந்து எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதி இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர். இந்த பேச்சுகளின்போது நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம்.

''இரு நாடுகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள், அடுத்த மாதம் நடைபெறவுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கவேண்டிய விடயங்கள் ஆகியவை குறித்தும் பேச்சுகள் நடத்தினோம்.

- இவ்வாறு சல்மான் பஷீர் குறிப்பிட்டார்.

பேச்சுகளின்போது காஷ்மீர் விவகாரம், பயங்கரவாத அமைப்புகளால் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை குறித்தும் இரு நாட்டு வெளியுறவுத்துறை செயலர்களும் பேசினர் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் தம் பேட்டியில், ''இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவுடன் என்னென்ன விடயங்கள் குறித்துப் பேசினேன் என்பதை இப்போது தெரிவிக்க முடியாது. அமைதி பேச்சுகளுக்குச் சரியான சூழலை ஏற்படுத்த நாங்கள் முயன்று வருகிறோம்'' என்றார்.

இரு நாடுகளின் முக்கிய பிரச்சினைகளான எல்லை கடந்த பயங்கரவாதம், காஷ்மீர் பிரச்சினை ஆகியவற்றால் இரு நாடுகளும் எரிச்சல் அடைந்துள்ளனவா என்று நிருபர்கள் கேட்டதற்கு, ''இதில் எரிச்சல் என்ற பேச்சுக்கே இடமில்லை. இரு நாடுகளுக்கு இடையேயும் முரண்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்'' என்றார் அவர்.

உலக அரங்கில்

# ஷார்ஜா விபத்தில் நால்வர் உயிரிழப்பு

துபாய், ஜூன் 26

ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள ஷார்ஜாவில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மூன்று இந்தியர்கள் உட்பட நான்கு பேர் புதன்கிழமை உயிரிழந்தனர்.

அன்சர் பிளாசா என்ற கட்டிடத்திலுள்ள ஆறாவது மாடியில் விளம்பரப் பலகையை வைக்கும்போது இவ்விபத்து ஏற்பட்டது. இறந்த மற்றொருவர் பங்களாதேஷைச் சேர்ந்தவர்.

சமீபத்தில் வந்த புதிய சட்டத்தின்படி, ஷார்ஜாவில் மதியம் 12.30 மணிமுதல் 3 மணிவரை வேலைகள் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால் தொழிலாளர்கள் விடியற்காலையில் வேலைகளை மேற்கொண்ட போது, இவ்விபத்து ஏற்பட்டது.

ஷார்ஜா பொலிஸார் இவ்விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜெனரல் ஸ்ரான்லியின் பதவிநீக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

ஜெனரல் ஸ்ரான்லி மெக்கிறிஸ் ரான்லின் பதவிநீக்கம் தேச நலன்கருதி மேற்கொள்ளப்படவேண்டிய தவிர்க்க முடியாததொன்று என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கனிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படையின் தளபதி ஜெனரல் ஸ்டான்லி மெக்கிறிஸ்டல் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக ஜெனரல் டேவிட் பெட்ரியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள் ளார்.

மெக்கிறிஸ்டல் தாம் வார இதழில் எழுதிய கட்டுரையில் ஜனாதிபதி ஒபாமா, உயர் அதிகாரிகள் ஆகியோரை விமர்சித்திருந்தார்.

ஆப்கனில் தாம் மேற்கொள்ளும் போர் உத்தியை ஜனாதிபதி ஒபாமா, துணை ஜனாதிபதி ஜோ பிடென், ஆப்கன் மற்றும் பாகிஸ்தானுக்கான சிறப்பு தூதர் ரிச்சர்ட் ஹோல் புரூக் ஆகியோர் சந்தேகிக்கின்றனர் என மெக்கிறி ஸ்ராலின் குறிப்பிட்டிருந்தார்.

இதனால் கோபமடைந்த ஜனாதிபதி ஒபாமா, நேரில் வந்து விளக்கம் அளிக்குமாறு மெக்கிறிஸ்டலை கோரியிருந்தார். இதற்கிணங்க மெக்கிறிஸ்டல் புதன்கிழமை ஜனாதிபதியை வெள்ளை மாளிகையில் சந்தித்து விளக்கம் அளித்தார். அப்போது அவரை இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீக்கும் உத்தரவை ஒபாமா பிறப்பித்தார்.

முன்னர் இந்தக் கட்டுரை வெளியானதற்கு மெக்கிறிஸ்டல் வருத்தம் தெரிவித்திருந்தார். ''நான் மிகுந்த கொள்கை பிடிப்புடன், நேர்மையாக, வேலையில் என்னை ஈடுபடுத்தி வருகிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

''எந்த ஒரு தனி மனிதரையும் விட போர் மிகவும் முக்கியமானது. அவர் இராணுவத் தளபதியாக இருந்தாலும் போர்தான் முக்கியமானது. தற்போதைய சூழலில் மெக்கிறிஸ்டலை இழப்பது வருத்தமளிக்கிறது. இருப்பினும், தேச நலன் கருதி எடுக்கப்பட வேண்டிய தவிர்க்க முடியாத நடவடிக்கை இது'' என்று ஒபாமா இந்த பதவிநீக்கம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.



லண்டனில் நடைபெறவிருக்கும் ஜி20 மாநாடு பற்றி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்விடேவும் விவாதித்தனர்.

# கூட்டு முயற்சி மூலம் பயங்கரவாதத்தை வேரறுக்க சார்க் நாடுகள் உறுதி

இஸ்லாமாபாத், ஜூன் 26

கூட்டு முயற்சி மூலம் பயங்கரவாதத்தை வேரறுக்கவேண்டும் என்று சார்க் அமைப்பின் பயங்கரவாதக் குற்றங்கள் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் சார்க் நாடுகள் உறுதி பூண்டுள்ளன.

சார்க் அமைப்பிலுள்ள நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் கூட்டம் இன்று சனிக்கிழமை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஆரம்பமாகிறது.

இதற்கு முன்னர் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் இஸ்லாமாபாத் நகரில் வியாழக் கிழமை மும்முரமாக நடந்தன. மாநாட்டையொட்டி சார்க் அமைப்பின் பயங்கரவாதக் குற்றங்கள் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

சார்க் அமைப்பிலுள்ள 8 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். சார்க் உறுப்பு நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ள இயக்கங்களின் விவரப் பட்டியல் இந்தக் கூட்டத்தில் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்ட 21 இயக்கங்கள் அடங்கிய பட்டியல் மற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்டது. பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் உறுப்பு நாடுகளிடம் பாகிஸ்தான் எடுத்துரைத்தது.

வடமேற்குப் பகுதியில் தலிபான்களை ஒழிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் பாகிஸ்தான் எடுத்துரைத்தது.

கூட்டு முயற்சி மூலம் பயங்கரவாதத்தை வேரறுக்கவேண்டும் என்று சார்க் நாடுக்கள் இந்தக் கூட்டத்தில் உறுதிபூண்டன. சார்க் உறுப்பு நாடுகளில் எல்லைக் கட்டுப்பாட்டு நிர்வாகத் திட்டத்தைக் கொண்டுவரவேடும் என்று அந்தக் கூட்டத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்தின.

குடியேற்றம் தொடர்பான விவகாரம், பொலிஸ் விவகாரங்களில் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# விமான விபத்தில் பலியானோர் குடும்பங்களுக்கு 25 வருடங்களின் பின் நிவாரணம் வழங்க ஏற்பாடு

## நினைவுதினக் கூட்டத்தில் கனடா பிரதமர் அறிவிப்பு

டொரண்டோ, ஜூன் 26

கனடாவில் நிகழ்ந்த கனிஷ்கா விமான விபத்தில் பலியானோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், இவ்விபத்தின் 25 ஆவது வருட நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

1985ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி ஏர் இந்தியாவுக்குச் சொந்தமான கனிஷ்கா விமானம் 329 பயணிகளுடன் டொரண்டோவிலிருந்து டில்லிக்குச் செல்லும்போது, அட்லாண்டிக் கடல் பகுதியில் நடுவானில் வெடித்துச் சிதறியது. இதில் பயணம் செய்த பயணிகள், பணியாளர்கள் அனைவரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்தின் 25ஆம் ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் பேசுகையில், ''இந்த விமான விபத்தின் முதல் கட்ட விசாரணையில், ஏதோ ஓரிடத்தில் தவறு நடந்திருப்பது தெரியவந்துள்ளது. அத்தகைய தவறு காரணமாக 329 பேர் உயிரிழந்து விட்டனர். அதற்காக வருந்துகிறேன்'' என்றார்.

''கடந்த 25 ஆண்டுகளாக உயிரிழந்தவர்களை இழந்து வாடும் உங்களது பிரச்சினைகளை உரிய வகையில் கவனிக்காததற்கும் வருந்துகிறேன்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் அளிப்பது தொடர்பாகத் தனி குழு ஏற்படுத்தப்பட்டு உரிய நிவாரணம் அளிக்கப்படும்'' என்றும் ஹார்ப்பர் குறிப்பிட்டார்.

[illegible] தீவிரவாதிகளை நேரடியாகக் குறிப்பிடாமல், ''கனடா மண்ணில் எத்தகைய பயங்கரவாத செயல்களையும் அனுமதிக்கமாட்டோம்'' என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கான கனடா தூதர் எஸ்.எம். கவாய், தூதரக அதிகாரி பிரீத்தி சரண், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியும் ஏர் இந்தியா விசாரணைக் குழுத் தலைவருமான ஜோன் மேஜர், லிபரல் கட்சி தலைவர் ரே ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த விபத்து தொடர்பான விரிவான அறிக்கையை ஓய்வுபெற்ற நீதிபதி ஜோன் மேஜர் அளித்திருந்தார். பயங்கரவாதத்துக்கு எதிரான காவல்துறையின் மெத்தனமான நடவடிக்கையே இந்த விமான குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குக் காரணமாகும் என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

பொலிஸார் சிறப்பாக செயல்பட்டிருந்தால் அதைத் தடுத்திருக்க முடியும் என்றும் அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைரமுத்து தலைமையில் நேற்று கோவையில் கவிஞர்கள் பொழிந்தனர்



கோவை, ஜூன் 26

கோவை உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் 3 ஆம் நாளான நேற்றுக்காலை 10 மணிக்கு கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் கவியரங்கம் தொடங்கியது.

'கிளம்பிற்றுக்காண் தமிழ்ச் சிங்கக்கூட்டம்' என்ற தலைப்பில் நடந்த இந்தக் கவியரங்கத்தை கவிஞர் ஈரோடு தமிழன்பன் தொடக்கி வைத்தார்.

தமிழ்மொழியின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் தமிழ் அறிஞர்கள் பலர் தங்களது படைப்புகளைச் சமர்ப்பித்தனர்.

இக்கவியரங்கில் 'தன்மானம் காக்க' என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா, 'தாய்த்தமிழ் வளர்க்க' என்ற தலைப்பில் தமிழச்சி தங்கபாண்டியன், 'அடையாளம் மீட்க' என்ற தலைப்பில் கவிஞர் மரபின் மைந்தர் முத்தையா, 'ஆதிக்கம் அகற்றிட' என்ற தலைப்பில் பேராசிரியர் கருணாநிதி, 'சமத்துவம் பூக்க' என்ற தலைப்பில் கவிஞர் விவேகா, 'பகுத்தறிவு தழைக்க' என்ற தலைப்பில் கவிஞர் நா.முத்துக்குமார் ஆகியோர் கவிதை பொழிந்தனர்.

முன்னதாக, கவிஞர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி மரியாதை அளிக்கப்பட்டது. மாநாட்டுப் பந்தலில் நடந்து வரும் இந்தக் கவியரங்கில் முதல்வர் கருணாநிதி மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

கவியரங்கம் முடிந்த பின்னர் 'தமிழர் வாழ்வோடு பெரிதும் சார்ந்திருப்பது - சங்க இலக்கியமா? இடைக்கால இலக்கியமா? இன்றைய இலக்கியமா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. அதற்கு பேராசிரியர் சோ.சத்தியசீலன் நடுவராகச் செயற்பட்டார். குமரிஅனந்தன் தொடக்கவுரையாற்றினார்.

'சங்க இலக்கியமே' என்ற தலைப்பில் இலங்கையைச் சேர்ந்த ஜெயராஜ், முனைவர் சுந்தர ஆவுடையப்பன் ஆகியோரும், 'இடைக்கால இலக்கியமே' என்ற தலைப்பில் அ.அறிவொளி, தேசமங்கையர்க்கரசி ஆகியோரும், 'இன்றைய இலக்கியமே' என்ற தலைப்பில் பேராசிரியர் அரங்க மல்லிகா, தென்னப்பன் ஆகியோரும் வாதிட்டனர்.

நேற்று மாலை 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்குக்கு முதல்வர் கருணாநிதி தலைமை வகித்தார். கே.வி.தங்கபாலு, கி.வீரமணி, இல.கணேசன், இராம வீரப்பன், ஸ்ரீதர்வாண்டையார், பூவை ஜெகன் மூர்த்தி, தாவூத்மியாகான், எல்.சந்தானம், சீத்தாராம் யெச்சூரி, ராமதாஸ், ராஜா, தொல் திருமாவளவன், கே.எம். காதர்மொகிதீன், செல்லமுத்து, திருப்பூர் அல்தாப், எம்.பஷீர் அகமது ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## இந்தியச் செய்திகள்

### 259 கட்டுரைகள் ஒரே நாளில் சமர்ப்பிப்பு

கோவை, ஜூன் 26

கோவையில் நடைபெற்று வரும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 259 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாநாட்டின் இரண்டாவது நாளான வியாழக்கிழமை காலை, முதல்வர் கருணாநிதி தலைமையில் ஆய்வரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. இதையடுத்து நண்பகல் 12 மணிமுதல் கொடிசியா வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த 22 அரங்குகளில் ஆய்வரங்கங்கள் தொடங்கின.

இதில் மாலை 6 மணி வரை பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், தமிழறிஞர்கள் உள்ளிட்ட 259 பேர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துப் பேசினர். இந்த ஆய்வரங்க அமர்வுகளுக்கு அஸ்கோ பர்ப்போலா, கிரிகோரி ஜேம்ஸ், தியோடர் பாஸ்கரன், மயில்சாமி அண்ணாதுரை, சிலம்பொலி செல்லப்பன், நீதியரசர் மோகன், கிறிஸ்டியானா முரு, ரவிக்குமார் எம்.எல்.ஏ., உல்ரிக் நிக்லாஸ், ஆ.சிவதாணுப்பிள்ளை, எஸ்.சற்குணம் உள்ளிட்டோர் தலைமையேற்று நடத்தினர்.

# சகல சமயங்களையும் இதயத்தில் ஏந்திக்கொண்டுள்ள மொழி தமிழ்!

## முதல்வர் கருணாநிதி பெருமிதம்

கோவை, ஜூன் 26

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சகல சமயங்களையும் இதயத்திலே ஏந்திக்கொண்ட மொழி தமிழ். எல்லா மெய்ப்பொருள் தத்துவங்களையும் விளக்கும் மொழி தமிழ்.

- இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார்

அத்துடன், தமிழ் இலக்கியங்கள் உலக மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும் - என்றும் முதல்வர் கூறினார்.

கோவையில் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் இரண்டாம் நாளான கடந்த வியாழக்கிழமை ஆய்வரங்க நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்து அவர் பேசியவை வருமாறு -

இந்திய மொழிகள், உலக மொழிகள் அனைத்திலும் தமிழ் இலக்கியச் செல்வங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். கிரேக்க மொழியிலும், ஜெர்மன் மொழியிலும், பிற மொழிகளிலும் தமிழியல் குறித்தும் தமிழினம் குறித்தும் எழுதப் பெற்றுள்ளவை அனைத்தும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். உலகெங்கும் உள்ள தமிழியல் நூல்கள், ஆவணங்கள் கணனிமயமாக்கப்பட்டு உலகில் எந்தப் பகுதியில் உள்ளவரும் அவற்றைப் பயன்



படுத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

துறைதோறும் தமிழ் பயன்பட வேண்டும். வகை வகையாய் அகராதிகளும், தொகை தொகையாய் கலைக் களஞ்சியங்களும் வர வேண்டும்.தமிழுக்கு இன்னும் என்னென்ன வேண்டும் என ஆய்வரங்கத்திலும், இணைய மாநாட்டிலும் பங்கேற்கும் அறிஞர்கள் எடுத்துச் சொல்லி இந்த அரசுக்கு ஆணையிட வேண்டும். புகழ்மிக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரன் என்பதை தமிழன் முதலில் உணர வேண்டும். பிறருக்கும் அதை உணர்த்த வேண்டும் என்பதற்காக மட்டுமல்லாமல், தமிழ், தமிழ் இனம், தமிழ் இலக்கியம், பண்பாடு, நாகரிகம் என்று ஒவ்வொரு துறையிலும் பதித்துள்ள முத்திரைகள், சாதித்துள்ள சாதனைகளை எல்லாம் ஒவ்வொரு தமிழனுக்கும் பூரிப்பையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தக் கூடியவை.

இருந்தாலும் அத்துடன் நின்றுவிடாமல், தமிழுக்கும் தமிழ் இனத்துக் கும் ஆற்ற வேண்டியவை இன்னும் ஏராளமாக உள்ளன என்பதை உணர வேண்டும். காலந்தோறும் தமிழ், தமிழர்கள் கொண்டுள்ள எண்ணற்ற சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள தமிழர்கள் தான் வெளிநாட்டவர்க்கு எடுத்துரைக்க வேண்டும். ஆனால் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத கால்டுவெல், அல்பேர்ட் சுவைட்சர் போன்ற வெளிநாட்டவர்கள் அவற்றைத் தமிழர்களுக்கு விளக்கிச் சொல்லும் நிலைதான் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. தமிழ் மொழியின் தொன்மையைப் பொறுத்தவரை தொல்காப்பியம் போன்றதோர் பழைமை இலக்கணம் எந்த மொழியிலும் இல்லை.


திருக்குறள் போல உலகப் பொதுமையான அற இலக்கியமும் எந்த மொழியிலும் இல்லை. கடவுளை விடுத்துக் குடிமக்களைத் தலைமக்களாகக் கொண்ட சிலப்பதிகாரம்போல ஒரு தொன்மையான காப்பியமும் எந்த மொழியிலும் இல்லை. ஆசியா முழுவதும் கோலோச்சிய பௌத்த சமயத்திற்கு மணிமேகலைபோல ஒரு காப்பியம் பாலி மொழியிலும் இல்லை.

எல்லா சமயங்களையும் - சைவ, வைணவ சமயங்களையும் - சமண, பௌத்த சமயங்களையும் - கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களையும் இதயத்திலே ஏந்திக் கொண்ட மொழி தமிழ். எல்லா மெய்ப்பொருள் தத்துவங்களையும் விளக்கும் மொழி அது.

- இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

# மாநாட்டு புத்தகக் கண்காட்சியில் ஆறு அடி உயர திருக்குறள் நூல்

## புத்தக அரங்கை கனிமொழி திறந்துவைத்தார்



கோவை, ஜூன் 26

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி வியாழக்கிழமை தொடங்கிய புத்தகக் கண்காட்சியில் 6 அடி உயரத்திலான திருக்குறள் நூல் இடம்பெற்றுள்ளது.

இக் கண்காட்சியில் சந்தனம்மாள் பதிப்பகம் அரங்கில், விஜிபி குழும நிறுவனங்களின் சகோதர்கள் சார்பில் கின்னஸ் சாதனை முயற்சிக்காக 6 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் 133 பக்கங்களில் 1,330 திருக்குறள்கள் இடம்பெற்ற இந்தப் பெரிய புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இது 1.25 தொன் எடையுடன் ரூபா 5 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரமாண்ட புத்தக அரங்கை கவிஞர் கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார். மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் ஜி.கே.வாசன் முன்னிலை வகித்தார்.

முன்னதாக, புத்தகக் கண்காட்சியை அமைச்சர் ஜி.கே.வாசன் திறந்துவைத்தார். இவ்விழாவில் கவிஞர் கனிமொழி, தமிழக வணிகவரித்துறை அமைச்சர் எஸ்.என்.எம். உபயதுல்லா, மக்களவை உறுப்பினர் ஜே.எம்.ஆரூண், கே.எஸ்.கே.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# செம்மொழி மாநாட்டிற்குச் சென்ற சுதர்சனத்திற்கு திடீர் மாரடைப்பு

## சென்னையில் இருந்து டாக்டர்கள் விரைவு

கோவை, ஜூன் 26

செம்மொழி மாநாட்டில் நேற்று பங்கேற்ற தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் சுதர்சனத்திற்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டதால் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் செம்மொழி மாநாட்டின் மூன்றாம் நாளான நேற்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இம் மாநாட்டில் பங்கேற்க சுதர்சனம் வந்தார். நேற்றுக் காலையில் மாநாட்டிற்கு வந்த அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. உடனே அவரை கோவை கே.எம்.சி. வைத்தியசாலையில் சேர்த்தனர். அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

முதல்வர் கருணாநிதியும், துணை முதல்வர் ஸ்டாலினும் நேரில் சென்று பார்த்து உடல்நலம் குறித்து விசாரித்தனர்.

இருந்தபோதும் மேற்கொண்டு தீவிர சிகிச்சை அளிப்பதற்காக சென்னையில் இருந்து சிறப்பு வைத்தியக் குழு கோவை விரைகிறது.



'ஜின்னா' பற்றி புத்தகம் எழுதியமை தொடர்பாக எழுந்த சர்ச்சையால் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பா.ஜ.கவிலிருந்து நீக்கப்பட்ட ஜஸ்வந்த் சிங், 10 மாதங்கள் கடந்த நிலையில் நேற்றுமுன்தினம் அத்வானி முன்னிலையில் பா.ஜ.கவில் மீண்டும் இணைந்தபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டிக்கு 20 வருடங்களின் பின் சென்று ஆலயங்களைத் தரிசித்தனர் ஊர் மக்கள்





மயிலிட்டித்துறை ஆலயங்களில் நேற்று கூடிய பக்தர்கள்...

(படங்கள் - கவிந்தன்)

யாழ்ப்பாணம், ஜூன் 26

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மயிலிட்டி பிரதேச மக்கள் 20 வருடங்களுக்குப் பின்னர் தமது பகுதிக்குச் சென்று ஆலய வழிபாட்டில் நேற்று ஈடுபட்டனர்.

படையினரின் அனுமதி பெற்று நேற்றுக் காலை 7 மணி முதல் வாகனங்களில் தெல்லிப்பழை சோதனை நிலையங்கள் ஊடாகச் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மயிலிட்டித்துறை கண்ணகை அம்மன், முருகன் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளை நடத்தினர்.

இடம்பெயர்ந்து கொழும்பு உட்பட ஏனைய பிரதேசங்களில் வாழும் மயிலிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் வாகனங்களில் ஆலயத்துக்கு ஆவலுடன் செல்வதை அவதானிக்க முடிந்தது.

ஆலயங்களில் கூடிய பக்தர்கள் சுற்றாடல் பகுதியைத் துப்புரவு செய்து விசேட பூசைகளை நடத்தி அம்மன், முருகனை வீதி வலமாக எடுத்துச்சென்றனர்.

மேள வாத்திய சகிதம் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டன. பூசை வழிபாடுகளை அடுத்து அங்கு அன்னதானமும் இடம்பெற்றது.

நீண்ட காலத்தின் பின் எமது பிரதேசத் தண்ணீரில் உணவு சமைத்து பரிமாறி பூரிப்படைந்தோம் என்று அங்கு சென்று திரும்பிய வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

எமது மண்ணில் ஆறஅமர்ந்து இருந்து கடற்காற்றைச் சுவாசிக்கச் சந்தர்ப்பம் கிட்டியது என்றும் அவர் கூறினார்.

மயிலிட்டித்துறைமுகத்துக்கு அருகில் இந்த ஆலயங்கள் அமைந்துள்ளன.

இதேவேளை -

தொண்டைமானாறு சோதனை நிலையம் ஊடாக மக்கள் செல்ல அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அப்பாதை ஊடாக மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. சகலரும் தெல்லிப்பழை சோதனை நிலையம் ஊடாகவே அனுமதிக்கப்பட்டனர். (ஒ-1)

## தியாகிகள் தின உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தியாகிகள் தின நினைவு நாளை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர். எல்.எவ் அமைப்பு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* நாவாந்துறை கலைவாணி வி.க. எதிர் மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க.
* பாஷையூர் சென். அன்ரனிஸ் வி.க. எதிர் அச்செழு வளர்மதி வி.க.

## மண்கும்பான் அந்தோனியார் திருவிழாத் திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூன் 26

அல்லைப்பிட்டி, மண்கும்பான் , சின்னக்காடு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நிறைவையொட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் திருப்பலியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச்சொரூபபவனியும் இடம்பெறும். (50)

# ஈழ அகதிகள் விவகாரத்தில் ஆஸியின் கடும் போக்குத் தளரும்

கொழும்பு, ஜூன் 26

ஈழத் தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் வழங்கும் விடயத்தில் ஆஸ்திரேலியாவின் கடும் போக்கை புதிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தளர்த்துவார் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈழ அகதிகள் ஏராளமானோர் வருடா வருடம் கடல்வழியாக ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரி வருகின்றார்கள்.இவர்களில் பெரும்பாலானோர் அகதி அந்தஸ்து பெற உரிமை உடையவர்கள்.

ஆனால் ஜூலியா கில்லார்ட்டுக்கு முன்னர் பிரதமராக இருந்த கெவின் ரூட் ஈழ அகதிகள் விவகாரத்தில் கடும்போக்கைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார். இதனால் இவருக்கு ஆஸ்திரேலிய மக்களிடையேயான செல்வாக்குக் குறைய நேர்ந்தது.

அத்துடன் எதிர்க்கட்சிகள் இவரின் கடும்போக்கைக் கடுமையாக விமர்சித்து வந்தன. சர்வதேச மனிதாபிமான அமைப்புகளும் இவரைக் கடுமையாகச் சாடியிருந்தன. இவரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஈழ அகதிகளுக்கு விசா வழங்குகின்றமைக்கான முன்னெடுப்புக்கள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியேற்றிருக்கும் ஜூலியா கில்லார்ட் இக்கடும்போக்கைத் தளர்த்துவார் என்று ஆஸியில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின் றன.


இந்த விவகாரத்தில் அவரிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகள் வெளியாகி உள்ளன.

அவர் பிரதமராகப் பதவியேற்று சில மணித்தியாலங்களில் ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் அகதிகள் விவகாரத்தில் ஆஸ்திரேலியாவின் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவரப்படும் என்று கூறி உள்ளார்.

இலங்கை விவகாரத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

# யாழ். நகரில் பொசன் அலங்காரப் பந்தல்; நாகவிகாரையில் விசேட வழிபாடுகள்

## தெற்கில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை



யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். நகரில் உள்ள நாகவிகாரைப் பகுதியில் முப்பது வருடங்களின் பின்னர் நேற்று பொசன் அலங்கார பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் நாகவிகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

நேற்றுமாலை 6.30 மணியளவில் ஆரம்பமான விசேட நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். பிராந்திய பிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ மற்றும் படை அதிகாரிகளும் மதகுருமாரும் கலந்து சிறப்பித்தனர்.

'விருதி ஜாதகய' கதையை விளக் கும் சம்பவங்கள் அடங்கிய அலங்காரப் பந்தலொன்று யாழ். நாகவிகாரை வளாகத்தில் அமைக்கப்பட்டு அக்கதை பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த அலங்காரப் பந்தல் தொடர்ந்து ஐந்து தினங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வைக் கண்டு களிப்பதற்கு பெரும் எண்ணிக்கையான தென்பகுதி சிங்கள மக்கள் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடப்பட்டத்தது.

பொசன் நிகழ்வை ஒட்டி கண்கவர் மின் குமிழ்களால் ஆரியகுளம் பகுதி அலங்கரிக்கப்பட்டிருந்தது. (ஒ-16)

# அரசமைப்புத் திருத்தம் யாருக்கு? நாட்டுக்கா; குடும்பத்துக்கா?

## ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் கருத்தரங்கு

கொழும்பு, ஜூன் 26

அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. 'அரசமைப்புத் திருத்தம் நாட்டுக்கா அல்லது குடும்பத்துக்கா?' என்ற தலைப்பில் இந்தக் கருத்தரங்குகள் இடம்பெற உள் ளன.

இவற்றின் முதலாவது கருத்தரங்கு 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இதை ஆரம்பித்து வைப்பார்.

இந்தக் கருத்தரங்கைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களிலும் பல கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அரசமைப்புத் திருத்தத்தின் பாதகங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும் என்று ஜே.வி.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்தரங்குகளின் ஊடாக அரசமைப்புக்கு எதிரான நாட்டு மக்களின் எதிர்ப்பை ஒட்டுமொத்தமாகத் திரட்ட முடியும் என்று ஜே.வி.பி. ஊடகப் பிரிவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, அரசமைப்புத் திருத்தத்திற்கு எதிராக நாட்டின் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்படும் என்று ஜே.வி.பி. தெரிவித்தது. (ஒ-சி)


## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்டோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

## உடன் தொடர்பு கொள்ளவும்

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவின் திருமஞ்சத் திருவிழா 28.06.2010 திகதியும், தேர், தீர்த்தத் திருவிழா முறையே 10/07/2010, 11/7/2010 ஆகிய தினங்களிலும் நடைபெறவுள்ளதால் அத்தினங்களில் -

அடியார்களின் வாகனங்களைப் பாதுகாத்துக் கொடுப்பதற்கான (சைக்கிள் பார்க்) சேவையினை வழங்க விரும்புபவர்கள் இன்று (26/06/2010) சனிக்கிழமை தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல. : 0779186363
தொடர்புகட்கு : இ. பார்த்தீபன்

## Deutsch மொழி வகுப்புக்கள்

German, Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
[Germany இல் இருந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது]
தொடர்பு : 10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823

## Piano / Violin NOTES

Organ, Guitar வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 310 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

KARAVEENA ISAI MANRAM,
75, Temple Road, Nallur.
T.P. No : 0777031293
(99832)

## வீடு விற்பனைக்கு

கண்டி றோட், 678/11, முள்ளி வீதி, அரியாலை
[illegible] 1 பரப்பும் 2 [illegible]
[illegible] உண்டு.
தொடர்பு : 0213006263


## மரண அறிவித்தல்

### பற்றிக்பிரான்சிஸ் சேவியர் (இராசநாயகம்)



யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பற்றிக் பிரான்சிஸ் சேவியர் (இராசநாயகம்) நேற்று (25.06.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பற்றிக் - மேரியோசப்பின் தம்பதியினரின் அன்புமகனும் மேரியோசப்பின் (பொன்றோஸ்) அவர்களது அன்புக் கணவரும், காலஞ்சென்ற கத்தரின் (தங்கமணி) மற்றும் மேரி ரோசலின் (தவம்), காலஞ்சென்றவர்களான அன்ரன் செல்வநாயகம், லோறன்ஸ் (அரியம்) மற்றும் பீற்றர் மரியநாயகம் ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான துரைரட்ணம், அல் பேர்ட் (குணம்) மற்றும் சகுந்தலா, காலஞ்சென்ற புஷ்பம் மற்றும் மேர்சி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருமகள் சரோஜினி மனோகரனின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 18 புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(99947)

தகவல்:
மேரியோசப்பின்,
மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. பிளஸ் கிடையாவிட்டால் ஆடை உற்பத்தியில் பெரும் பாதிப்பு

## சுதந்திர வர்த்தக வலயச் சங்கம் எச்சரிக்கிறது

கொழும்பு, ஜூன் 26

'ஜி.எஸ்.பி. பிளஸ்'வரிச்சலுகை கிடைக்கா விட்டால் ஆடை உற்பத்தித்துறை பெரும் பாதிப்புக்குள்ளாகும் என சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர் சங்கச் செயலாளர் அன்டன் மாகஸ் தெரிவிக்கின்றார்.

''இந்த வரிச்சலுகை கிடைக்காவிட்டால் ஆடை உற்பத்தித் துறையில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான பெண்கள் தொழில் இழக்கும் நிலை ஏற்படும்.

ஐரோப்பிய யூனியன் விதித்த நிபந்தனைகளை இலங்கை ஏற்றுக்கொள்கின்றதா? இல்லையா? என்பது குறித்து ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் இலங்கை பதிலளிக்க வேண்டும்.

தயாரித்த ஆடைகள் உட்பட 7,200 இலங்கையின் உற்பத்திப் பொருள்களை ஐரோப்பிய சந்தைக்கு அனுப்பிவைக்க இறக்குமதிவரி அறவிடப்படுவதில்லை. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் 40 சதவீதமான ஆடைகள் ஐரோப்பிய சந்தைகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துறையில் சுமார் இரண்டு லட்சம் பேர் நேரடியாகத் தொழில் பெற்றுள்ளனர். வரிச் சலுகை கிடைக்காவிட்டால் இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் தொழில் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்'' - எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ-சி)

# இலங்கையின் முடிவு தொடர்பில் ஐ.நா. நிபுணர்கள் குழு வருத்தம்

கொழும்பு, ஜூன் 26

இலங்கை அரசின் தீர்மானம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு வருத்தம் வெளியிட்டுள்ளது.

நிபுணர்கள் குழு இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது என்ற அரசின் அறிவிப்பு அதிருப்தி அளிக்கிறது என குழுவின் தலைவர் மார்சூகி டாரூஸ்மான் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்ய முடியாவிட்டால் அனைத்து முயற்சிகளும் தோல்வியடையும் என்றும், உண்மையைக் கண்டறிவதில் சிக்கல் நிலைமை உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும், அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு இலங்கை தொடர்பான விசாரணைகளை நடத்தப் போவதில்லை என பான் கீ மூனின் பேச்சாளர் மார்டீன் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

உண்மையைக் கண்டறியும் அல்லது விசாரணை நடத்தும் ஆணைக்குழுவாக இதனைக் கருத முடியாது. நிபுணர்கள் குழு நியூயோர்க்கில் இருந்து கொண்டே கடமையாற்றுவர்.

நிபுணர்கள் குழுவினர் இலங்கைக்கு சென்று சாட்சியங்களிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்யமாட்டார்கள். இதனால் விசா பிரச்சினை ஏற்படாது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு இந்த நிபுணர்கள் குழுவினர் ஆலோசனை வழங்குவார்கள்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## புலிகள் சரணடையும் தகவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இலங்கை ஊடகவியலாளரிடம் மேலும் தெரிவித்த தகவல்கள், விவரங்கள் வருமாறு :-

''இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் கேட்டுக்கொண்டமைக்கு இணங்க இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு நாங்கள் முன்வந்திருந்தோம்.

கடைசிவரை யுத்தத்தைத் தவிர்த்து இரு தரப்புகளுக்கும் இடையில் அமைதியை ஏற்படுத்த நாங்கள் முயற்சி எடுத்தோம். ஆனால் இரு தரப்பினரும் பல தடவைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இறுதியில் போர் ஏற்பட்டுவிட்டது.'' என்றும் சொல்லி வருத்தப்பட்டார் சொல்ஹெய்ம்.

*கேள்வி:-* யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் சரணடைவது தொடர்பாகப் புலிகள் உங்களுடன் தொடர்பு கொண்டார்களா?

*பதில்:-* ஆம். 2009 ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் பல தடவைகள் என்னுடன் தொடர்புகொண்டு போரை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார். நாங்களும் அதற்காகப் பல வழிகளில் முயன்று கொண்டிருந்தோம். இறுதியாக கடந்த வருடம் மே 17 ஆம் திகதி வன்னியிலிருந்து நடேசன், புலித்தேவன் போன்ற புலித்தலைவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தாங்கள் யுத்தத்தை நிறுத்தி சரணடையப்போகிறார்கள் என்றும் அதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் கேட்டார்கள். அதற்கு நான் ''உங்களுடைய முடிவு, காலம் பிந்தியதாகிவிட்டது. இருந்தாலும், நீங்கள் வெள்ளைக்கொடியுடன் சென்று படையினரிடம் சரணடையுங்கள்'' என்று தெரிவித்தேன்.

அதற்கு முதல் புலிகளின் சரணடைவு குறித்து இலங்கை அரசுக்கும் நான் தெரியப்படுத்தியிருந்தேன். எங்களுடன் மாத்திரமல்ல, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, ஐ.நா. போன்ற பல தரப்புகளுடனும் அவர்கள் தொடர்புகொண்டு பேசிய பிறகே சரணடைந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் சரணடைவதற்கான ஒழுங்குகள் பற்றி ஏற்கனவே இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால் அரசு சார்பான எவருடன் பேசினேன் என்பதை நான் கூற விரும்பவில்லை. ஆனால் புலித்தலைவர்கள் தொடர்பு கொண்டு சில மணித்தியாலங்களின் பின்னர் நடேசன், புலித்தேவன் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று நான் அறிந்து கொண்டேன்.

*கேள்வி:-* போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்று கருதுகிறீர்களா?

*பதில்:-* ஆம். யுத்தத்தின் இறுதிப்பகுதியில் பல போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு குறித்து சுயாதீன விசாரணை ஒன்று தேவை. அதைத்தான் ஐ.நா. செயலரும் வலியுறுத்துகிறார். எமது நிலைப்பாடும் அதுதான். சர்வதேச சுயாதீன விசாரணைகள் மூலம் மேலும் பல உண்மைகள் வெளிவரலாம்.

*கேள்வி:-* இலங்கையின் தற்போதைய அரசுடனான உங்களுடைய உறவுகள் பற்றி...?

*பதில்:-* இரு தரப்புகளுக்கும் இடையில் சாதாரணமான உறவு இருக்கிறது. புதிய அரசுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக சில அமைச்சர்களை இங்கு அழைக்க இருக்கிறோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுக்கு நல்ல வாய்ப்பு கிட்டியிருக்கிறது. கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் தங்களுடைய அமோக ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். எனவே அவர்களுடன் பேசி தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்பதே எமது விருப்பம் - என்றார். (அ)

## தமிழ் மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு ஒன்று வியாழக்கிழமை மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போதே அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) அணித் தலைவர் எஸ்.ஸ்ரீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா, ஈரோஸ் செயலாளர் பிரபா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ-சி)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவளிக்கின்றன என ஐ.ம.சு. கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால், அரசில் அங்கம் வகிக்கும் ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஜாதிக ஹெல உறுமய நிபந்தனையின் பேரிலேயே ஆதரவு வழங்க முடியும் என்று தெரிவித்திருக்கின்றது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்கும் திருத்தத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்றன எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய் என வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கின்றார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி உட்பட நான்கு இடதுசாரிக் கட்சிகளும் மேற்படி திருத்தத்தை ஆதரிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். அத்திருத்தம் கொண்டு வரப்பட்டால் மட்டுமே ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்க ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்கும் என அதன் தலைவர் ஓமல்பே சோபித தேரர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கான திருத்தத்தை வரவு - செலவுத்திட்ட விவாதத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டமை தெரிந்ததே. (அ-சி)

## இந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள், விமான நிலையங்கள், வழி பாட்டுத் தலங்கள் போன்றவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும், கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் மாநிலங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குழு இலங்கை வர அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு அமைக்கப்பட்ட அன்றே, குழு இலங்கைக்குச் செல்லப்போவதில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மார்டின் நெசிர்கி தெரிவித்திருந்தார்.

எனினும், இலங்கை அரசு தமது வெறுப்பை ஐக்கிய நாடுகள் சபையின் மீது காட்டி இந்தக் குழு இலங்கை வர விசா அனுமதி வழங்கப்போவதில்லை என பிரசாரம் மேற்கொண்டு வருகிறது - என்றார்.

இதேவேளை, ஐ.நா.சபையின் நிபுணர் குழு நியமனத்துக்கு ரஷ்யாவும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த நிலையிலேயே அமெரிக்கா இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

**கார் விற்பனைக்கு**
11 Sri XXXX தொடர் இலக்கமுடைய மிகவும் நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் (Shoe model) கார் ஒறிஜினல் வளங்களுடன் A/C உட்பட அனைத்தும்இயங்கும் நிலையில் விற்பனைக்குண்டு.
தொ.பே:- 0774528818 / 0215673818
148, கோயில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்** 90% Scholorship
Diploma Courses...
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, *Hardware *English
*Web Designing * Video Editing *AutoCAD *VB.net, LINUX, ICT, GIT, Kids Programs
International Courses...
Computer Engineering-USA, CIMA-UK, IELTS / Toefl, Cisco-CCNA, CCNP, ICDL-CAD, BCS
Sun Java programmer-SCJP, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free e-citizen, Hardware Technology-DHT, Diploma in English, DTP(Printing), INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL, Typing, Internet & Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 30.06.2010
MCS 324, Palaly Road, Parameswara Junction
Web site : www.mcsitcampus.org Call 772395895

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
அன்றாவில்
இப்போது டிஜிற்றல் பிறிண்ட்
1 சதுர அடி
40/=
20%
கழிவு விலையில்
ANDRA
DIGITAL PRINTING

வியாபார நிறுவனங்களின் பெயர் பலகைகளை
டிஜிற்றல் முறையில் செய்து பெற்றுக் கொள்ளுங்கள்
356A, லக்சன் பிளாசா,
கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி,
யாழ்ப்பாணம்.
H.Line: 0776622981, 0718561744
T.P: 021-2228929, 021-5674444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.